நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI පුදියපූමි

சுற்று 05 மே 1998 பக்கம் 12 விலை ரூபா 10/= சுழற்சி 19


யுத்தத்தை-தனியார் மயத்தை-நாட்டுவளங்கள்
கொள்ளை போவதை எதிர்த்து
புதிய இடதுசாரி முன்னணியின்
தயாரிப்பு குழு நடாத்தும்
**மேதினத்தில்**
**அணிதிரள்வீர்!**
பேரணியும் பொதுக்கூட்டமும்
கொழும்பு டீ. மெல் பூங்காவில்

# அமெரிக்கா இங்கு வேண்டாம்! காட்டிக் கொடுப்பை நிறுத்துங்கள்!!

**தென் ஆசியப் பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்தி வலுப்படுத்தும் திட்டத்தில் அமெரிக்கா முழு மூச்சாக ஈடுபட்டுள்ளது. அதற்கான நுழைவாயிலாக இலங்கையை ஏற்கனவே மாற்றி உள்ளதுடன் இன்று ஒரு களமாகவும் தளமாகவும் மாற்றிக் கொள்வதற்கு விரைந்து செயல்படுகிறது. அமெரிக்காவின் இம்முயற்சிகளுக்கு அரசாங்கம் முழு ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றது. தமிழ்த் தலைவர்கள் எனப்படுவோர் சிலர் அமெரிக்காவிற்கு காட்டிக் கொடுப்பதற்கும் தயாராகி உள்ளனர். இச்செயல் இலங்கை மக்களுக்கு மட்டுமன்றி முழுத் தென்னாசிய நாடுகளின் மக்களுக்கும் இழைக்கப்படும் துரோகமாகும்.**

அமெரிக்கா தனி ஆதிக்கப் பெரு வல்லரசாகி உலகம் முழுவதையும் தனது குடைக்குக் கீழ் கொண்டு வர முயன்று நிற்கிறது. அதற்கான மூல உபாயங்களையும், தந்திரோபாயங்களையும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தி வந்துள்ளது. தென்னாசியப் பிராந்தியத்திலும் தனது நிகழ்ச்சித்திட்டத்தை விரைவு படுத்தி வந்துள்ளது. இலங்கையை தனது பிடிக்குள் வைத்திருப்பதில் கடந்த இரண்டு தசாப்தங்களில் வெற்றி பெற்றுள்ளது. பொருளாதார அரசியல் ராணுவ ஊடுருவல்களை முன்னைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போது ஆரம்பித்து வழி நடாத்தி வந்துள்ளது. இன்றைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழும் அமெரிக்கா தனது நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துச் செல்வதில் பெரும் ஊக்கத்தையும் பெற்றுள்ளது. அதற்குக் கிடைத்த மிகவும் பெறுமதி வாய்ந்த பிரச்சினைதான் தேசிய இனப் பிரச்சினையாகும். இனப்பிரச்சினையை இன்றைய யுத்தமாக்குவதிலும் அதன் மூலம் பன்முகப்பயன்களை அடைந்து கொள்வதிலும் அமெரிக்கா மறைமுகமாகவும், நேரடியாகவும் பங்காற்றி வந்தள்ளது. இலங்கையை பொருளாதார அரசியல் வழிகளில் பலவீனப்படுத்தி தனது காலடியில் வைத்திருப்பதில் அது வெற்றி பெற்றுள்ளது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது என்ற இன்றைய அரசாங்கத்தின் ஆரம்பகால நிலைப்பாட்டை முறியடித்து யுத்தத்தை தீவிரமாக்கி முன்னெடுக்க வைத்ததில் அமெரிக்காவின் பாத்திரம் வலுவானதாகும். அதன் மூலம் ஆயுத வியாபாரத்தை விரிவாக்கியதுடன் தனது நேரடி ராணுவஅரசியல் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவும் வைத்துள்ளது.

இவ்வாறு இலங்கையைத் தனது காலடியில் மண்டியிட வைத்துள்ள அமெரிக்கா அண்மைக்காலங்களில் இந்திய அரசியலில் ஏற்பட்ட தளர்வு நிலையைப் பயன்படுத்தி தென்னாசியப் பிராந்தியத்திற்குள் முழுமையான ஆதிக்கம் பெற்றுவிட அவசரம் காட்டி நிற்கின்றது. அண்மையில் அமெரிக்காவின் ஐ. நா. களுக்கான பிரதிநிதி பில். ரிச்சர்ட்சனும், தென்னாசிய விவகாரங்களுக்கான திணைக்களத்தின் உதவி அமைச்சர் இன்டர் பேர்த்தும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர். பில் ரிச்சர்ட்சன் ஒரு நாள் மட்டுமே இலங்கையில் தங்கியிருந்த போதிலும் ஜனாதிபதியைச் சந்தித்து தனியே பேச்சுவார்த்தை நடத்தினார். ஜனாதிபதி கிளிங்டனின் பிரத்தியேக கடிதத்தையும் கையளித்தார். அத்துடன் அமெரிக்க தூதுவராலயத்தில் முக்கிய விருந்து பசாரத்தை நடாத்தினார். அந்த விருந்திற்கு தமிழ்த் தலைவர்கள் எனப்படும் சிலரை அழைத்திருந்தார். விருந்து ஆரம்பிப்பதற்கு முன்பு திடீரென தமிழ்த் தலைவர்கள் சிலரைத் தனியே அழைத்து அரைமணி நேரப் பேச்சுவார்த்தையும் நடாத்தினார். இச் சந்திப்பை தொண்டமான் ஊடாகவே ஏற்பாடு செய்யப்பட்டதாக அறிய முடிகிறது. மேற்படி சந்திப்பில் பில் ரிச்சர்ட்சன் நேரடியாகவே எஸ். தொண்டமான், கூட்டணிச் செயலாளர் இரா. சம்பந்தன், டக்ளஸ் தேவானந்தா ஆகியோரை விழித்து அமெரிக்கா மத்தியஸ்தம் செய்வதை விரும்புகிறீர்களா என கேட்டுள்ளார். இரா. சம்பந்தனும், எஸ். தொண்டமானும் தமது ஆதரவைத் தெரிவித்தனர். இதன் மூலம் தமிழ்த் தலைவர்கள் தமது வழமையான ஏகாதிபத்திய விசுவாசத்தை வெளிப்படுத்தி அமெரிக்கா தலையிட வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டனர். இவர்களது நிலைப்பாடு அப்பட்டமான ஒரு காட்டிக் கொடுப்பே அன்றி வேறு எதுவுமில்லை. இன்றைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அமெரிக்காவின் காலடிக்கு இழுத்துச் சென்றதில் அமைச்சர் கதிர்காமர், கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம் முக்கிய பாத்திரத்தை வகித்து வந்துள்ளனர். அவர்களது வரிசையில் இரா. சம்பந்தன், எஸ். தொண்டமான் ஆகியோர் இணைந்துள்ளனர். மேலும் யார் யார் அதற்குள் விழப் போகிறார்களோ என்பதை சிறிது பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியுள்ளது.

அமெரிக்கா எவ்வாறு இலங்கையின் இனப்பிரச்சினைெயில் மத்தியஸ்தம் செய்ய இயலும். அது ஏற்கனவே தன்னை ஒரு பக்கத்தில் யுத்தத்தின் பக்கத்தில் நிறுத்தியுள்ளது. பேச்சுவார்த்தைக்குரிய மறுதரப்பான புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பு எனக்கூறிப் பிரகடனம் செய்துள்ளது. அப்படி இருக்க யாருக்கு மத்தியஸ்தம் செய்யப் போகிறது. உண்மையாகவே இனப்பிரச்சினை தீர்வதை அமெரிக்கா விரும்புகிறதா? அல்லது இந்திய பிராந்திய வல்லரசை வலுவிழக்க செய்து தனது மேலாதிக்கப் பிடியை வலுப்படுத்த முற்படுகிறதா? அமெரிக்காவை வரவேற்போரது உள்நோக்கம் யாது? இவையாவும் முக்கிய கேள்விகளாகும்.

இத்தகைய சூழலில் இலங்கை அரசாங்கம் அமெரிக்கா விரித்துள்ள வலையில் வீழ்ந்து விட்ட நிலையே காணப்படுகிறது. அத்தகைய வீழ்ச்சி நாட்டையும், மக்களையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு முற்று முழுதாக தாரைவார்ப்பதிலேயே சென்று முடிவடையப் போகிறது. பேச்சுவார்த்தை மூலம் நியாயமான அரசியல் தீர்வு காணும் முயற்சியை அமெரிக்கா மூலம் அரசாங்கம்



முன்னெடுக்க முடிவு செய்தால் அதைவிட முட்டாள் தனம் வேறு எதுவும் இருக்க முடியாது. உலகில் அமெரிக்கா தலையிட்ட எந்தவொரு சமாதான முயற்சியும் வெற்றி பெறாமை மட்டுமன்றி புதிய புதிய பிரச்சினைகளையே தோற்றுவித்துள்ளமையே வரலாறாகும்.

எனவே அமெரிக்கா இங்கு வேண்டாம். அமெரிக்காவிற்கு காட்டி கொடுப்புச் செய்யும் வேலைகளைத் தமிழ்த் தலைவர்கள் நிறுத்த வேண்டும். இவற்றுக்குப் பதிலாக அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை அரசாங்கம் தாமதமின்றி விடுதலைப் புலிகயுடன் ஆரம்பிக்க வேண்டும். மூன்றாவது மத்தியஸ்தம் தேவைப்படுமிடத்து உள்நோக்கமற்ற மூன்றாம் உலக நாடுகள் சிலவற்றின் ஒத்துளைப்போடு மேற்கொள்ளல் வேண்டும். அதுவே நேர்மையான வழியில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண உதவக்கூடியதாகும். அமெரிக்காவின் தலையீட்டை எதிர்த்து மக்கள் பலமுனை இயக்கங்களை, முன்னெடுக்க வேண்டும். அதுவேநாட்டிற்கும் அனைத்து மக்களின் எதிர்காலத்திற்கும் அவசியமானதாகும். ✪

# தொண்டமான் மிரட்டுகிறார்!

இ.தொ.காவின் மாதாந்த சந்தாப் பணம் 33 ரூபாவாக அதிகரிக்கப் பட்டுள்ளது. அதனை ஏற்றுக் கொள்ளாத தோட்டக்கமிட்டித் தலைவர்கள் பதவி விலக்கப் படுவார்கள். உயர்த்தப்பட்ட சந்தாவை கொடுக்க முடியாதவர்கள் இ.தொ.கா. விலிருந்து விலகிக் கொள்ளலாம் என்றும் இ.தொ.கா. தலைவர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

105 ரூபா இல்லை 101 ரூபாவைதான் பெற்றுக் கொடுக்க முடியும். அதனை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். அதைப்பற்றி வேறொன்றும் கேட்கக் கூடாது என்று பீ. பீ. சிக்கு அளித்த பேட்டியில் கூறினார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒன்றும் தெரியாது. இ.தொ.கா. சொன்னால் ஏற்றுக்கொள்ள வேண்டும். தொழிலாளர்களுக்கு தேவை எது தேவையில்லாதது எது என்று இ.தொ.காவிற்குத்தான் தெரியும்

இ.தொ.காவிற்கு முடியாதென்றால் வேறு யாருக்கும் எதனையும் செய்ய முடியாது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



வேலை நிறுத்தத்தை சரியான தருணத்தில் நிறுத்தியிருக்கா விட்டால் தோட்டத் தொழிலாளர்கள் பேரழிவை சந்தித்திருப்பார்கள் சரியான நேரத்தில் வேலை நிறுத்தத்தை கைவிட்டு நாம் தோட்டத் தொழிலாளர்களுக்கு 101 சம்பளத்தை பெற்றுக்கொடுத்து அவர்களை காப்பாற்றியுள்ளோம் என்று 105 சம்பளம் பெற முடியாமைக்கு ஒரு புதிய நியாயம் கற்பித்துள்ளார்.

இ.தொ.கா சொல்வதை கேட்டு இ.தொ.காவில் இருக்க முடியா விட்டால் எல்லோரும் இ.தொ.கா விலிருந்து விலகிக் கொள்ளுங்கள். இ.தொ.காவை கலைத்து விடலாம். தோட்டத் தொழிலாளர்களுக்காகவே இ.தொ.கா. வை பல சவால்களுக்கு மத்தியில் கட்டிக்காத்துக் கொண்டிருக்கிறேன். இ.தொ.கா அவர்களுக்கு தேவையில்லையென்றால் அதனை கலைத்துவிட நான் தயார் என்று இன்னொரு சந்தர்ப்பத்தில் தெரிவித்துள்ளார்.

இ.தொ.கா. ஒவ்வொரு உரிமையையும் போராடித்தான் பெற்றுக் கொடுத்தது. தோட்டத் தொழிலாளர்கள் எதுவுமே சும்மா கிடைக்கவில்லை. இ.தொ.கா. வை குறை கூறுபவர்கள் முடிந்தால் செய்து காட்டட்டும். இவ்வாறு கொட்டகலையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

---தொடர்ச்சி 12ம் பக்கம்

நன்றி - நூலகத்திட்டம்



# மலையக மக்களுக்கு இரட்டை ஆபத்து

மலையகத்திலிருந்து மலையகத்தவர் பௌதிக ரீதியாக வெளியேறுவது என்றுமில்லலாத வாறு அதிகரித்து வருகிறது. முன்னர் படித்த இளைஞர்கள் தொழில் வாய்ப்பை தேடி கொழும்புக்கு இடம்பெயர்ந்து ள்ளனர் அவ்வாறு இடம் பெயர்ந்தால் மலையக சமுகத்தின் வளர்ச்சிக்காக அவர்களால் முழுமையாக பங்கை செலுத்த முடியவில்லை. மறுபக்கம் மலையக சமுகம் அவர்களின் சேவையை முழுமையாக பெற முடியவில்லை.

அவ்வாறு வெளியேறிய பலர் மலையக சமூகத்துடன் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள முடியாது அந்நியப்பட்டனர். மலையக சமூகத்துடன் அடையாளப்படுத்திக் கொள்ள விரும்புவர்களின் பூரணமான பங்களிப்பும் மலையக சமூகத்திற்கு கிடைக்கவில்லை.

மலையகத்திலிருந்து வெளியேறிவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த காலத்திலும் கூட அவர்களையும் மலையகத்தினராக அடையாளம் காணும் அரசியல் ரீதியாக கருத்தியல் களை வளர்ப்பதில் கவனம் செலுத்தப்பட்டது.

ஆனால் இன்றைய நிலையில் மலையகத்திலிருந்து வெளியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. படித்த இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு மலையகத்தில் இல்லாததால் மட்டுமன்றி படிக்காத தொழிலாளர்களுக்கான வேலை வாய்ப்பும் குறைந்திருப்பதால் தோட்டத் தொழிலாளர்களின் வெளியேற்றமும் அதிகரித்துள்ளது. அதாவது தோட்டங்களில் வேலைவாய்ப்பு மறுக்கப்படுவதில் வருமானம் குறைவாக இருப்பதும் தோட்டத் தொழிலாளர்களின் வெளியேற்றத்துக்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன.

மலையக பெண்களின் வெளியேற்றம் அதிகரித்திருப் பதனால் ஏற்படுகின்ற பாதிப்புகள் குறித்து தினசரி பத்திரிகைகளில் செய்திகளும், கட்டுரைகயும் வெளிவருகின்றன. அந்தளவு மலையகப் பெண்கள் மலையகதத்தில் இருந்து வெளியேறுவது முக்கியதொரு பிரச்சனையாகியுள்ளது.

மலையகத்திலிருந்து மலையகத்தவர் வெளியேறுவதால் மலையக தேசிய இனம் பலவீனப் படுத்தப்படுவதுடன் தேசிய இன உணர்வுக்கான வளர்ச்சியும் தடுக்கப்படுகிறது. அதாவது வெளியேற்றத்தால் நடைமுறை ரீதியாக இருக்கும் நிரந்தர பிரதேசத்தை மலையக மக்கள் கைவிட நேரிடுகிறது. வெளியேறி கொழும்பு போன்ற இடங்களில் நிரந்தர வசிப்பிடத்தை ஏற்படுத்திக் கொள்வது அவ்வளவு இலகுவான விடயமும் இல்லை. இதனால் பேரினவாதிகள் எண்ணம் நிறைவேறுகிறது. மலையக மக்கள் ஓரிடத்தில் செறிவாக வாழ்ந்தால் அவர்களின் இனத்துவம் வளர்ச்சியடையும் என்பதால் ஓரிடத்தில் செறிவாக வாழும் உரிமையை பேரின வாதிகள் நிராகரித்திருக்கின்றனர். மலையக மக்களை செறிவாக ஓரிடத்தில் வாழவிடாது பலவழிகளிலும் தடுக்க வேண்டும் என்பது அவர்களின் அடிப்படை விருப்பமாகும்.

மலையகத்தில் வேலை வாய்ப்பின்மையால் அண்மைக் காலமாக அதிகமானோர் வெளியேறுவதால் பேரினவாதிகளின் கனவு நிறைவேறுகிறது.

அத்துடன் ஓரிடத்தில் கூட்டாக, செறிவாக ஸ்தாபனப்படுத்தப்பட்ட நிலையில் வாழும் தோட்டத் தொழிலாளர்களை சிதறடிக்க வேண்டும் என்பது உலக வங்கி உட்பட பல முதலாளித்துவ வாதிகளின் விருப்பமாகும். தோட்டத் தொழிலாளர் வர்க்கத்தை பலவீனப் படுத்துவதும் அவர்களுக்காக வேலைவாய்ப்பு உட்பட பலவிதமான உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதும் அவர்களின் நோக்கமாகும். அந்த நோக்கமும் வெளியேற்றத்தினால் நிறைவேகிறது.

எனவே வெளியேறுபவர்களை தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க முடியுமா என்பது முதலில் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். மலையகத்தில் வேலைவாய்ப்பு உட்பட எல்லா பொருளாதார அடிப்படைகளையும் உடனடியாக ஏற்படுத்த முடியாது.

ஆனால் வெளியேறுபவர்கள் மீண்டும் மலையகத்திற்கு திரும்பி வந்து மலையகத்தை அவர்களின் தாயகமாக ஏற்றுக்கொண்டு வாழ்வதற்கான போராட்டங்களை செய்வதும் அப்போராட்டங்களில் வெளியேறி உள்ளவர்களை இணைத்துக் கொள்வதும் அவசியமாகும். அதாவது தொழில் காரணமாக வெளியேறியவர்களாக கொண்டு அவர்களின் நிரந்தர வசிப்பிடமாக மலையகத்தை தொடர்ந்து கொண்டிருக்கும் வேலைத்திட்டங்களை வகுக்க வேண்டும்.

வெளியேற்றம் அதிகரிப்பதால் மலையகத்தில் எஞ்சி இருப்பவர்கள் இனரீதியாகவும், வர்க்க ரீதியாகவும் ஒடுக்கு முறைக்கு இலகுவாக இலக்காவது மட்டுமன்றி, வெளியேறுபவர்கள் பலவிதமான அடக்கு முறைகளுக்கும் உட்பட்டு சமூகப் பாதுகாப்பற்றவர்களாக நேரிடும் என்பதை விளக்கி வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

இன்றைய நிலையில் வெளியேறுபவர்களை மலையகத்திலிருந்து அந்நியப் படுத்தும் கருத்துக் களையும், நடைமுறைகளையும் முன்னுக்கு தள்ளாது தடுக்க வேண்டும். அதனை தடுக்காவிடின் பேரினவாதிகளினதும், முதலாளித்துவத்திற்கும் துணை போவதாகவே இருக்கும்.

எனவே வெளியேற்றத்தினால் மலையக மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்க வேண்டுமானால் வெளியேறியுள்ளவர்களையும் மலையகத் தேசியதினம் என்ற பொது அடையாளத்துக்குள் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## நாலு நடக்கும் உலகிலே

### யூ. என். பியும் எதிர்க்கும் ஒரு பிற்போக்கு நடவடிக்கை

தேசிய மயமாக்கல் மூலம் சோஷலிஸத்தை வரவழைக்கலாம் என்று நம்பியவர்கள் இருந்தார்கள். அடிப்படையான அரசியல் மாற்றமின்றித் தேசிய மயமாக்கல் பயனற்றது. இது மாக்ஸிய நிலைப்பாடு. எனினும் அந்நிய மூலதனத்தின் ஆதிக்கத்தை முறியடிக்கவும் பொதுமக்களது நலன்கட்குப் பாதகமான முறையிற் செயற்படும் தனியார் நிறுவனங்களைக் கட்டுப் படுத்தவும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் முற்போக்கான வையே இந்த வகையில் ஸ்ரீ. ல. சு. கட்சி அரசு 1956 முதல் 1964 வரை எடுத்த நடவடிக்கைகள் பல மிகவும் வரவேற்கப்பட்டன. 1970–77 கால கட்டத்தில் ஐ. மு. அரசு எடுத்த சில நடவடிக்கைகளும் வரவேற்கத் தக்கனவாக இருந்தன. 1977ன் பின்பு யூ. என். பி. ஆட்சி பல அரசாங்க வர்த்தக நிறுவனங்களையும் சேவைகளையும் தனியாருக்கு மட்டுமன்றி அயல்நாட்டு கம்பனிகட்கும் தாரை வார்த்துக் கொடுத்தது. மக்கள் முன்னணி ஆட்சிக்கு வந்தபோது இந்தப்போக்கு தடுக்கப்படும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அரசாங்கமோ பழைய ஆட்சியாளர்களது பாதையிலேயே போகிறது. அண்மையில் எயார்லங்கா விமானசேவையின் 40% பங்கை எமிறேற்ஸ் கம்பனிக்கு விற்கும் முடிவை யூ. என். பி. கண்டிக்கும் அளவுக்கு இன்றைய அரசு முன்னேறி விட்டது.

யூ. என். பியின் ஆட்சேபனைக்கான காரணம் அது ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தியாக மாறிவிட்டது என்று யாரும் எண்ணுவதற்கு இடமில்லை. நாட்டை ஏகாதிபத்தியத்திற்கு மீள அடிமையாக்கும் பூரண வலிமையும் தமதே என்ற எண்ணத்தாலேயே யூ. என். பி. இன்றைய ஆட்சியைக் கண்டிக்கிறத. அரசில் அங்கம் வகிக்கும் சமசமாஜிகளும் கம்யூனிஸ்ட் கட்சியும் என்ன செய்யப் போகின்றன?

### தமிழ்த் தேசியவாதத் திமிர்

ஈழ விடுதலை என்று பேசிப் பேரினவாத அரசாங்கங்களது தயவில் பிழைப்பு நடத்தும் இயக்கங்களால் இலங்கையின் தேசியப் பிரச்சினையைத் தமிழ்–சிங்களப் பிரச்சினை என்ற மட்டத்திற்கு மேலே உயர்த்திப் பார்க்க மனமில்லை.

முஸ்லிம்களும் மலையகத் தமிழரும் தனித்துவமான இனப்பிரிவினர் என்பதையோ அவர்கள் தமது தனித்துவத்தை தெளிவாகவே வலியுறுத்தி வருகின்றனர் என்பதையோ இந்த அரசியல் உதிரிகளால் ஏற்க முடியவில்லை. ஈழத்தமிழரின் தேசிய இன அடையாளத்தைச் சிங்கள மக்கள் ஏற்க வேண்டும் என்று வாதிடும் இவர்கள் மலையகத்தமிழ், முஸ்லிம் மக்களது தனித்துவத்தை வட–கிழக்குத் தமிழர் ஏற்க வேண்டிய நியாயத்தை மறுப்பது ஒன்றும் புதியதல்ல.

பொன்னம்பலம் இராமநாதன், ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஆகியோர் வளர்த்தெடுத்த பிற்போக்கு சிந்தனை மரபின் உண்மையான வாரிசுகளாகவே இந்தத் தமிழ்த் தேசியவாதக் கும்பல்கள் இருக்கிறார்கள். இளைஞர்களை வென்றெடுப்பதற்காக இவர்கள் பேசிய 'முற்போக்கு' அரசியல் வேஷம் எப்போதோ கலைந்து போய்விட்ட ஒன்றுதானே.

## தோழர் நம்பூதி......

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத்தில் இருக்கும் வெகுஜன அரசியலை துறந்து கேடான குறுகிய குழுவாதிகளாக என்ற நிலைக்கு கம்யூனிஸ்ட்டுகள் தள்ளப்படுகின்றனர் என்று கூறிய அவர் அளவுக்கு அதிகமாக பாராளுமன்றத்தில் நம்பிக்கை வைத்தால் பாராளுமன்ற சந்தர்ப்ப வாதத்தால் கம்யூனிஸ்ட்டுகள் இலகுவாக உள்வாங்கப்பட்டு அழிய வேண்டிவரும் என்பதை எச்சரிக்கவும் தவறவில்லை. அவர் இரண்டு தடவைகளே முதலமைச்சராக இருந்தார். அக்காலகட்டத்தில் கேரளமாநிலத்தில் சோஷலிஸ நடைமுறைகளை அறிமுகப்படுத்த பாடுபட்டார். சில விடயங்களில் வெற்றி கண்டார்.

பாராளுமன்ற அரசியலின் பிழையான பாதிப்புகளால் மக்கள் இயக்கங்களை முன்னெடுப்பதிலும், வர்க்கப் போராட்டத்தில் அக்கறை குறைந்து வருவது பற்றி அவரது இறுதி நாட்களில் கவலைப்பட்டதாக இ. க. கட்சி (மார்க்சிஸ்ட்டு)யின் அரசியல் குழு உறுப்பினர்களில் ஒருவரான பிரகாஷ் கரட் தெரிவித்துள்ளார்.

எமது நாட்டின் பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலில் மூழ்கிவிட்ட இடது சாரிகளோ பாராளுமன்றத்திற்கு வெளியே பார்வையை செலுத்துபவர்களாகக் கூட இல்லை என்பது கவலைக்குரியதே.

அவர் காலனித்துவ ஆட்சிக்கு எதிரான போராட்டங்களில் முன்னணியில் கலந்து கொண்டார். அது மட்டுமன்றி தான் பிறந்த சமூகமான நம்பூதிரி நிலச்சுவந்தர் சமூகத்தின் கொடுமைகளுக்கு எதிராக போராட்டங்களை செய்து, அச்சமூக பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகவும், சாதியத்திற்கு எதிராகவும் பாடசாலை காலங்களிலே கிளர்ந்தெழுந்ததன் மூலம் அவரின் புரட்சிகர உணர்வுகளை வெளிக்காட்டி பொதுவாழ்க்கைக்கு பிரவேசித்தார்.

அவர் 1939இல் சென்னை மாநில சட்டசபைக்கு தெரிவு செய்யப்பட்டார். கேரள காங்கிரசில் இருந்த அவர் காங்கிரஸ் கட்சி கேரள நிலச்சுவந்தர்களுக்கு சாதகமான நிலைப்பாட்டை எடுத்ததனால் அதிலிருந்து விலகி காங்கிரஸ் சோஷலிஸ கட்சியில் சேர்ந்தர். அதுவும் சாதியப் சமரசத்தையும், வர்க்க சமரசத்தையும் செய்தபடியால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சிவர்க்க சமரம் செய்வதாக கூறியே இ. க. கட்சி (மாக்சிஸ்ட்) அமைக்கப்பட்டது அதேவேளை ஏனைய கம்யூனிஸ்ட் கட்சிகளை அதிதீவிரவாத கட்சிகளாக அவர் அடையாளம் கண்டார்.

**அவரின் கட்சி வாழ்க்கையிலும் கூட இலங்கை இடதுசாரிகள் மாறுபடுகின்றனர்**

அவரின் கட்சி வாழ்க்கையிலும் கூட இலங்கை இடதுசாரிகள் மாறுபடுகின்றனர். இடதுசார் கட்சிகளிலிருந்து பிற்போக்கு கட்சிகளிலேயே சேர்ந்துள்ளனர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்வதற்கு முன்பும் சிறையில் இருந்தார் 1940 இல் கம்யூனிஸ்ட் கட்சியை பிரிட்டிஷார் தடைசெய்த பிறகு 1947 வரை தலைமறைவாக இருந்தார் 1947ல் தலைமறைவிலிருந்து வெளியில் வந்தப்பிறகு ஜனவரி மாதம் கைது செய்யப்பட்டார் அம்மை நோயினால் பீடிக்கப்பட்டிருந்த வேளையில் அவரது மகன் பிறந்து ஒரு நாளே கழிந்திருந்தது. (அவருக்கு இரண்டு மகள்மாரும் ஒரு மகனும் இருக்கின்றனர்.)

1947இல் தலைமறைவு வாழ்க்கையிலிருந்து வெளியே வந்தவுடன் அவருடைய பரம்பரை சொத்தை விற்று பணத்தை கட்சிக்கே கொடுத்தார். இறுதிவரை வாடகைக்கு ஒரு தொடர்மாடி வீட்டிலேயே வசித்து வந்தார். அவர் பத்திரிகைகளில் எழுதியவற்றுக்கான பணத்தைக்கூட கட்சிக்கே கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார்.

அவர் இறுதிவரை கட்சி என்ற குடும்பத்தின் ஊழியராகவே இருந்து இறுதி நிமிடம் வரை உழைத்தார். அவர் இறுதி நாளன்று மதசார்பின்மைக்காக தொடர்ந்து போராடுவதன் அவசியம் பற்றி ஒரு கட்டுரையையும், கட்சியின் கேரள நாளிதளான 'தேசாபிமானிக்கு' ஆண்டு நிறைவுக்கான விசேட ஆசிரியர் தலையங்கத்தை சொல்ல சொல்ல எழுதுவித்தார். சுகவீனமான நிலையில் மருந்து சாப்பிட்ட வண்ணம் கேரளாவிலுள்ள கட்சி காரியாலயத்தில் இருந்த வண்ணம் எழுதுவித்தார். எழுதி முடிந்தவுடன் மிகவும் மோசமாக சுகவீன்மடைந்தார்.

சர்வதேச ரீதியாக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான புதிய பார்வைகளையும் வெளியிட்டார். ஏகாதிபத்தியத்துக்கு எதிரான வேலைத்திட்டம் மூன்றாம் உலக யுத்தமொன்று ஏற்படுவதை தவிர்க்கும் எண்ணம் கொண்டுள்ள எல்லா சக்திகளையும் ஒன்றிணைக்க வேண்டும் என்ற கருத்தை கொண்டிருந்தார்.

இப்படியான ஆளுமையை கொண்ட மார்க்சிஸ்ட் தோழர் நம்பூதிரிபாத் பின் நவீனத்துவவாதிகள் என்ற சில்லறைகளாலும், அருந்ததிரோய் போன்ற உதிரிகளாலும் தாக்கப்படுவதற்கு மாக்சிய விரோதமன்றி வேறு காரணம் ஏதும் இருக்க முடியாதல்லவா?

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

PUTHIYA POOMI පුදියපූමි

S-47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11, இலங்கை. தொ.பேசி. 435117, 335844


## மேதினம் வாழ்க

'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள். உங்கள் அடிமைச் சங்கிலிகளைக் தவிர இழப்பதற்கு வேறு எதுவும் இல்லை. ஆனால் வெல்வதற்கோர் உலகம் உள்ளது.' சரியாக 150 ஆண்டுகளுக்கு முன்பு 1948ம் ஆண்டு பெப்ரவரி 24ம் திகதி மார்க்சும் ஏங்கல்சும் வெளியிட்ட கம்யூனிஸ்ட் பிரகடனத்தில் மேற்படி அறைகூவலை விடுத்திருந்தனர்.

மேற்படி கம்யூனிஸ்ட் பிரகடனம் முதலாளித்துவ நாடுகள் ஒவ்வொன்றிலும் எதிரொலித்துக் கொண்டது. கொடூரச் சுரண்டலையும் கொடிய அடக்கு முறையையும் தொழிலாளர்கள் மீது நடாத்தி வந்த முதலாளித்துவத்தை எதிர்த்து தொழிலாளர்கள் புரட்சிகரப் போராட்டங்களில் இறங்க ஆரம்பித்தனர். அத்தகைய தொழிலாளர் போராட்டங்களுக்கு மார்க்சும் ஏங்கல்சும் தலைமை தாங்கிய முதலாவது, இரண்டாவது அகிலம் வழிகாட்டி நின்றது. ஒன்றன்பின் ஒன்றான புரட்சிப் பேரெழுச்சிகள் தொழிலாளி வர்க்கப் போர் குணத்துடன் முன் சென்றன.

உலகின் கவனத்தை ஈர்த்த மாபெரும் பாரிஸ் கம்யூன் எழுச்சி 1871ல் இடம் பெற்றது. பிரான்சின் தொழிலாளி வர்க்கம் தனது பலத்தால் முதலாளி வர்க்கத்தைப் புறமுதுகிட வைத்து பாரிஸ் கம்யூன் ஆட்சியை தனது தலைமையில் எடுத்துக் கொண்டது. எழுபத்திரண்டு நாட்கள் மட்டுமே அவ் ஆட்சி நிலைத்திருக்க முடிந்தது. முதலாளித்துவ சக்திகள் அவ்ஆட்சியை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து விட்டனர். இருப்பினும் தொழிலாளி வர்க்கப் புரட்சிகள் வெடித்தெழப் போகின்றன என்ற புரட்சிகரச் செய்தியை முதலாளித்துவ உலகிற்கு பாரிஸ் கம்யூன் கட்டியம் கூறிச் சென்றது.

அதனைத் தொடர்ந்தே அமெரிக்கத் தொழிலாளி வர்க்கம் பதினைந்து, இருபது மணிநேர வேலை வாங்கிய அமெரிக்க முதலாளித்துவத்திடம் எட்டு மணி நேர வேலைக்கான போராட்டத்தைத் தொடக்கியது. அக்கோரிக்கையை முறியடிக்க அமெரிக்க முதலாளித்துவம் கொடிய அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டது. ஆனால் வீறுபெற்று எழுந்த அமெரிக்கத் தொழிலாளர்கள் வருடா வருடம் தமது கோரிக்கைக்கான போராட்டங்களை வலுப்படுத்தி விரிவாக்கி வந்தனர். 1886இல் சிக்காகோ நகரில் இப் போராட்டத்தில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பூகம்பம் என வெடித்துக் கிளம்பினர். இரத்த வெள்ளத்தில் எட்டுமணி நேரவேலைக் கோரிக்கையை அமெரிக்க முதலாளித்துவம் மூழ்கடிக்க முனைந்தது. தொழிலாளர்களும் அவர்களது தலைவர்களும் சுட்டும் தூக்கிலிடப்பட்டும் கொல்லப் பட்டனர். ஆனால் அவர்களின் தியாகம் வீண்போகவில்லை. எட்டுமணி நேர வேலைக்கான போராட்டம் உலகம் பூராவும் விரிவு படுத்தப்பட்டது. எட்டுமணி நேர வேலைக்கான கோரிக்கையை அரசியல் கோரிக்கையாக முன்வைத்து உலகத் தொழிலாளர்கள் மே முதலாம் திகதியை போராட்ட நாளாக முன்னெடுக்க வேண்டும் என 1889ம் ஆண்டில் இரண்டாவது அகிலம் தீர்மானம் செய்து கொண்டது.

எட்டுமணி நேர வேலைக்கான போராட்டத்தினமாக மேதினம் பிரகடனம் செய்யப்பட்ட போதிலும் ஏனைய அரசியல் கோரிக்கைகளுக்கான போராட்டத்தினமாகவும் மே தினம் விரிவு பெற்றுக் கொண்டது. 1893ல் இரண்டாவது அகிலத்தின் மாநாடு ஜுரிச்சில் நடைபெற்றது. அதில் ஏங்கல்ஸ் கலந்து கொண்டார். மே முதல் நாள் தீர்மானம் அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட போது கீழ் வருமாறு எழுதப்பட்டது. 'உழைக்கும் வர்க்கத்தின் பிரதான விருப்பம் சமூக மாற்றத்தின் மூலம் வர்க்கப் பாகுபாடுகளை அழித்தொழிப்பது. மற்றும் உலகம் முழுவதிலும் எல்லா மக்களுக்கும் அமைதியை ஏற்படுத்துவதாகும். மேதின ஆர்ப்பாட்டங்கள் எட்டுமணி நேர வேலை நாளுக்காக மட்டுமல்லாமல் மேற்கூறிய விஷயங்களுக்கும் பயன்பட வேண்டும்.' எனக் கூறியது.

மேதினம் முதலாளித்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான புரட்சிகரத் திருநாளேயாகும். அதனை பல முனைகளிலும் திசை திருப்ப முயன்றாலும் மாக்சிசம் உள்ளவரை தொழிலாளி வர்க்கமும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களும் உள்ளவரை அதன் புரட்சிகர உயிரோட்டத்தை எவராலும் முறியடிக்க முடியாது. மே தினம் உலகத் தொழிலாளி வர்க்கத்திற்கு வழங்கிய உயர்ந்த புரட்சிகர இலட்சியத்தை நாம் தொடர்ந்து பேணிப் பாதுகாத்தது முன்னெடுத்துச் செல்வோம் என அதன் 112வது ஆண்டில் திடசங்கற்பம் செய்வோம்.

வாழ்க புரட்சிகர மேதினம்!
வளர்க அதன் இலட்சியங்கள்!!

—ஆசிரியர் குழு—

## அரசியல் அற்ற தொழிற் சங்க இயக்கமும் சந்தா உயர்த்தும் நோக்கமும்

— ம. அழகேசன் —

1991 ஆம் ஆண்டில் பெருந் தோட்டங்களை தனியார் கம்பனிகள் பொறுப்பேற்ற பிறகு தொழிலாளர்கள் அவர்களின் உரிமைகளைப் படிப்படியாக இழந்து வருகின்றனர். குறிப்பாக எட்டு மணித்தியாலங்களுக்கு மேலதிக வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுவதுடன் வேலை நிபந்தனைகளும் கடுமையாக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்கள் பல தியாகங்களை செய்து போராடிப் பெற்ற உரிமைகளைக்கூட, மிகவும் இலகுவாகவே தனியார் கம்பெனிகள் தட்டிக் கழித்துவிடுகின்றன. தொழிலாளர்களின் சார்பிலான தொழிற்சங்கங்களின் நிலைப்பாட்டையும் மதிப்பதாக இல்லை.

இவ்வாறான பின்னணியில் தொழிற் சங்கங்கள் மீது தொழிலாளர்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர். தொழிற் சங்க அங்கத்துவங்களையும் கைவிட்டு தொழிற்சங்கங்களுக்கு செலுத்தும் சந்தாப்பணத்தையும் நிறுத்திவருகின்றனர். இந்நிலமை 1996 ஆம் ஆண்டு 8 ரூபா சம்பள உயர்வுக்காக நடத்தப்பட்ட போராட்டம் காட்டிக்கொடுக்கப்பட்ட பின்னரும், 1998ம் ஆண்டு நாள் சம்பளமாக 105 ரூபாவை கேட்டு நடத்தப்பட்ட போராட்டத்துக்கும் துரோக மிழைக்கப்பட்ட பின்னர் மேலும் மோசமடைந்துள்ளது.

105 ரூபா சம்பளத்தைப் பெற தொழிலாளர்கள் போராட்டத்தில் திடமாக ஈடுபட்ட போதிலும் அவர்கள் தொழிற்சங்கங்களின் தகுதியீனத்தால் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. அதனால் பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்கள் தொழிற் சங்க சந்தாப்பணத்தை நிறுத்தியுள்ளதாக தெரிகிறது.

எனினும் இ.தொ.கா. அதனது மாதாந்த சந்தாவை 33 ரூபாவாக உயர்த்த முடிவெடுத்துள்ளது. ரூபா 101 சம்பளத்தை பெற்றுக்கொடுத்து விட்டுத்தான் சந்தாவை உயர்த்தி கேட்பதாக இ.தொ.கா. தலைவர் தொண்டமான் கூறுகிறார். இந்த சந்தா அதிகரிப்பை தொண்டமான் நியாயப்படுத்தினாலும் இ.தொ.கா. தலைமைக்கும் தொழிலாளர்களுக்குமிடையில் இருக்கும் தோட்டக் கமிட்டித் தலைவர்கள் நியாயப் படுத்த முடியாது திண்டாடு கிறார்கள். சம்பள உயர்வு போராட்டங்களை வெற்றி பெறச் செய்ய திராணியுடன் போராடத நிலையில் சந்தாவை அதிகரித்து தரும்படி தொழிலாளர்களிடம் எந்த முகத்துடன் சென்று கேட்பது என்று தோட்டக் கமிட்டித் தலைவர்கள் தொண்டமானிடம் தெரிவித்துள்ளனர்.

அதனால் கோபமடைந்த தொண்டமான் தான் சொன்னதை தோட்டக்கமிட்டித் தலைவர்கள் செய்ய வேண்டும் என்றும் செய்யத் தவறினால் இ.தொ.கா. விலிருந்து விலக்கப்படுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். இதனால் தொழிலாளர்கள் மேலும் வெறுப்பும், விரக்தியும் அடைந்துள்ளனர்.

அதேவேளை இ.தொ.கா. சந்தாவை அதிகரித்து விட்டால் தாங்களும் சந்தாவை அதிகரிக்கலாம் என்று ஏனை தொழிற்சங்கங்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

தொழிலாளர்களின் எண்ணிக்கையும், தொழிலாளர்களின் சந்தாவுமே தொழிற்சங்கங்களின் இருப்புக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன. அதனைக் கருத்தில் கொண்டே தொழிற் சங்கங்கள் அவற்றின் ஒவ்வொரு நகர்வையும் பற்றி தீர்மானிக்கின்றன. இது வியாபார நோக்கம் கொண்ட முதலாளித்துவ தொழிற்சங்க முறையாகும்.

அந்த விதத்திலேயே தொண்டமானும் அவரின் தொழிற்சங்க சந்தாப்பணத்தை அதிகரிக்க தீர்மானித்துள்ளார். எப்போதும் தங்களது இருப்புக்கு பாதகம் ஏற்படாத வகையில் தொழிற்சங்கப் போராட்டங்களை அவர் முன்னெடுத்திருக்கிறார் என்பது மலையக மக்களின் கடந்தகால இருண்ட வரலாறாகும்.

தற்போது நிலையில் 33 ரூபாவை சந்தாவாக செலுத்தக்கூடிய மனநிலையில் தொழிலாளாகள் இல்லை. பல நாட்சம்பளங்களை தியாகம் செய்து போராட்டங்களை செய்த தொழிலாளர்ளளுக்குஒரு மாதத்திற்கு 33 ரூபா என்பது பெரியதாக இருக்க முடியாது. ஆனால் அதனை கொடுப்பதற்கு தார்மீக நியாயம் இருக்க வேண்டும். அதாவது சந்தா அதிகரிப்பை கேட்கும் தொழிற்சங்கமான இ.தொ.கா. எவ்வளவு தூரத்திற்கு தொழிலாளர்களுக்காக நேர்மையாகவும், உண்மையாகவும் நடந்து கொண்டது என்பதும் தொழிலாளர் நலனை உயர்த்திப்பிடிக்கும் திராணி கொண்டது என்பதும் முக்கியமான விடயங்களாகும்.

இந்த முக்கிய விடயங்களில் இ.தொ.கா. மட்டுமல்ல மலையகத்திலுள்ள எல்லா தொழிற் சங்கங்களுமே தகுதியற்றவையாகவே இருக்கின்றன. ஏனெனில் அவை தொழிற் சங்கங்களை நடத்துவதை மட்டுமே நோக்கமாக கொண்டவை. அதைவிட வித்தியாசமான நோக்கம் இருக்குமேயானால் தேர்தலில் போட்டியிட்டு வெல்ல தொழிலாளர்களின் வாக்குகளை வேட்டையாடுவதே ஆகும்.

தொழிலாள வர்க்கத்தின் விடுதலையை அடிப்படை அரசியலாக கொள்ளாத எந்தவொரு தொழிற்சங்கமும் அடிப்படையில் முதலாளி வர்க்கத்திற்கு உதவும் வகையில் தொழிலாளர்களின் கோரிக்கைகளை வரையறுக்கும் பேரம் பேசும் புரோக்கர்களாகவே இருக்க முடியும். ஆனால் அந்த பேரம் பேசும் தொழிலைககூட சரியாக செய்யாத, செய்ய திராணியில்லாத மலையக தொழிற்சங்கங்களை மலையக மக்கள் நிராகரிப்பது சரியானதே.

இ.தொ.கா.வை நிராகரிப்பது அதே அடிப்படையைக் கொண்ட ஏனைய

—11ம் பக்கம் பார்க்க

## தோட்டங்கள் தோறும் பட்டிமன்றம்

தேசிய கலை இலக்கியப் பேரவையின் மலையகக் கிளையில் தோட்டங்கள் தோறும் 'மலையகப் பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அக்கறையுடையவர்களாக இருக்கின்றார்களா? இல்லையா?' என்ற தலைப்பிலே பட்டிமன்றங்களை இதுவரை பத்து தோட்டங்களுக்கு மேல் செய்துள்ளனர். மேலும் செய்து கொண்டும் வருகிறார்கள்.

கொட்டகலையில் இராணியப்பு, சின்னமண் செட்டித் தோட்டம், நோட்டன் பாடசாலை, தலவாக்கலை நோனாத் தோட்டம், இராணிவத்தை சிரேட் வெஸ்ரன், ஹைபோரஸ்ட் போன்ற பல இடங்களில் செய்து முடித்து இன்னும் பல தோட்டங்களில் செய்தும் வருகிறார்கள். இவர்கள் முயற்சி பாராட்டப்பட வேண்டியது.

மக்களுக்கு அது செய்கிறோம், இது செய்கிறோம் என்று சும்மா தொண்டை கிழிய கத்திக் கொண்டு அந்த மக்களை ஏமாற்றி சுரண்டி வாழும் ஒரு புல்லுருவிக் கூட்டம் மலையகத்தில் இருந்து வருகிறது. ஆனால் தேசிய கலை இலக்கியப் பேரவையினரை மலையக மக்கள் மத்தியில் இறங்கி எங்களது பிள்ளைகளை கல்வி முன்னேற்றத்தில் ஈடுபட வைக்க பல முயற்சிகளை மேற் கொண்டுள்ளார்கள்.

இப்பட்டி மன்றங்கள் தோட்டத்தில் மக்கள் மாலை வேலை விட்டுவந்து 6, 7 மணிக்கு தொடங்கி விடிய 12 அல்லது 1 மணிக்கு முடிகிறதாம். அதில் பல்வேறு விடயங்கள் பாடலுடனும், நகைச்சுவையுடனும் கூறப்படுவதால் மக்கள் அசையாமல் நின்று பார்த்து உணர்ந்து செல்கிறார்கள். இதன் மூலம் இப்போது அப்பகுதியில் அம்மக்கள் எடுத்த முடிவானது 'இனிமேல் தோட்டங்களில் விழாக்கள் நடந்தால் இசை நிகழ்ச்சி எல்லாம் வேண்டாம் இது போன்ற பட்டி மன்றத்தை கொண்டு வருவோம்' என கூறியுள்ளார்கள். இன்று 24 மணிநேர T.V. ஒலிபரப்பு, கிரிக்கட், வேலை நெருக்கடி இதுகளுக்கு மத்தியிலும் மக்கள் பயன் உள்ள பட்டிமன்றத்தை விரும்புவது வரவேற்கத்தக்கதாக உள்ளது.

இவ்வாறு சமூக அக்கறையோடு இப்பட்டிமன்றத்தை வெய்து வரும் தேசிய கலை இலக்கியப் பேரவையினர் பல்வேறு தலைப்புகளிலும் பல்வேறு விடயங்களை சகல தோட்டங்களுக்கும் கொண்டு சென்று நடாத்த வேண்டுமென்று நாமும் கேட்டுக் கொள்கிறோம்.

பல்வேறு முற்போக்கு நூல்கள், ஒலிப்பேழைகள், நாடகப்பட்டறைகள், நாடக் அரங்குகளையும் செய்து வரும் தேசிய கலை இலக்கியப் பேரவையினர் பட்டிமன்றத்தையும் தொடர்ந்து நடாத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

**-இராணிவத்தை இளைஞர்கள்**

நன்றி - நூலகத்திட்டம்



### தோழமையுள்ள புதிய பூமிக்கு ஒரு கடிதம்

# 'நிகழ்வுகளிலிருந்து உண்மையை தேடுவோம்'

கம்போடிய (கமரூச்) கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும், முன்னாள் கம்போடிய தலைவருமான தோழர் பொல்பொட் மரணமானார் என்பது இன்னொரு செய்தி என்றே நினைத்தேன். செய்மதிக்கூடாக எடுக்கப்பட்ட படங்களைக் கொண்டு அவரின் பூதவுடல் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டதும் எழுந்து நின்று எனது வலக்கை முஸ்டியை உயர்த்தி ஒரு கம்யூனிஸ்ட்டுக்கு செலுத்த வேண்டிய மரியாதையை செலுத்தினேன்.

கம்யூனிஸ்ட்டு என்பதால் கண் மூடித்தனமாக உணர்ச்சிகளுக்கு அடிமையாகிவிட்டதாக நினைக்க வேண்டாம். ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ பிடியிலிருந்து கம்போடியாவை விடுவிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை ஏற்று தோழர் பொல்பொட் போராடினார். வியட்னாமிய ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடினார். சோவியத்–வியற்னாமிய சதியினாலேயே அவரின் தலைமியிலான சோஷலிஸ (கம்யூனிஸ்ட்) அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது. மீண்டும் சோஷலிஸ (கம்யூனிஸ்ட்) அரசாங்கத்தை அமைக்க கமரூச் உட்பட புல தேசபக்த சக்திகளுடன் இணைந்து கம்போடிய தேசிய ஜனநாயக முன்னணியை கட்டி வளர்ப்பதற்காக கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை குறிப்பாக தனது தலைமை விட்டுக் கொடுத்தார்.

ஆனால் அமெரிக்க மேற்கு முதலாளித்துவ சதியால் அங்கு முதலாளித்துவ சக்திகளின் ஆட்சி மீண்டும் (போலி தேர்தலினால்) அமைக்கப்பட்டது. இந்நடவடிக்கையினால் கம்போடிய தேசிய மீட்பு இயக்கம் பலவீனப்படுத்தப்பட்டு கமரூச் இயக்கம் தனிமைப் படுத்தப்பட்டது. கம்போடிய இளவரசர் சிகாநொக்கிற்கு பூரண ஆதரவு வழங்கியதன் மூலம் கம்போடிய விடயத்தில் சீனாவும் மேற்கு நாட்டு வலையில் சிக்கியது.

இதனால் கடுமையான சுகவீனமான நிலையிலிருந்தும் சீனாவில் அளிக்கப்பட்டிருந்த புகலிட வசதியை நிராகரித்துவிட்டு கம்போடிய காடுகளுக்குள் வந்து கமரூச்சுடன் சேர்ந்து கொண்டார்.

இவர் ஆட்சியில் இருந்த காலத்தில் 10 லட்சம் கம்போடிய மக்களை கொன்று குவித்தார் என்பது சோவியத்–வியற்னாம் பிரசாரமாகும். வியற்னாம் கம்போடியாவில் சோஷலிஸ அரசாங்கத்தை கவிழ்க்க எடுத்த நடவடிக்கைகளை நியாயப்படுத்த அக்குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இதனை அமெரிக்காவும், முதலாளித்துவமும் கம்யூனிஷ்டுகளுக்கும், போராட்ட வீரர்களுக்கும் எதிரான கருத்துக்களை பரப்ப ஆதாரமாகக் கொண்டன. கொலையாளிகளையும், ஜனநாயக விரோதிகளையும் 'பொல்பொட்' என்று அழைப்பதை அமெரிக்கா மிகவும் நாசூக்காக செய்து ஆயுதப் போராட்டங்கள் எல்லாவற்றையும் 'பொல்பொட்டிசம் என்று அழைக்கும் அளவிற்கு சர்வதேச ரீதியான ஒரு கருத்தியலை அமெரிக்கா பலமாக கட்டி வளர்த்துக் கொண்டது.

அதனை மூன்றாம் உலக நாட்டு புத்திஜீவிகள் அப்படியே ஏற்றுக்கொண்டு அக்கருத்தியலுக்கு சார்பாக பிரசாரம் செய்து வந்தனர். வெற்றுக்கூடாக ஆயுதப்போராட்டங்களையும், கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டங்களையும் அடக்க அந்நியப்படுத்த பொல்பொட்டின் மீது குற்றம் சாட்டுவது போன்று தொடங்கிய அமெரிக்க ஏகாதிபத்திய மேற்கு முதலாளித்துவ சதிகள் இன்று வெற்றி பெற்றுள்ளன.

தோழர் பொல்பொட் இறந்த பிறகு மேற்குலக செய்தித்தாபனங்கள் எமது நாட்டுப் பத்திரிகைகளும் 10 லட்சம் பேரை கொலை செய்தவர் என்றும் கூறியதுடன் அவரை ஒரு 'காட்டேறி' என்று வர்ணித்தும் செய்திகள் வெளியிட்டன. 10 லட்சம் பேரை கொலை செய்தவர் என்று கம்போடியாவின் மீது வியட்னாமின் படையெடுப்பை ஆதரித்து பீட்டர் கெனமன் பிரசுரம் ஒன்றை வெளியிட்டிருந்ததாக ஞாபகம். மாக்கிச பகுப்பாய்வாளர் என்று கூறப்படும் மொஹான் சமரநாயக்க தொலைக்காட்சியில் பொல்பொட்டின் மரணம் பற்றி பேசும்போது அவரின் விடுதலை போராட்டம் அர்ப்பணிப்பு என்பவற்றையோ அவர் ஒரு கம்யூனிஸ்ட் என்பதையே கூறாமல் அவர் ஒரு கொலையாளி என்பதையே மிகையாக வலியுறுத்தினார்.

கம்போடியாவில் கம்போடிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரானவர்களை களையெடுக்கும் முயற்சிகளில் பலர் கொல்லப்பட்டிருக்கலாம். கட்டாய உழைப்பு திட்டத்தினாலும், பஞ்சத்தினாலும் பலர் செத்திருக்கலாம். அவை நிச்சயமாக 10 லட்சமாக இருக்கமுடியாது. சில ஆயிரங்களாக ஒரு லட்சமாக இருந்திருக்கலாம். முதலாளித்துவ நாடுகளிலும் பஞ்சத்தினாலும், யுத்தத்தினாலும், பயங்கரவாத ஒழிப்பு என்ற ரீதியில் லட்சக்கணக்கில் கொல்லப்பட்டுள்ளனர். அவற்றையெல்லாம் கொலைகள் என்றோ ஜனநாயக விரோத நடவடிக்கைகள் என்றோ யாரும் கூறுவதில்லை. இலங்கையில் கூட ஜே. வி. பி. ஒழிப்பு நடவடிக்கைகள் என்றும், புலி ஒழிப்பு நடவடிக்கைகள் என்றும் ஒரு லட்சத்துக்கும் மேல் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 1970–77 பஞ்சத்தினாலும் மக்கள் இறந்தனர். 1965ல் இந்தோனேசியாவில் ஆறு லட்சம் கம்யூனிஸ்டுக்களையும் மக்களையும் கொன்று குவித்த சுகார்ட்டோ ஜனநாயக வாதியாகவே அமெரிக்காவாலும் ஏனையோராலும் அரவணைக்கப்படுகிறார். அவ்வாறே சிலி சர்வாதிகாரி பினோசெற்றும் என்பதை நினைவு படுத்துவது அவசியம்.

களையெடுப்பு, கட்டாய உழைப்பு, கட்டாய விவசாய கட்டுமானம் போன்ற நடவடிக்கைகளால் அதிதீவிரவாத தவறுகளை பொல்பொட்டின் தலைமியிலான கம்போடிய கம்யூனிஸ்ட் கட்சியும், சோஷலிஸ அரசாங்கமும் செய்திருக்கலாம். ஆனால் எல்லோரும் கூறுவது போன்று 10 லட்சம் பேரை சுட்டோ, கத்தியால் வெட்டியோ குத்தியோ தோழர் பொல்பொட் கொலை செய்யவில்லை.

எனவே மக்களின் விடுதலையில் அக்கறையுள்ளவர்களும், போராட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களும் தோழர் பொல்பொட் பற்றி சோவியத் ஏகாதிபத்திய நலன்களுக்காகவும், வியட்னாமிய ஆக்கிரமிப்பு நலன்களுக்காகவும் அன்று முன்வைக்கப்பட்ட கருத்துக்களை அப்படியே ஏற்காமல், அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும், மேற்கு முதலாளித்துவ நாடுகளினதும் கருத்துக்களை அப்படியே ஏற்காமல் பகுத்தறிய வேண்டும். தோழர் பொல்பொட்டின் சாதனைகளையும், தவறுகளையும் பிரித்தறிய வேண்டும். இல்லாவிட்டால் எல்லாப் போராட்டங்களையும் பயங்கரவாதமாகவும், சர்வதேச பயங்கரவாதமாகவும் அர்த்தம் கற்பிக்கும் ஏகாதிபத்திய, முதலாளித்துவ சதிக்கு அநியாயமாக பலியாவதைத் தவிர வேறு வழியிருக்க முடியாது.

எனவே சரியான நிகழ்வுகளிலிருந்தும், நிகழும் சூழ்நிலைகளிலிருந்தும் உண்மைகளைத் தேடுவோம்.

தோழர் பொல்பொட்டின் தலைமையில் ஆட்சி நடக்கும் போதும், வியட்னாமிற்கு எதிராக போர்புரியும் போதும் இலங்கையில் இலங்கை கம்போடிய நட்புறவு சங்கம் இயங்கியது. அதில் அங்கத்தினர்களாக இருந்தவர்கள் உண்மைகளை அறிந்திருந்தும் துணிந்து பேசுகிறார்கள் இல்லை.

எனவே தான் மனிதகுல விடுதலையை மதிப்பவன் என்ற அடிப்படையில் நான் எனது அறிவுக்கு எட்டியவரையில் தோழர் பொல்பொட் கம்போடிய மக்களின் விடுதலைக்காக செய்த சாதனைகளே அதிகம் என்று கருதுகிறேன். அந்த ரீதியிலேயே எனது இறுதி புரட்சிகர வணக்கத்தை அவருக்கு தெரிவித்துக் கொண்டேன்.

— இ. சத்தியநாதன்
யாழ்ப்பாணம்.

## தலைநகரில்...

(5ம் பக்க தொடர்ச்சி)

உதாரணமாக கொழும்புத் தமிழ்ச் சங்கத்தைப் பொறுத்தவரை அந்நிறுவனம் உயர்குடித் தமிழருக்கான சங்கமாகவே இருந்து வந்துள்ளது. சொத்து சுகம் சாதி மோகம் கொண்டோரது கூடாரமாகவே இருந்து வந்தள்ளது. தனக்கு கிட்ட தமிழ் பேசிய குறைந்த சாதியினர் எனப்படுவோரையோ அன்றி தமிழ் பேசிய மலையகத்தவரையோ, அன்றி தமிழ் பேசிய முஸ்லிம்களையோ அரவணை த்தமை கிடையாது. காரணம் முன்னே எடுத்துரைத்த தமிழ்ப் பழமை வாதக் கோடுகளுக்குள்ளேயே அது நிலை நிறுத்தப்பட்டு வருகின்றமையாகும். இன்றும் கூட அந்த எல்லையைத் தாண்ட முடியாத நிலையில் தான் இருந்து வருகின்றது.

அண்மையில் தமிழ்ச் சங்க புதிய மண்டபத்திறப்பு விழா நடைபெற்றது. அதனையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகள் மூன்று நாட்கள் இடம்பெற்றன. சிலசில முனைகளிலே சிறுசிறு மாற்றங்கள் தென்படுவது போல் காணப்பட்டனவாயினும் அதனைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடியாத பழமைவாதப் பிரகிருதிகள் ஆங்காங்கே அலுத்துக் கொண்டமையையும் காணமுடிந்தது. தமிழ்ச் சங்கத்தை முழுத்தமிழர்களினதும் சங்கமாக மாற்றி அதன் மூலம் பணிசெய்ய வேண்டும் என்று நினைப்பவர்களால் அதிககாலம் செல்ல இயலவில்லை.

உதாரணத்திற்கு சில நிகழ்வுகளில் இடம்பெற்ற கருத்துரைகளும் அவற்றுக்கான எதிர் வினைகளும் கவனத்திற்குரியன. தமிழ் பேசும் மக்களின் சமூகவியல் பிரச்சினைகள் என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கிய சாந்தி சச்சிதானந்தம் தமிழர்களிடம் இன்றும் காணப்படும் சாதிய நிலைகள் பற்றி சுட்டிக்காட்டி அதன் தீய விளைவுகள் பற்றியும் கூறினார். இவையெல்லாம் தேவையில்லாத பேச்சுக்கள் என்ற விதமான கருத்துக்கள் சபையிலே இருந்த படித்த பழமைவாதிகள் சிலரிடம் இருந்து பரவியதைக் காணமுடிந்தது.

அதே போன்று மறைந்த எழுத்தாளர் டானியலின் படைப்புகள் பற்றி விரிவாகப் பேசப்பட்டது சிலருக்கு பிடிக்கவில்லை. டானியல் என்றாலே கொம்யூனிசம், கொம்யூனிசம் என்றால் 'ந' 'ப' க்களின் கட்சி என்று இன்றும் நோக்கிவரும் பழமை வாதிகளுக்கு அவ் அரங்கு ஏதோ மாதிரித்தான் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

இத்தகையவர்கள் ஒருபுறமிருக்க டானியல் பற்றி உரையாற்றிய எஸ். ரஞ்சகுமார் என்பால் ஓரிரு கதைகளைத் தவிர டானியலின் எழுத்துக்களில் எதுவுமே இல்லை என உரை முடித்தார். ஆனால் டானியலின் எழுத்துக்களில் முரண்பாடுகள் இருப்பினும் அவரது சமூக நோக்கு மிக ஆழமானது என்பதை என். இரவீந்திரன் எடுத்துக் காட்டினார். டானியலின் எழுத்துக்களில் எதுவுமே இல்லை எனக்கூறிய ரஞ்சகுமாரின் கருத்துக்கள் அங்கிருந்த பழமைவாதிகளுக்கு பரம சந்தோசத்தைக் கொடுத்தன. அதனை இரட்டிப்பாக்குவதற்காக புத்தி சீவியான க. சண்முகலிங்கம் அவர்களும் ரஞ்சகுமாரின் கருத்து முற்று முழுதாகவே ஏற்கக் கூடியது என வக்காலத்து கொண்டார். இந்த இடத்திலே ஒரு விடயத்தை நன்கு அவதானிக்க இயன்றது. அதாவது சாதியப் பழமைவாதிகளும் பின் நவீனத்துவவாதிகளும் ஒரே தாளத்தில் நின்று டானியலின் எழுத்தை எழுத்தல்ல என்று கூறிக் கொண்டதுதான். இவர்கள் இரு பகுதியினரிடமும் உள் உறைந்து காணப்படுவது ஒன்றே தான். அது வேளாள ஆதிக்கக் கருத்தியல் ஆகும். அதன் சிந்தனா வட்டத்திற்குள் இருந்தே டானியலின் எழுத்துக்களை இரு பகுதியினரும் பார்த்தனர். அன்று இழிசனர் இலக்கியம் என்று கூக்குரலிட்ட மரபுவாதிகளும் இன்று எழுத்தே இல்லை எனக்கூறும் பின் நவீனத்துவப் புத்திசீவிகளும் அடிப்படையில் வேளாள ஆதிக்க சிந்தனா வட்டத்திற்கு ஆட்பட்டவர்களேயாவர். இந்தக் கனவான்கள் முன்பு மாக்கிஸம், முற்போக்கு இலக்கியம் என்பனவற்றில் குளிர்காய்ந்து கொண்டு தம்மை தக்கவைத்துக் கொண்டவர்கள் என்பதும் பழைய விடயம்.

ஆதலால் தலைநகரிலே இன்று தமிழர் பழமை வாதம் பல்வேறு வழிகளில் வகைகளில் வெளிப்பட்டு நிற்பதை அவதானிக்க முடிகிறது. ஆதிக்கப் பரம்பரையும் அவர்களோடு இனைந்தவர்களும் தான் தமிழர்கள் எனக்கானும் போக்கு ஏனையோரை நிராகரிக்கும் தன்மையும் இருந்து வருவதை தலைநகரில் காணமுடிகிறது. சாதியம் பற்றி அல்லது சமூகஏற்றத் தாழ்வுகள் பற்றி யாரவது கருத்துரை சொன்ன மாத்திரத்தில் அத்தகையவர் என்ன சாதியாக இருக்க முடியும் என்று ஆராய்ந்து கண்டுபிடிக்கும் ஆற்றலும் இப்பழமை வாதிகளுக்கு உண்டு. ஒருவரது ஊர் நிறம், குரல் பேச்சுத் தொனியை வைத்தே இது அவர்களாகத் தான் இருக்க வேண்டம் என முடிவு செய்யும் திறமை இத்தமிழ்ர் பழமை வாதிகளைத் தவிர வேறு யாருக்கும் இலகுவில் கைவந்து விடக்கூடிய ஒன்றல்ல. தலை நகரிலும் இக்கண்டுபிடிப்பைச் செய்வோர் தராளமாகத் தமிழர்களி டையே இருந்த வருகின்றனர். தலை நகரில் இவ்வாறு தமிழர் பழமை வாதிகள் தத்தம் நிறுவனங்களில் சாதியத்தையும் ஏனைய எகரத்தியல். சிந்தனைகளையும் பேனிப்பாதுகாத்து வரும் வெளையில் அவற்றின் காப்பிடமாக இருந்துவந்த கொழும்பு தமிழ்ச்சங்கம் அண்மைய மூன்று நாள் நிகழ்சியில் ஓரளவு நெகிழ்சியைக் காட்டிள்ளது குறிப்பிடத்தக்கத. அனைவருக்கும் தமிழ்ச்சங்கம் முதல் தடைவையாகத் தனது கதவுகளைத் திறந்துள்ளது என்றே கூறலாம். அடுத்தடுத்த நகர்வுகளுக்கு அதனுள் அமர்ந்துள்ள பழமைவாத சக்திகள் வழிவிடுமா என்பதே கேள்வியாகும்.

## பொல்பொட்...

(10ம் பக்க தொடர்ச்சி)

தனக்கு ஆதரவாக இருந்த சக்திகளையும் இப் போராட்டத்தில் பங்கு பற்றுமாறு தூண்டி, இராணுவ உதவியையும் வழங்கியது. க்மெர்ரூஜ் சீனாவின் ஆதரவைப் பெற்றது. (இளவரசர் சிஹானுக் 1970 தொடங்கி சீனாவின் ஆதரவை நாடியதற்கு அமெரிக்காவும் சோவியத் யூனியனுமே முக்கிய காரணமாவர்)இந்த ஐக்கிய முன்னணியை ஒரு வலிய போராட்டச் சக்தியாக வழி நடத்தியதில் க்மெர்ரூஜின் தலைமையின் பங்கு அதி முக்கியமானது. 1990 வரை நீடித்த இப்போராட்டத்தின் வெற்றி மீண்டும் க்மெர்ரூஜை அதிகாரத்திற்கு கொண்டு வருவதை அமெரிக்கா ஏகாதிபத்தியம் விரும்பவில்லை. எனவே ஐ. நா. சபையின் குறுக்கீட்டுடன் ஒரு அதிகாரப்பகிர்வு உடன்பாடு ஏற்பட்டது. இதன் நோக்கம் க்மெர்ரூஜைத் தனிமைப் படுத்துவதே என்பதில் எவருக்கும் ஐயமில்லை. ஆயினும் வியற்னாமின் ஆதரவுடன் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஹுன்செனின் முடியாட்சிக் கட்சியின் தலைவரும் அரசர் சிஹானுக்கின் மகனுமான இளவரசர் நரதொம் ரணரித்துடன் அதிகாரத்தைப் பகிர ஆயத்தமாக இருக்கவில்லை. இதன் விளைவாக 1993ல் தேர்தல் மூலம் ஏற்படுத்தப்பட்ட இடைக்காலக் கூட்டாட்சி மெல்ல மெல்லத் தகர்ந்தது. 1998ல் தேர்தல் நடப்பதற்கு முன்னரே தனது பூரண ஆதிக்கத்தை நிறுவுமுகமாக ஹுன்செனின் நரதொம் ரணத்தின் கட்சியினர் மீது தாக்குதல் தொடுத்து அவர்களை அழிக்க முற்பட்டார். 1997ல் ரணரித் நாட்டை விட்டு வெளியேற நேர்ந்தது.

ஹுன்செனின் தனது அதிகாரத்தைத் தக்க வைக்க எடுக்கும் முயற்சிகளில் ஜனநாயகத் தன்மையைவிட ராணுவ அதிகாரமே ஓங்கி நிற்கிறது. இது முற்போக்குப் பேசுகிற சிலருக்கு முக்கியமாகத் தெரியவில்லை. க்மெர்ரூஜைப் போரில் முறியடிப்பதற்கு ஹுன்செனுக்கு சாவதேச அங்கீகாரம் தேவைப்பட்டது. அத்தேவை போனபிறகு இன்று ஹுன்சென் தனது அதிகாரத்தைத் தனது ராணுவ வலிமையின் உதவியுடன் இந்த வருடம் நடக்கும் தேர்தல் மூலம் 'ஜனநாயகமான' முறையில் நிறுவ இயலும். ஆயினும் கம்போடியாவின் பிரச்சனைகட்கு க்மெர்ரூஜையே பழி சொல்வதும் பொல்பொட்டையே பிரதான குற்றவாளியாகக் காட்டுவோரும் ஹுன்செனுடைய கடந்த கால க்மெர்ரூஜ் அரசியலைப் புறக்கணிக்கின்றமை கவனத்துக்குரியது.

க்மெர்ரூஜ் இயக்கம் இன்று பலவீனப்பட்டுள்ளது. ஆயினும் அது அழியவில்லை. கம்போடியாவின் தேசிய விடுதலையும் மக்களின் நலனுக்கான போராட்டமும் க்மெர்ரூஜ் போன்ற ஒரு புரட்சிகர சக்திக்கான தேவையை வேண்டி நிற்கின்றன.

கம்போடியாவில் 1975 முதல் 1978 வரை இறந்தோர் தொகை சில லட்சங்களா பல லட்சங்களா என்பது பற்றிய விவாதம் ஓயவில்லை. ஆயினும் கம்போடிய மக்கள் பலரது கொலைக்கும், பட்டினிச் சாவுக்கும், நோயாலான மரணத்திற்கும் காரணமாக இருந்தோர் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளும் அவர்களது எடுபிடிகளுமே. சோவியத் தூண்டுதலாலான வியற்னாமிய ஆக்கிரமிப்பின் பங்கும் பெரியது.

பொல்பொட் பற்றிய அரசியல் மதிப்பீடு முக்கியமானது அதன் அடிப்படையிலேயே அவரது சரியானதும், நல்லதுமான பங்களிப்புகளும் கணிக்கப்பட முடியும். அவரது தவறுகள் சில பெரியன. ஆயினும் அவை நேர்ந்த சூழலும் கணிப்பில் எடுக்கப்பட வேண்டும். ஸ்டாலினையும், மா ஓவையும் தூற்றுவோர் போலவே, பொல்பொட்டைத் தூற்றுவோரும் தமது அரசியற் காரணங்கட்காகவே அவரை ஒரு கொலை பாதகனாக மட்டுமே காட்டுகின்றனர். கம்போடியாவின் அரசியல் தெளிவு ஏற்படுவதற்கு இன்னும் காலம் உண்டு. அப்போது பொல்பொட் பற்றிய ஒரு மீளாய்வுக்கு வாய்ப்பு உண்டு. ஒரு மக்கள் விடுதலைப் போராளியாகவும் தனக்காக வாழாத ஒரு தியாகியாகவும் பொல்பொட் அப்போது அறியப்படுவார்.

– தேசபக்தன் –

நன்றி - நூலகத்திட்டம்



# தலைநகரில் தமிழர் பழமை வாதம்

இலங்கையின் வடபுலத்திலே மிக இறுக்கம் நிறைந்த பழமை வாதம் இருந்து வந்திருக்கிறது. நிலவுடமைக்கால கட்டத்தின் ஊடாக வழி வந்த இத் தமிழர் பழமைவாதம் பல்வேறு பெயர்களின் பேணிப் பாதுகாக்கப் பட்டு வந்துள்ளமையை வடபுல வரலாறு எடுத்துக் கூறும். கந்தபுராண கலாசாரம், நாவலர் பணி, சேர் பொன் இராமநாதன் கால அரசியல் சமூகப்பணி. மரபு இலக்கியப் பணி, கல்விப்பணி போன்ற பல்வேறு காலகட்ட நடைமுறைகளின் ஊடாகவும் இத் தமிழர் பழமைவாதம் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. சுதந்திரம் என்று கூறப்படுவதற்கு முன்பும், பின்பும் இடம் பெற்ற பாராளுமன்ற அரசியல் அரங்கிலும் அது தக்கவாறு பேணப்பட்டே வந்துள்ளது. தமிழ் ஈழக் கோரிக்கை பிறப்பெடுத்த சூழலிலும் அது ஆயுதப் போராட்ட வடிவத்தைப் பெற்றுக் கொண்ட போதும் கூட அதன் மையக் கட்டிறுக்கம் உடைபடவில்லை. இளைஞர் இயக்கங்களில் குறிப்பிட்டளவுக்கு சில கூறுகள் உடைக்கப்பட எத்தனிக்கப்பட்ட வேளைகளிலும் கூட இறுதியில் ஏதாவது ஒரு பெயரில் இத் தமிழர் பழமை வாதம் யாவற்றையும் மேவிக் கொண்டே வந்துள்ளது. அது நவீன போர்வைகளின் மூலம் தன்னை இயக்கங்களில் தற்காத்துக் கொண்டமையைக் காண முடியும்.

தமிழர் பழமை வாதத்தின் அடிப்படை நிலவுடமைக்காலச் சிந்தனைகளினதும் கருத்தமைவுகளின் தொகுதி யாகும். இதனை வடபுலத்து ஆண்டபரம்பரையினர் எனச் சுட்டப்படும் உடையார், மணியகாரர், விதானையார், முதலியார் போன்ற உயர் வேளாள ஆதிக்கக் கூறினரிடம்தான் காணமுடியும். வடபுலத்துத் தமிழர்களில் நாற்பது வீதமான வேளாளர்களின் தொகையில் கணிசமானோரிடம் மேற்கூறிய ஆதிக்க சிந்தனா முறை மிகக் கெட்டியாகப் படிந்த ஒன்றாகும். சாதியப் படிமுறையில் அமைந்து காணப்படும் ஏனைய இடைச் சாதிகளில் உள்ளவர்களிடமும் கூட இவ்வேளாள ஆதிக்க மனப்பாங்கு வெவ்வேறு அளவுகளில் அமைந்திருப்பதைப் பல்வேறு ஆய்வுகள் எடுத்துக் காட்டி உள்ளன. தேசவழமை மூலமான சொத்துப் பாதுகாப்பையும், சாதியப் படி நிலையின் பேணலையும் சைவம் வளர்ப்பதையும் அடிப்படையாகக் கொண்ட தமிழர் பழமைவாதம் இன்றுவரை அதன் கருத்தியல் சிந்தனா முறையில் பெரும் மாற்றத்தை அடைந்துள்ளது எனக் கூறி விடமுடியாது.

இலங்கையில் கடந்த இரண்டு தசாப்தகாலத்திலான பேரினவாத ஒடுக்குமுறையின் கீழும் இத்தமிழர் பழமை வாதம் தன்னை தற்காத்து வைத்திருக் கிறது. நாலு லட்சம் தமிழர்கள் ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலியக் கண்டங்களின் நாடுகளுக்கு அகதிகள் என்னும் பெயரில் புலம் பெயர்ந்த சூழலிலும் பழமை வாதத்தில் உழன்று

**சங்கிலியன்**

கொண்டுதான் வாழ வேண்டியுள்ளது. புலம் பெயர்ந்த நாடுகளில் தமது தமிழ்க் கலாசாரத்தை கட்டிக்காப்பதாகக் கூறிக் கொள்ளும் பலர் சாதியப் படிநிலை வகுத்த அகமணமுறை கோட்பாட்டிற்கு அப்பால் செல்வதற்கு முடியாத நிலையில் கட்டுண்டு காணப்படுகின்றனர். இதற்கு புலம் பெயர்ந்த இளம் தலைமுறையினர் கூட விதி விலக்காகக் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இலண்டனில் பொறியியலாளராகப் பணிபுரியும் யாழ்-இந்து உயர் வேளாளர் குலத்தைச் சேர்ந்த மணமகனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த மணமகள் தேவைப்படுகிறார். சீதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். இவ்வாறு வீரகேசரி வார இதழில் ஒவ்வொரு வாரமும் திருமண விளம்பரங்கள் வந்து கொண்டிருப்பது எவருக்கும் வித்தியாசமாகத் தெரிவதில்லை. காரணம் பழைமை வாதப் போக்கின் ஆதிக்கம் தன் முனைப்புடன் இருப்பதுதான்.

இத்தகைய வடபுலத்து தமிழர் பழமை வாதம் யாழ்ப்பாண மனோபாவமாக வகைப் படுத்தப்பட்டதும் காணக் கூடியதே. ஆங்கிலக் கல்வி மூலமான அரச உத்தி யோகங்களுக்காக நாடு முழு வதும் பரந்து சென்ற இந்த யாழ்ப்பாண உத்தியோகத்தர்களில் தொண்ணூற்றைந்து வீத மானவர்கள் தம்முடன் இப்பழமை வாதச் சிந்தனைகளை எடுத்துச் சென்றனர். கிழக்கில், மலைய கத்தில், தென்னிலங்கையில் எல்லாம் அவர்கள் அங்குள்ள மக்களை நடாத்திய முறைமையும் அணுகிய நடைமுறைகளும் அவ்வாறே இருந்தன. இத்தகையவர்களுக்கு ஒரு சாதாரண மலையகத் தொழி லாளியின், கிழக்கு விவசாயியின், முஸ்லீமின் அபிலாஷை என்ன என்று புரிந்து கொள்ள இயலாத அளவிற்கு பழமை வாதச் செருக்கு தலையில் இறுகி இருந்தது. இதனால் அப்பிரதேச மக்கள் இவர்களுக்கு ஊடாகவே முழு யாழ்ப்பாண மக்களையும் பார்க்க முடிந்தது. யாழ்ப்பாணத் தானுக்கு என விஷேச குணம் குறி இருக்கும் என்ற ஒரு பார்வையை ஏற்படுத்தும் நிலைக்கு இவர்களது சொல்லும் செயல்களும் அமைந்தன. ஆனால் இத்தகையோர் வடபுலத்து மக்களின் மீது ஆதிக்கம் செலுத்தும் சக்திகளது மனோ நிலையைத்தான் பிரதிபலித்தார்களே தவிர அங்குள்ள தொழிலாளர் விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மக்களது எண்ணங்களையும் உணர்வுகளையும் எவ் வகையிலும் கொண்டி ருக்கவில்லை என்ற உண்மை வெளிவர நீண்டகாலம் எடுத்துக் கொண்டது. அதனை வெளியே கொண்டு வந்தவர்கள் வடபுலத்து இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகளாவர். அவர்கள்தான் அன்றும் இன்றும் இவ் ஆதிக்க கருத்தியல் சிந்தனா முறைக்கும் அதன் நடைமுறைகளுக்கும் எதிராகப் போராடி வருவோராக உள்ளனர்.

வடபுலத்தில் நிகழ்ந்து வந்த அரசியல் போராட்ட சூழல்களால் பேரினவாத இராணுவ ஒடுக்கு முறையின் தீவிரத்தால் இந்த உயர் குடிப் பழமை வாதிகள் தலைநகர் கொழும்பு நோக்கி நகர்ந்தனர். ஏற்கனவேயும் தலைநகரில் இருந்த பழமைவாத சக்திகளுடன் சங்கமமாகிக் கொண்ட இச்சக்திகள் தம்மை நிறுவனப்படுத்துவதில் மும்முரமாகினர். தமிழர்களுக்கு வழிகாட்டுவோரும் பரிந்து பேசுவோரும் போர்க்கொடி தூக்குபவர்களாக நிற்பவர்களும் தாங்களே என்ற விதமான நடைமுறைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டும் வருகின்றனர்.

இந்து மாமன்றம், கொழும்பு தமிழர் பணிக்குழு, கொழும்பு கம்பன் கழகம், கொழும்புத் தமிழ்ச் சங்கம், தமிழ் சட்டத் தரணிகள் சங்கம் போன்ற அமைப்புகளிலே இத் தமிழ்ப் பழமைவாத சக்திகளது இறுகிப் போன பழமைக் குரல்கள் ஓங்கி ஒலித்து வருகின்றன. மேற்கூறிய நிறுவனங்களிலே இவ்வாதிக்க சக்திகள் மிகக் கவனமாக இருந்தது சாதி, அந்தஸ்து, பட்டம், பதவி போன்றவற்றின் அடிப்படையில் செயல்பட்டு வருவதைக் காணலாம்.

—4ம் பக்கம் பார்க்க

## குடாநாட்டில் கண்டதும் கேட்டதும்



- யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இருந்து வந்த பெறுமதி வாய்ந்த நூல்களில் இருபதினாயிரம் நூல்கள் 1995-96 ரிவிரச யுத்தம்-இடம்பெயர்வு மூலம் அழிந்து போயுள்ளன என்று யாழ். பல்கலைக்கழக வட்டாரம் தெரிவித்துள்ளன.
- குடாநாட்டில் வழங்கப்படும் அரசாங்க நியமனங்களுக்கு படை அதிகாரிகளின் அங்கீகாரம் அவசியமாம். அவர்கள் ஒப்புதல் அளிக்காது விட்டால் நியமனங்கள் செல்லுபடியாகமாட்டாது. உதாரணத்திற்கு குடாநாட்டில் வழங்கப்பட்ட 149 சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டும் நடைமுறைக்கு வரமுடியாது உள்ளது. காரணம் படை அதிகாரிகளது ஒப்புதல் கிடைக்காமையே ஆகும்.
- தாங்கள் தனிநாட்டுக்கு எதிரானவர்கள் என்று அரசாங்கமும் படைத் தலைமையும் கூறினாலும் இன்று குடாநாடு ஒரு தனிநாடு போன்றே இருந்த வருகின்றது. அதற்கு மிக முக்கிய எடுத்துக்காட்டு பாஸ் முறையாகும். யாராவது குடாநாட்டிலிருந்து வெளியே செல்லவும் அல்லது வெளியிடங்களில் இருந்து அங்கு செல்லவும் நாடுகளுக்கிடையில் கையாளப்படும் விசாமுறை போன்றே பாஸ் முறையும் கையாளப்படுகிறது. மேலும் குடாநாட்டிலிருந்து பல தூதுக்குழுக்கள் தென் இலங்கைக்கு வந்து பல இடங்களுக்கும் சென்று நல்லெண்ணப் பயணம் மேற் கொள்பவை போன்ற அனைத்தும் குடாநாடு தனிநாடு போன்றதாகவே இருந்து வருவதைக் காணமுடியும்.
- குடாநாட்டின் பொது வைபவங்களில் பிரதம அதிதியாக அழைக்கப் படுவோரில் படை அதிகாரிகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். இது குடாநாட்டின் இன்றைய சூழலில் யாரிடம் அதிகாரம் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது. அத்துடன் அவ்வக் காலத்தில் எவரைப்பிடித்துக் கொண்டால் எதுஎதைச் செய்யலாம் என்பதையும் குடாநாட்டின் சில ‘புத்திசாலிகள்’ தெரிந்தும் வைத்திருக்கிறார்கள் என்பதையும் அவதானிக்கமுடிகிறது.
- குடாநாட்டில் ராணுவத்தால் துப்பரவு செய்யப்படாத பகுதிகள் சில இன்னும் இருந்து வருகின்றன. உதாரணத்திற்கு வடமாராட்சி கிழக்கிற்கு உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்வதில் கடும் கட்டுப்பாடுகள் இருந்து வருகின்றன. வல்லிபுரக் கோவில் எல்லையில் வைத்து மக்கள் எடுத்துச் செல்லும் பொருட்களுக்கு சோதனையும் கட்டுப்பாடும் கறாராகப் பார்க்கப்படுகிறது. பாண், பருப்பு, அரிசி போன்றன குறிப்பிட்ட அளவுக்கு மேல் எடுத்துச் செல்ல முடியாது.

## அபகரிப்புக்கு ஆயத்தம்!

நாட்டில் தாராள பொருளாதாரக் கொள்ளையும் தனியார் மயமும் நிறைவு நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஆனால் ஒரு குறை என்னவென்றால் அவற்றை வடக்கு, கிழக்கில் அமுல்படுத்த முடியவில்லையே என்பதுதான்.

அப்பிரதேசங்களில் எப்படி பல்தேசியக் கம்பனிகள் புகுந்து கொள்ளலாம் என்பதை மோப்பம் பிடிக்கும் ஆரம்ப வேலைகள் இடம் பெற்று வருகின்றன. அமெரிக்க, மேற்கு நாட்டு துாதரகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் அண்மைக் காலங்களில் வடக்கு கிழக்கிற்குப் பயணம் செய்து வருகிறார்கள். புனரமைப்பு, அபிவிருத்தி போன்றவற்றுக்கான நிதி உதவிகளை வழங்கும் சாட்டில் அவை அங்கு சென்று நீண்டகால நோக்கங்களுக்கு தளம் தேடுகின்றனர். காங்கேசன் சீமெந்து ஆலை, பரந்தன் இரசாயன ஆலை, கிழக்கே கடதாசி ஆலை என்பனவற்றை எப்படி அபகரிக்கலாம் என்றும், புதிய முதலீடுகள் எவ்வாறு புகுத்திக் கொள்ளலாம் என்றும் உள்ளார்ந்த ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக அறிய முடிகிறது. இந்த முயற்சிக்கு அரசாங்கம் தனது முழு ஆதரவையும் தெரிவித்து வருவருவதாகவும் பேசப்படுகிறது. அந்நிய மூலதனமும், பல்தேசியக் கம்பனிகளும், அந்நிய சீரழிந்த கலாச்சார ஊடுருவல்களும் இல்லாது காணப்படும் வடக்கு கிழக்கை எப்படி மாற்றியமைப்பது என்பதிலேயே அமெரிக்க மேற்கு நாட்டு சக்திகளது கவனம் தற்போது திரும்பியுள்ளது.

**புதிய பூமி சந்தா விபரம்**

உள் நாட்டில்

| | |
|---|---|
| ஒரு வருடம் | 150-00 |
| ஆறு மாதங்கள் | 75.00 |
| தனிப்பிரதி | 10.00 |

வெளிநாடுகளில்
ஒருவருடம்
25 அமெரிக்க டொலர்
(தபால் செலவு உட்பட)

அனுப்ப வேண்டிய முகவரி
**இ. தம்பையா**
S-47, 3வது மாடி,
கொழும்பு சென்றல் சுப்பர் மார்கட்,
கொழும்பு 11, இலங்கை.
தொலைபேசி. 435117, 335844

நன்றி - நூலகத்திட்டம்



# தோழர் நம்பூதிரிபாத்
# அனுபவங்களும் படிப்பினைகளும்

"நாட்டு மக்களுக்கு சேவை செய்வதினால் மட்டுமே தனி நபர்கள் தலைவர்களாகிறார்கள். சேவை செய்வதை விட்டு வேறு ஏதாவது செய்கின்ற போது,



கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கைவிட்டு அவர்கள் கட்சிக்கு எதிராக செயற்படுகின்ற போது, மக்களுக்கெதிராக செயற்படுகின்ற போது தலைவர்கள் என்ற ஸ்தானத்தை இழந்து விடுகின்றனர்" இவ்வாறு தோழர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் கூறியுள்ளார்.

கம்யூனிஸ்ட்டுகள் உலகிலுள்ள எல்லா தொழிலாளிகளுக்காகவும், அடக்கப்பட்ட மக்களுக்காகவுமே போராடுகின்றனர். ஆனால் அவர்கள் புரட்சியை முன்னெடுப்பதற்கு மக்களில் ஒருவராக இருந்து மக்களுடன் சேர்ந்து புரட்சியில் பங்கெடுக்க குறிப்பிட்ட மக்களை அல்லது மக்கள் கூட்டத்தை பின்புலமாக கொண்டு செயற்படுதல் அவசியம். குறிப்பாக இன, மொழி, பால் முரண்பாடுகள் கூர்மையடைந்து இருக்கின்ற மூன்றாம் உலகநாட்டு சூழ்நிலையில் நேரடியாக பதில் சொல்லக்கூடிய மக்கள் பின்புலத்தை தேர்ந்தெடுத்துக் கொள்வதிலேயே ஒரு கம்யூனிஸ்ட்டின் வெற்றி தங்கியுள்ளது.

அந்த வகையில் தோழர் நம்பூதிரிபாத் கேரள மக்களை பின்புலமாக கொண்டு செயற்பட்டதிலேயே அவரின் சாதனைகள் அதிகமாக இருந்தன. அவர் கேரள மக்களை அடித்தளமாக கொண்டு செயற்பட்டதனால் வர்க்கப் பார்வையின்றி குறுகிய பிரதேச, தேசிய வாதத்திற்குள் விழவில்லை. மாறாக கட்சியின் பொதுச் செயலாளராக இருந்து முழு நாட்டு மக்களின் புரட்சி பற்றியும் அக்கறை கொண்டிருந்தார்.

தோழர் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் மார்ச் மாதம் 20ம் திகதி காலமானார். நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டிருந்த அவர் கடைசி நிமிடம் வரை கம்யூனிஸ்ட் கட்சிக்காக உழைத்து அவரது 89 வயதில் காலமானார். 1938ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்த அவர் 1943இல் இதன் மத்திய குழு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். 1962ல் கட்சியின் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டார். 1964ல் கட்சி பிளவுபட்ட பிறகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)யின் அரசியல் குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டார். பின்னர் 1977 முதல் 1992 வரை பொதுச் செயலாளராக கடமையாற்றினார். 1992ல் சுகவீனம் காரணமாக கட்சியின் டில்லி தலைமையகத்திலிருந்து கேரளாவிற்கு திரும்பி அங்கேயே இறக்கும் வரை வசித்தார். இறக்கும் வரை கட்சியின் அரசியல் குழு உறுப்பினராக இருந்தார்.

1957இல் நடைபெற்ற கேரள மாநில சபைக்கான முதலாவது தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியது. முதலாவது முதலமைச்சராக தோழர் நம்பூதிரிபாத் தெரிவு செய்யப்பட்டார்.

**—நமது அரசியல் நிருபர்—**

ஒரு உயர்ந்த கம்யூனிஸ்ட் தலைவரை, ஒரு போராளியை, புரட்சிவாதியை மாக்சிஸ்ட் அறிஞரை சிறந்த பத்திரிகையாளரை கேரளாவும் இந்தியாவும் மட்டுமன்றி இப்பிராந்தியமே சர்வதேச பாட்டாளி வர்க்கமே இழந்துவிட்டு சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

இவ்வேளையில் அவரது கொள்கையிலும், நடைமுறையிலும் இருந்து தொகுத்து கொள்ள வேண்டியதும், கற்றுக்கொள்ள வேண்டியதும் அநேகம் இருக்கின்றன. கம்யூனிஸ்ட்களிடையே புரட்சியை முன்னெடுக்கும், வர்க்கசமரசம் செய்யாத நேர்மை இருக்கும்வரை கம்யூனிஸ்ட்டுகளிடையே நிலவும் முரண்பாடுகள் சிநேகபூர்வமானவையே. அந்த அடிப்படையுடன் தோழர் நம்பூதிரிபாத்தின் வாழ்க்கை முறையை பற்றி குறிப்பாக இலங்கை கம்யூனிஸ்ட்டுகள், இடதுசாரிகள் கவனம் செலுத்துவது அவசியம்.

இந்திய தேசிய இனங்களின் குறிப்பாக கேரளமக்களின் தேசியப்பிரச்சனையை தீர்ப்பதில் அவர் கொண்டிருந்த நிலைப்பாடு மிகவும் எம்மை ஈர்ப்பதாகவும் மலையாள மொழி பேசும் கேரள மக்களின் மலபார், திருவாங்கூர், கொச்சின் ஆகிய மாவட்டங்களில் பிரித்தாளப்பட்டனர். சென்னை மாநில சட்டசபையிலேயே அவர்களுக்கான பிரதிநிதித்துவம் இருந்தது. கேரள மக்களின் தேசியப் பிரச்சினையை தீர்க்க மேற்படி மாவட்டங்கள் இணைக்கப்பட்ட மலையாள மொழிவாரியான மாநிலமாக ஐக்கிய கேரளாவாக அமைக்கப்பட்டு ஐக்கிய கேரளத்திற்கான மாநில அரசு ஏற்படுத்தப்பட் வேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தார்.

அதே போன்று மொழி வாரியாகவும், கலாசார ரீதியாகவும் ஒரே அடையாளத்துடன் வாழ்கின்ற மக்கள் வாழும் பகுதிகளை இணைத்து ஒவ்வொரு மொழிவாரி மக்களுக்கான தனித்தனி மாநிலங்களும், அதற்கென அரசுகளும் அமைக்கப்பட்டாலேயே இந்தியாவில் வாழும் பல இன மக்களின் தேசியப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியும் என்பதில் உறுதியாக இருந்தார். மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதையும் வற்புறுத்தி வந்தார்.

இந்த அடிப்படையிலேயே 1954இல் ஐக்கிய கேரளம் அமைக்கப்பட்டது.

இவ்விடயத்தில் இன்றும் கூட இலங்கையின் இடது சாரிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். வடக்கு, கிழக்கு மாகாணத்தை தமிழ் மக்களின் மாகாணமாக காண்பதற்கு விருப்பமில்லாத நழுவுகின்ற போக்கையே கடைப்பிடிக்கின்றனர் (இதற்கு விதிவிலக்கான இடது சாரிகளும் இருக்கின்றனர்)

1953இல் வடக்கு, கிழக்கு இணைந்த மொழிவாரி மாகாணம் அமைக்கப்பட வேண்டும் என்று கூறினாலும் அதனை நடைமுறைப்படுத்த அவர்கள் ஆட்சியில் பங்கெடுத்த காலங்களில்கூட முயற்சிக்கவில்லை. எங்கள் நாட்டு இடதுசாரிகள் மூன்றாவது முறையாக கூட்டரசாங்கத்தில் பங்கெடுத்தபோதும் அரசியல் தீர்வு காண்பதில் அக்கறை செலுத்தவில்லை. தற்போது 'உயிரில்லாத ஒரு தீர்வுத்திட்டத்தை' கட்டி அழுவதைத் தவிர ஆட்சியில்லாதபோது எடுக்கப்பட்ட தீர்வுதிட்ட முயற்சிகளை (மாகாண சபையை ஏற்றதை தவிர) எதிர்த்துள்ளனர்.

தோழர் நம்பூதிரிபாத் ஐக்கிய கேரளத்தை வென்றெடுத்தவுடன் ஓய்ந்துவிடவில்லை. அம்மாநிலத்தை தொழிலாளவர்க்க ரீதியானதாக கட்டியமைக்க பாடுபட்டார். முதலமைச்சராகி ஆறு



நாட்களுக்குள் நிலச்சீர்திருத்த சட்டத்தை நிறைவேற்றினார். நிலச்சுவாந்தர்களிடமிருந்து ஏராளமான ஏக்கர் காணிகளை அரசாங்கம் சுவீகரித்து காணியற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் நோக்கத்திலேயே அச்சட்டம் கொண்டு வரப்பட்டது. அவருடைய சமூகமான நம்பூதிரி நிலச்சுவந்தர் சமூகம் உட்பட பலவிதமான நிலப்பிரபுத்துவத்திற்கும் சாதியத்துக்கும் எதிராக ஜனநாயக செயற்திட்டங்களை முன்னெடுத்தார். கேரளமக்களின் சுபீட்சத்திற்காக பொருளாதாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்திய அரசாங்கம் மதச்சார்பற்றதாக இருக்க வேண்டும் என்பதற்காக தொடர்ந்து போராடி வந்தார்.

ஆனால் எங்கள் நாட்டு இடதுசாரிகளோ சிறுபான்மையினருக்கு இருந்த சலுகைகளையும் பறித்து பௌத்த மதத்தை அரச மதமாக்கிய 1972 அரசியல் அமைப்பை ஆக்குவதில் மூலகர்த்தாக்களாக இருந்துள்ளனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் (மார்க்சிஸ்ட்) இடதுசாரிகளும் பாராளுமன்ற போராட்டப் பாதையில் பெற்ற அனுபவங்களும், முகம் கொடுத்த சவால்களும், சந்தித்த பின்னடைவுகளும் எமது கவனத்தை ஈர்க்கின்றன. கேரளம், திரிபுரா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் கம்யூனிஸ்ட்டுகள் ஆட்சியமைத்தனர். மத்தியில் ஆட்சி அமைப்பதை தீர்மானிப்பவர்களாக கம்யூனிஸ்ட்டுகள் இருக்கின்றனர்.

மாநில அரசாங்கங்களில் பங்கெடுப்பதற்கும் அரசாங்கங்களை அமைப்பதற்கும் இ.க. கட்சி (மார்க்சிஸ்ட்டு) வேலைத்திட்டத்தை நிறைவேற்ற தோழர் நம்பூதிரிபாத்தே காரணமாய் இருந்தார்.

பாராளுமன்ற தேர்தல்களை பகிஷ்கரிப்பதனால் பாராளுமன்ற

2ம் பக்கம் பார்க்க

# தேவாலயங்களுக்காக இருப்பது போன்று புரட்சிக்காகவும் வீரர்கள் இருக்கிறார்கள்.

## பரிசுத்த பாப்பரசரிடம் தோழர் பிடல் கஸ்ரோ

மனித குலத்திற்கு அழிவை ஏற்படுத்தும் குற்றவாளிகளை நியாயப்படுத்துவதை கிறிஸ்தவர்கள் எதிர்ப்பது போன்று நாமும் எதிர்க்கிறோம். எதிர்ப்பதுடன் புரட்சியின் மீது எமக்குள்ள நிரந்தர நம்பிக்கையை கைவிடுவதை விட ஆயிரம் தடவைகள் மரணமடைவதையே நாம் தேர்ந்தெடுத்துக் கொள்வோம். தேவாலயங்களை பாதுகாப்பதற்கு வீரர்கள் இருப்பது போன்று வெகுஜனங்களின் புரட்சியை பாதுகாப்பதற்காகவும் வீரர்கள் இருக்கின்றனர்.

1998ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி கியூபாவிற்கு சென்றிருந்த பாப்பரசரை வரவேற்று உரையாற்றிய கியூப ஜனாதிபதியும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளருமான தோழர் பிடல் கஸ்ரோ தெரிவித்தார்.

சர்வதேச ரீதியான அழுத்தங்களை இலகுவாக ஏற்படுத்தக் கூடிய சக்தி வாய்ந்த சமய நிறுவனமான வத்திக்கான் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் பாப்பரசரை கியூபாவிற்கு வரவேற்பதில் எவ்வித அச்சமுமின்றி வரவேற்ற கஸ்ரோ சோஷலிஸ கியூபாவின் நிலைப்பாட்டை ஆணித்தரமாக முன்வைத்தார். சோஷலிஸ கியூபாவில் 'முதலாளித்துவ சீர்திருத்தங்கள்' மேற்கொள்ளும்படி அமெரிக்காவும், முதலாளித்துவ மேற்கு நாடுகளும்



கியூபா மக்களுக்கு எதிராக பொருளாதார தடைகள் என்ற பேரில் புரியும் குற்றச்செயல்களை பற்றி விரிவாக விளக்கினார். சோஷலிஸப் புரட்சியினால் கியூபாவில் செய்யப்பட்ட சாதனைகளை ஆதாரபூர்வமாக நிரூபித்துக் காட்டினார்.

பாப்பரசரின் விஜயத்திற்கு பிறகு பல தேவாலயங்கள் திறக்கப்பட்டதனாலும் பல அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டதனாலும் பாப்பரசரின் வற்புறுத்தலால் கியூபாவில் 'முதலாளித்துவ சீர்திருத்தங்கள்' மேற்கொள்ளப்படலாம் என்று மேற்கத்தேய முதலாளித்துவ தகவல் ஊடகங்கள் பிரசாரம் செய்து வருகின்றன.

இவ்வாறான சூழ்நிலையில் பாப்பரசரை வரவேற்று அவரை விழித்து தோழர் கஸ்ரோ ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகளை பகிர்ந்து கொள்வது மிகவும் அவசியமானதென கருதுகிறோம்.

கியூபாவிற்கு வருகை தந்துள்ள பரிசுத்த பாப்பரசரே! கியூபாவினால் உங்களுக்கு சமர்ப்பணம் செய்ய என்ன இருக்கிறது என்று நீங்கள் யோசிக்கலாம். நீங்கள் எங்குமே காணாத அளவிற்கு மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான ஏற்றத்தாழ்வுக்கு முகம் கொடுக்கின்ற,

—11ம் பக்கம் பார்க்க

நன்றி - நூலகத்திட்டம்



# திருமலைக்குச் செல்லுவோம், தமிழரின் உரிமை வெல்லுவோம்

## தந்தையும் மைந்தரும் (5)

**– இமயவரம்பன் –**

சிங்களம் அரச கரும மொழியான பின்பு தமிழரசுக்கட்சி திருகோணமலையில் 1957ல் நடாத்திய மாநாடு போல ஒன்று தமிழர் அரசியலில் அதற்கு முன்பு நிகழவில்லை. 'வெள்ளம் போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம்' என்று பாரதிதாசன் சொன்னவிதமான உணர்வுடன் திரண்ட இக்கூட்டம் மொழி உணர்வாலும் இன உணர்வாலும் உந்தப்பட்ட பலரையும் கவர்ந்தது என்பதில் ஐயமில்லை. தமிழ் பேசும் மக்கள் என்று தமிழரசுத் தலைமை கூறுகிற மக்களில் மலையகத் தமிழர் அங்கு திரளா 'விட்டாலும் முஸ்லிம்கள் கணிசமான அளவில் பங்கு பற்றினர். அ. அமிர்தலிங்கம், செ. இராசதுரை, மஷூர் மௌலானா ஆகியோரது உரைகள் பொது மக்களால் மிகவும் இரசிக்கப்பட்டன. எஸ். கே. வி. செல்வநாயகம் என்றுமே சிறந்த மேடைப் பேச்சாளரல்ல. ஆயினும் அவரது உரையைக் கேட்பது ஒரு பக்தி அனுபவம் போலத் தமிழரசு வட்டாரங்களில் கருதப்பட்டது. ஈ. எம். வி. நாகநாதனின் தமிழ் மொழியாற்றல் குறைபாடானது. ஆயினும் அவரது உணர்ச்சி வேகம் அதற்கு ஈடு செய்தது. மாநாட்டின் போக்கில் மக்களது உற்சாகம் கரைபுரண்டு ஓடியது. இனியும் தமிழ் மக்களை யாராலும் அடக்கி ஆள முடியாது என்ற நம்பிக்கையை ஊட்டிய இந்த மாநாடு போராட்டம் பற்றி எந்த விதமான திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதை மக்கள் அன்று அறிந்திருக்கவில்லை.

'திருமலைக்குச் செல்லுவோம். தமிழன் உரிமை வெல்லுவோம்' 'அறப்போர் தொடுப்போம்' என்ற விதமான கோஷங்களுடன் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கால்நடையாகவே மாநாட்டுக்கு வந்தவர்கள் பலர். இந்த மாநாட்டில் தமிழரசுக் கட்சியின் நான்கு பிரதான அரசியற் கோரிக்கைகளும் மக்கள் முன் வைக்கப்பட்டன.

1. மலையக மக்களுக்குப் பூரண குடியுரிமையும், வாக்குரிமையும் வழங்கப்பட வேண்டும்.

2. தமிழுக்கும், சிங்களத்துக்கும் சமமான அரச கருமமொழி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

3. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டும்.

4. வடக்கு, கிழக்கு மாகாணங்கட்கான ஒரு சமஷ்டி ஆட்சி உருவாக்கப்பட வேண்டும்.

இக் கோரிக்கைகளில் ஒரு அடிப்படையான நியாயமிருந்தாலும் அவற்றை நியாயப்படுத்தி வென்றெடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது பற்றிய தெளிவு தமிழரசுக்கட்சியின் தலைவர்களிடம் அதிகம் இருக்க வில்லை. தமிழரசுக் கட்சி மலையக மக்களது குடியுரிமையையும், வாக்குரிமையையும் மீட்டெடுப்பதற்கு எந்த முறையில் போரிட முடியும் என்பது ஒருபுறமிருக்க, மலையக மக்கள் சார்பில் பேசும் அதிகாரமோ தகுதியோ கூட அவர்கட்கு இல்லை. ஜி. ஜி. பொன்னம்பலம் போன்று செல்வநாயகமும் (அவரது மனைவியும் மக்களும் என்றுதான் கூறப்படலும்) ஒரு தோட்ட உரிமையாளர். தொழிலாளர் கண்ணோட்டத்தில் அவர் எதையும் பார்த்ததாகவே வரலாறு கிடையாது. எனவே பாராளுமன்ற அரசியல், சாத்வீகப் போராட்டம் என்னும் வரையறைகட்குள் தமிழரசுக்கட்சி இயங்குவது பலவகையிலும் அவரோடொத்த தலைமைக்கு வசதியான ஒன்றாகவே இருந்தது. தமிழரசுக் கட்சியின் 'சோசலிசக் கொள்கை' எப்படியிருப்பினும் கம்யூனிஸ்டுக்களை எதிர்ப்பதற்கான அவர்களது தத்துவார்த்தக் காரணங்களுள் ஒன்று வன்முறைப் போராட்டமாக எவரும் கருத நியாயமிருக்கலாம். ஆயினும் உள்ளார்ந்த காரணம் வர்க்க நலன்களே என்பதை உணர்த்த வரலாறு அதிக காலம் எடுக்கவில்லை.



திருகோணமலை மாநாட்டின் அமோக வெற்றியின் பின்பு தமிழரசுக்கட்சியே தமிழ் பேசும் மக்களின் ஏகப்பிரதிநிதி என்ற படிமம் உருவாக்கப்பட்டது. மலையக மக்களுக்கு வாக்குரிமை இல்லாத காரணத்தால், வாக்குரிமை உள்ள தமிழ் பேசும் மக்களின் ஏகப்பிரதிநிதி என்று தமிழரசுக்கட்சி உரிமை கொண்டாட முடியாதவாறு தடையாக வடக்கில் இருந்தவர்கள் தமிழ்க்காங்கிரசும், இடது சாரிகளுமே. யூ. என். பி. வடக்கில் செல்லாக் காசாகி விட்டது. ஸ்ரீ. ல. சு. கட்சிக்கு குறிப்பிடத்தக்க வெகுசன அரசியற் தளம் இருக்கவில்லை. கிழக்கையும், வடக்கையும் முதன்முதலாகப் பாராளு மன்றத்தில் ஒரு சேரப் பிரதி நிதித்துவம் செய்யும் கட்சி என்ற பெருமையைத் தமிழரசுக்கட்சி நிலைநாட்டிக் கொள்ள முன்னமே தமிழரசுக் கட்சி சார்பில் தேர்தலில் நின்று வெற்றி பெற்ற மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பா. உக்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து விட்டனர். இதற்கான காரணத்தை தமிழரசுத் தலைமை சரிவர ஆராய தவறியதோடு, முஸ்லிம் தலைவர்கள் எப்போதுமே 'தொப்பி திருப்பிகள்' என்ற விதமான விளக்கத்தைக் கூறித் தப்பிக் கொண்டது. 1965 வரை எந்த முஸ்லிம் பிரமுகரையாவது தேடிப்பிடித்து தேர்தலில் தன் சார்பில் நிறுத்தும் வழக்கம் தமிழரசுக் கட்சிக்குள் தொடர்ந்தது.

தமிழரசுக் கட்சி முஸ்லிம் பிரமுகர்களைத் தன் அரசியல் லாபத்துக்குப் பயன்படுத்துவதில் உள்ள அதேஅளவு நியாயம் முஸ்லிம் பிரமுகர்கட்குத் தமிழரசுக் கட்சியைப் பயன்படுத்தித் தமது தொகுதியில் சிறுபான்மையினராக இருந்த தமிழ் வாக்காளர்களது ஆதரவைப் பெற்றுத் தேர்தலில் வெல்வதிலும் இருக்கலாம் என்பதைப் பற்றி நாம் சிந்திப்பது பயனுள்ளது. தமிழரசுக்கட்சி முஸ்லிம்களையும் பிரதிநிதித்துவம் செய்கிறது என்பதற்கான தேர்தல் அத்தாட்சியை விட அதிகமாக முஸ்லிம்களது தனித்துவம் பற்றியோ அவர்களது குறிப்பான பிரச்சனைகள் பற்றியோ கவனிக்கவில்லை என்பது முக்கியமானது. இதனாலேயே 1957 மாநாட்டிற்கு முன்னர் நடந்த தமிழரசுக்கட்சிப் பாராளுமன்றக் குழுவின் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் பா. உ. செல்வநாயகத்திடம் நீங்கள் தமிழர்கட்காக தமிழரசு கேட்கிறீர்கள். நாங்கள் முஸ்லிம்கட்காக ஒரு இஸ்லாமிஸ்தான் கேட்டால் ஆதரிப்பீர்களா? என்று கேட்டார். வேறு வழியில்லாமல் செல்வநாயகம் உடன்பட்டார். இது பற்றித் திருகோணமலை மாநாட்டில் பெருமையுடன் அறிவிக்கப்பட்டாலும், ஒரு விடயம் மட்டும் முக்கியமானது. இந்த இஸ்லாமிஸ்தான் எப்படியிருக்கும் என்பது பற்றி அந்த முஸ்லிம் பா. உ. அதிகம் சிந்தித்தாகவும் கூறிவிடமுடியாது. செல்வநாயகம் அதற்கு முன்னோ பின்னோ அலட்டிக் கொண்டதற்கும் ஆதாரமில்லை. இந்த இஸ்லாமிஸ்தான் கதையை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அரசாங்க அமைச்சருமான அஷ்ரப் தனது முஸ்லிம் மாவட்டக் கோரிக்கைக்குச் சாதகமாகப் பாவிப்பது அவருடைய பார்வை இலங்கை முழுவதிலும் உள்ள முஸ்லிம்களது நலனை விடத் தனது அரசியல் செல்வாக்கை தக்கவைக்கும் தேவைகாரணமானதுதான். எனினும் தமிழ் தேசிய அரசியற் தலைமைகள் அன்று முதல் இன்று வரை முஸ்லிம்களது நிலை பற்றிய குறைந்த பட்ச கவனமும் காட்டவில்லை என்பது மட்டும் தெளிவாகிறது.

எவ்வாறாயினும் 1957 திருகோணமலை மாநாடு தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரை ஒரு பெரிய திருப்புமுனை. அதன் அரசியற் தலைமையை வடக்கிலும், கிழக்கிலும் உள்ள தமிழர்கள் அனைவரும் ஏற்கும் ஒருவாய்ப்பை அது உருவாக்கியது. முஸ்லிம்கள் கூட இத்தலைமையுடன் ஒத்துழைக்கக் கூடிய நிலையை அது ஏற்படுத்தியது. இவற்றைவிட முக்கியமாக, தமிழரசுக் கட்சியின் ஆதரவின் வலிமையும் தமிழ் மக்கள் சிங்கள மொழிச் சட்டத்தால் எவ்வளவு தூரம் ஆத்திரம் கொண்டிருந்தனர் என்பதையும் பண்டாரநாயக்காவுக்கு இது மேலும் வலியுறுத்தியது. தமிழ்மொழி உரிமைகள் பற்றி பண்டாரநாயக்கா சில நடவடிக்கைகளை எடுக்கவும் தமிழரசுக் கட்சித்தலைவர் செல்வநாயகத்துடன் ஒரு உடன்படிக்கைக்கு வரவும் தமிழரசுக் கட்சி மாநாடு ஒரு பெரும் ஊக்கியாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

> தமிழரசுக் கட்சியின் ஆதரவின் வலிமையும் தமிழ் மக்கள் சிங்கள மொழிச் சட்டத்தால் எவ்வளவு தூரம் ஆத்திரம் கொண்டிருந்தனர் என்பதையும் பண்டாரநாயக்காவுக்கு இது மேலும் வலியுறுத்தியது

தமிழரசுக்கட்சியின் அரசியல் வெகுஜன அரசியலல்ல. அதன் அரசியற் பாரம்பரியம் தமிழ்க் காங்கிரஸின் வழியிலானது. தமிழ் மக்களின் பிரச்சனையை ஒரு வெகுஜனக் கோணத்தில் நோக்கவும் தமது கோரிக்கைகளை இலங்கை பூராவிலும் இருந்த சிறுபான்மைத் தேசிய இனங்களது தேவைகளுடன் இணைப்பதற்கும் அவர்கள் ஆயத்தமாக இருக்கவில்லை. அவர்களைப் பொறுத்தவரை தமிழ்ச் சமுதாயத்தினுள் இருந்த சாதிய, வர்க்க ஏற்றத்தாழ்வுகள் அப்படியே இருக்கத் தமிழ் மொழி உரிமையும், தமிழ்ப் பிரதேசத்தின் சுயாட்சியையும் வென்றெடுப்பதே நோக்கமாக இருந்தது.

பண்டாரநாயக தமிழரசுக்கட்சியின் வலிமையைச் சரியாக மதிப்பிட்டாரோ இல்லையோ தமிழரசுத் தலைமை தனது பாராளுமன்ற அரசியல் வெற்றியைவிட வேறெதையும் தனது வலிமையின் அளவுகோலகக் காணவில்லை. தமிழரசுத் தலைவர்கள் சாத்வீகப் போராட்டம் பற்றியும் அறப்போர் பற்றியும் 1957ல் பேசியது அவர்கள் வேறு எந்தப் போராட்டத்தையும் நடாத்துவதற்கு ஆயத்தமில்லாமையாலேயேதான். தமிழரசுக் கட்சித் தலைமை வசதி படைத்த, படித்த உயர்–நடுத்தர வகுப்பினரது ஆதிக்கத்துக்குட் பட்டது. அது தேசிய இனப் பிரச்சனையை சமுதாய மேல்தட்டு வர்க்க நலன்கள் சார்பாகவே அணுகியதில் இரகசியமில்லை. மொழி பிரச்சனை குறிப்பாக யாழ்ப்பாணத்தையும் கொழும்பையும் சேர்ந்த தமிழ் அரச ஊழியர்கள் போன்றோரைப் பாதித்தது. யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் பொருளாதாரம் தென்னிலங்கையில் தொழில் வாய்ப்புக்களில் பெரிதும் தங்கியிருந்த நிலையில் அப்பிரச்சினையை முதன்மைப்படுத்துவதில் அரசியலில் ஆதாயமிருந்தது. அதே வேளை, தமிழ் மக்களுக்குச் சாதகமாகத் தென்னிலங்கையில் இருந்த சக்திகளை இனவாத முத்திரை குத்தி ஒதுக்குவதும் தமிழரசுக் கட்சியின் தேவையாக இருந்தது. இதை 1957க்குப் பின்பு தமிழரசுக்கட்சியின் அதிகாரபூர்வமற்ற பிரசார ஏடான சுதந்திரனை வாசித்தோர் கவனித்திருக்கலாம்.

திருகோணமலை மாநாடு நிறைவேற்றிய தீர்மானங்களும் அங்கு எழுப்பப்பட்ட கோஷங்களும் ஏற்படுத்திய நம்பிக்கை கரைவதற்கான நடைமுறைகளில் தமிழரசுக்கட்சி விரைவிலேயே இறங்கி விட்டது. தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் உண்மையான முக்கியத்துவம் தமிழரசுக் கட்சித் தலைமைக்கு விளங்கியதோ இல்லையோ அதை வெறும் சிங்களப் பேரினவாத அரசியலின் எழுச்சியாகக் காட்டுவதிலேயே அக்கட்சி கண்ணும், கருத்துமாய் இருந்தது.

தமிழ்க் காங்கிரஸ் தமிழ் நிலபடபிரபுத்துவத்தினதும் தரகு முதலாளித்துவத்தினதும் கட்சியாகத் தமிழ் மக்களிடையே கொஞ்சம் வலிமையுடன் தொடர்ந்து இருந்திருந்தால் தமிழரசுக்கட்சி ஒருவேளை ஒரு முற்போக்கான முதலாளியக் கட்சியாகத் தொடர்ந்திருக்கக்கூடும். தனிப்பெரும் தலைவர் என அழைக்கப்பட்ட ஜி. ஜி. பொன்னம்பலத்தின் கட்சியின் சரிவுக்குப் பின் தமிழரசுக் கட்சியே வடக்கிலும், கிழக்கிலும் இருந்த முக்கியமான ஒரே தமிழ்த் தேசியவாதக் கட்சியாகிப் படிப்படியாக ஏகாதிபத்தியத்தினதும், பிற்போக்கினதும் குரலிற் பேச ஒரு சில ஆண்டுகளே தேவைப்பட்டன.

நன்றி - நூலகத்திட்டம்



# சோமாலியாவாக மாறிவரும் வன்னி நிலப்பரப்பு

வன்னிப் பெரு நிலப்பரப்பு என்பது வவுனியா, மன்னார், முல்லைதீவு, கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களை உள்ளடக்கிய பெரும் விவசாயப் பிரதேசமாகும். காட்டு வளமும், குளத்து நீர் வளத்தையும் கொண்ட விவசாயம் வன்னி நிலப்பரப்பின் சிறப்பு அம்சமாகும். இப்பிரதேசத்தின் கிழக்கு மேற்குப் பகுதிகள் மீன்படி வளத்திற்கான கடற்கரைப் பிரதேசங்களை உள்ளடக்கிய பகுதியுமாகும். இப்பரந்த நிலப்பரப்பில் இரணைமடுக்குளம், வவுனிக்குளம், கட்டுக்க்குளம், முத்தையன்கட்டுக் குளம் போன்ற, பெரும் குளங்களும் நூற்றுக்கு மேற்பட்ட சிறுகுளங்களும் வன்னி விவசாயத்திற்கான நீரைத்தேக்கி வழங்கும் நீர்நிலை களாகும். மழைநீரைத் தேக்கி வைப்பதால் இருபோக நெல் விளைச்சலையும் உபஉணவுப் பயிர்களையும் வன்னி விவசாய மக்கள் நீண்டகாலமாகச் செய்து வந்துள்ளனர். காட்டுப்பிரதேசங்களில் தூர்ந்து போன குளங்களை புனரமைத்து குடியேற்றங்களை உருவாக்கி கடந்த அரைநூற்றாண்டு காலத்தில் விவசாய முயற்சிகள் விஸ்தரிக்கப்பட்டன. இந்நிலங்களில் விவசாயிகளின் கடின உழைப்பானது வன்னி நிலப்பரப்பை வளப்படுத்தியது. கிளிநொச்சி நகரம் தோற்றம் பெற்று விவசாய நகரமானது. வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி நகரங்கள் வன்னி பெரு நிலப்பரப்பின் நகரங்களாகியதுடன் நான்கு மாவட்டங்களும் அவற்றுக்குரிய நிர்வாகக் கட்டமைப்புகளும் பெற்றுக் கொண்டன.

ஆனால் இனப்பிரச்சனையும் அது உருவாக்கிய யுத்த சூழலும் படிப்படியாக வன்னிப் பெரு நிலப் பரப்பை சீர்குலையச் செய்து கொண்டது. அதன் விவசாயமும், மீன் பிடியும் முற்றாகவே நாசமடைவதை யுத்தம் ஏற்படுத்திக் கொண்டது. கடந்த பதினைந்து ஆண்டுகளில் ஒவ்வொரு அம்சம் அம்சமாக சீர் குலைவையும், அழிவையும் வன்னி சந்தித்துக் கொண்டது. வன்னியை ஊடறுத்துச் செல்லும் பிரதான போக்குவரத்துப் பாதையால் பஸ் லொறி மட்டுமன்றி புகைமிரதப் போக்குவரத்தும் தடைப் பட்டது. இத்தடை விவசாய மீன்பிடி உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியது. ராணுவ நடவடிக்கைகள் தரையிலும், ஆகாயத்திலும், கடலிலும் விஸ்தரிக்கப்பட்டமையால் சகல உற்பத்திகளும் அதற்கான முயற்சிகளும் சிதறடிக்கப்பட்டன. இறுதியாக 1995ம் ஆண்டின் ரிவிரச ராணுவ நடவடிக்கை மூலம் மூன்று லட்சம் வரையான குடாநாட்டு மக்கள் வன்னியில் தஞ்சமடைய நேரிட்டது. அத்துடன் குடாநாடு ராணுவப் பிடிக்குள் கொண்டுவரப்பட்டதுடன் வன்னி நிலப்பரப்பு முற்றுகை நிலைக்கு உட்படுத்தப்பட்டது. வவுனியா, மன்னார் நகரங்கள் தவிர்ந்த பெரும் பகுதி நாற்புறத்ததாலும் சுற்றி



வளைக்கப்பட்ட நிலைக்கு உள்ளாகியது. அதன் மூலம் வன்னி இராணுவக்கட்டுப்பாடு உள்ள பகுதி என்றும் இராணுவக் கட்டுப்பாடு அற்ற பகுதியும் என்று அழைக்கப்படலாயிற்று. இராணுவக் கட்டுப்பாடு அற்ற பகுதி என்பதன் மறு அர்த்தம் புலிகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டு பகுதி என்பதேயாகும்.

நான்கு மாவட்டங்களையும் சேர்ந்த வன்னி பெரு நிலப்பரப்பின் இன்றைய மொத்த சனத்தொகை ஆறு லட்சம் நூற்றியொன்பதினாயிரத்து நானூற்றி எழுபத்தாறு எனக் கூறப்படுகிறது. இத்தொகையில் மூன்று இலட்சத்து நாற்பத்தியோராயிரம் பேர் வரை அயல் மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்துள்ளோர் ஆவர். ஒரு லட்சம் இருபத்தி மூவாயிரம் பேர்வரை உள் மாவட்டங்களில் இடம் பெயர்ந்துள்ளனர். ஆக ஒரு லட்சம் தொண்ணூற்றி ஐயாயிரத்து ஐந்நூறுபேர் வரை இடம் பெயராது இருந்து வருகின்றனர். ஒட்டு மொத்தத்தில் வன்னி மக்களில் எழுபது வீதமான மக்கள் இடம் பெயர்ந்த நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். வவுனியா நலன்புரி நிலையங்கள் என்று அழைக்கப்படும் பதினொரு முகாம் களில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கடந்த ஒருவருட காலமாக இருந்து வருகிறார்கள். மடு முகாமில் பலவருடங்களாக மக்கள் அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள்.

கடந்த வருடம் மே மாதத்தில் வடக்கு நோக்கி 'ஜயசிக்குறு' என்னும் (வெற்றி நிச்சயம்) யுத்தம் ஆரம்பிக்கப் பட்டது. ஒருவருட காலத்தை எட்டியுள்ள இராணுவ நடவடிக்கையானது ஆயிரக்கணக்கான உயிர்களையும் பலகோடி பெறுமதியான சொத்துக் களையும் விழுங்கிய நிலையில் அரைவாசித் தூரத்தைத்தானும் தாண்டமுடியாத நிலையில் திண்டாடுகின்றது. கொடிய யுத்தத்தின் சகல முனைக் கோரங்களும் காட்டப்படு கின்றன. இவற்றின் பாதிப்புக்கள் நேரடியாகவே வன்னிப் பெருநிலப் பகுதியின் மக்களையே தாக்கியுள்ளன. யுத்தக் கொடுமையால் இடம்மாறி மக்கள் அலைந்து அலைந்து ஆற்றாத நிலைக்கு வந்துள்ளனர். இருப்பிட வசதிகள் இல்லை. மரங்களின் கீழேயே வாழ்க்கை நடைபெறுகிறது. உணவு கிடைக்காத நிலை. அரசாங்கம் சகல வழிகளிலும் வன்னி மக்களைப் பழி வாங்கிக் கொள்கிறது. புலிகளுடன் நிற்பவர்களுக்கு என்ன சாப்பாடு என்ன மருந்து அவர்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்றவாறு நடந்து கொள்கிறது. அண்மை வரை வன்னிப் பிரதேசத்தில் பட்டினியால் ஐம்பதுக்கு மேற்பட்டோர் இறந்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இத்தொகையை விட சிறுகச்சிறுக பட்டினியின் பக்க விளைவுகளால் நோய்களால் இறந்து வருவோரின் தொகை அதிகரித்துள் ளன. அங்கே அரிசி 40 ரூபா, கோ. மாவு 60 ரூபா சீனி 44 ரூபா மண்ணெண்ணை 110 ரூபா என விற்கப்படுகிறது. பத்துக் கிலோ மீற்றர் தூரத்துக்கு பயணச் செலவு 70 ரூபா ஆக உள்ளது. மரக்கறி வகைகள் 100 ரூபாவிற்கு மேல் சென்றுள்ளன. இவற்றை வாங்கும் சக்தி இன்றைய வன்னி மக்களிடம் கிடையவே கிடையாது.

அரசாங்கத்தின் நிவாரணம் ஆடிக்கொரு தடவை மார்கழிக்கு மறு தடவை என்ற நிலைதான். நான்கு மாவட்டங்களுக்கும் ஐம்பது அல்லது நூறு லொறி உணவு என்பது எந்த மூலைக்குப் போதுமானது. ஒரு சில லொறிகளை அனுப்பிவிட்டு ஒரு மாதம் வரை வானொலியும் தொடர்பு சாதனங்களும் பிரசாரம் செய்யும் நிலைதான் தொடர்கிற்து.

வன்னியின் சுகாதார மருத்துவ நிலை மகாமோசம். மலேரியாவின் கொடுமை வன்னியின் இன்றைய கொடுமைகளில் பிரதானமானதாகும். உடலை உறிஞ்சி உயிர் பறிக்கும் மலேரியாவை கட்டுப் படுத்த எவ்வித நடவடிக்கைகளும் இல்லை. வன்னியில் ஆதார வைத்திய சாலைத்தரத்திற்கு குறைந்தவைகளே உண்டு. கிளிநொச்சி வைத்தியசாலை இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளதால் அது மக்களுக் குரியதாக இல்லை. அக்கராயன், மல்லாவி, புதுக்குடியிருப்பு போன்ற வைத்தியசாலைகளில் மக்கள் நிரம்பியுள்ள போதிலும் அவற்றின் கட்டிடங்களோ முக்கியமான மருந்து வகைகளோ அங்கு இல்லை. ஒரு பனடோல் ரூபா 8ஆக விற்பனை செய்யப்படுகிறது என்றால் நிலைமை யை ஊகிக்க வேண்டியதுதான்.

வயது வந்தோரும், குழந்தைகளும், சிறுவர்களும், கர்ப்பிணித் தாய்மாரும் போதிய போசாக்கு உணவு இன்மை யால் பலவித நோய்களுக்கு உள்ளாகி உயிருக்கு போராடி வருகின்றனர். அவற்றுக்கான உரிய மருந்துகளும் அனுப்பி வைக்கப்படவில்லை. மழைக்கும் வெயிலுக்கும் இருப்பிட வசதியற்று மக்கள் படும் துன்பங்கள் வர்ணிக்க இயலாதவைகளாகும். நுளம்புப் பெருக்கத்தால் மலேரியா உட்பட பல்வேறு நோய்கள் பரவி வருகின்றன. வயிற்றோட்டம் நோய் பலரைப் பலரைப் பலிகொண்டு விட்டது. மூளைக்காய்ச்சல், செப்ரிமீசியாபோன்ற புதுப்புது நோய்கள் இளம் குருத்துக்களை காவு கொண்டு வருகின்றன. போசாக்கின்மையால் வயிறு பெருத்து நடப்பதற்கே சக்தியற்ற சிறுவர்களை வன்னி எங்கும் காணமுடிகிறது. அவர்களது எதிர்காலம் பெரிய கேள்விக்குறியாகி நிற்கிறது.

வெற்றி நிச்சயம் எனக்கூறி ராணுவம் முன்னேற முற்படுகிறது. செய் அல்லது செத்து மடி எனப் புலிகள் அந்த முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த நிற்கிறார்கள். அதனால் வன்னி நிலம் யுத்தத்தின் உச்சகட்ட நிலையை அடைந்துள்ளது. அதன் காரணமாக யுத்தக் கொடுமைகளின் ஒவ்வொரு விளைவையும் மக்களே அனுபவிக்க வேண்டியுள்ளது. ஷெல், விமானத் தாக்குதல்கள், உணவின்மை, பசி, பட்டினி, நோய்கள், மருந்தின்மை, இருப்பிட மின்மை, விவசாயம் பாழ்டைந் துள்ளமை போன்றவற்றால் வன்னி மக்கள் நாளாந்தம் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை சூடானிலும், சோமாலியாவிலும் ஏற்பட்ட பட்டினி மரணங்களையும் நமது நாட்டின் வன்னி மண்ணிலே காண நேர்ந்துள்ளது. இதுதான் ஐம்பது ஆண்டு காலச்சுதந்திரத்தின் பலாபலன். கொழும்பிலோ சுதந்திரப் பொன்விழாக் கொண்டாட்டம். வன்னியிலோ மற்றொரு சோமாலியா உருவாக்கப்பட்டுள்ளது. இது சமாதானத்திற்கான யுத்தம் இந் நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ள சுதந்திர தினப்பரிசு என்றே கூற வேண்டும். குறிப்பாகத் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் கொடுமைகளின் ஆகக்கூடியவற்றை இன்று வன்னிப் பெரு நிலப்பரப்பிலேயே காண முடிகின்றது.

அரசாங்கம் எந்தளவிற்கு அரசியல் தீர்வு பற்றிப் பேசிய போதிலும் வன்னியின் மக்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனும் பழிவாங்கும் வைராக்கியத்துடனுமே நடாத்தி வருகின்றது என்பதே உண்மை யாகும். இத்தகைய நடைமுறை பேரினவாத ராணுவ வெறி கொண்ட அணுகுமுறையாக இருக்க முடியுமே தவிர வன்னி மக்கள் இந்நாட்டின் பிரஜைகளில் ஒரு பகுதியினர் என்ற நிலையைக் கொண்டதாகக் காணப் படவில்லை. இது அரசியல் தீர்வு பற்றிப் பேசப்படுவதில் எவ்வளவிற்கு நியாயாம், நீதி, நேர்மை உள்ளது என்ற சந்தேகத்தை மேலும் வலுப் படுத்தியுள்ளது. ஆதலால் வன்னி பெருநிலப்பரப்பு மற்றொரு சோமாலியாவாக மேலும் மாற்ற மடைந்து மேன்மேலும் பட்டினிச்சாவு கள் அதிகரித்து பிணக்குவியல்கள் தோன்றுவதைத் தடுத்து நிறுத்த சகல முன் முயற்சிகளும் செய்யப் படுவது அவசியம். அதற்கான உறுதியான குரல்கள் அரசியல் முனையிலே எழுப்பப்படுவது இன்றைய அவசரத் தேவையாகும்.

# பட்டலந்தை வதைமுகாம் யூ.என்.பியின் கொலைக்களம்!

பட்டலந்தை சித்திரவதை முகாம் பற்றிய ஆணைக்குழு விசாரணைகள் முடிவடைந்து விட்டன. விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் டீ. ஜயவிக்கிரம பெரேராவும், மேல் நீதிமன்ற நீதிபதி நிமல் திசாநாயக்கவும் விசாரணை அறிக்கைகளை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயகவிடம் சமர்ப்பித் துள்ளனர்.

1988 இற்கு பிற்பட்ட காலத்தில் பேலியகொடையிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் பட்டலந்தையிலுள்ள உரக் கூட்டுத்தாபன வீடமைப்புத்திட்ட வீடுகள் சித்திரவதை முகாமாக இயங்கியதற்கு போதிய சாட்சியங்கள் இருக்கின்றன. ஜே. வி. பி. என்ற பெயரில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டதுடன் அங்கு எடுத்துச் செல்லப்பட்ட பலர் காணாமலும் போயுள்ளனர்.

சட்டபூர்வமாக இயங்கிய தடுப்பு முகாம்களில் ஒன்றாக பட்டலந்தை தடுப்பு முகாம் இருக்கவில்லை. அது சட்டவிரோதமானதாக ஐ. தே. க. கட்சி அரசியல்வாதிகளுக்கு தெரிந்த அவர்களின் சித்திரவதை முகாமாக கொலைக்களமாக இருந்துள்ளது.

சப்புகஸ்கந்தை பொலிஸ் நிலையத்தில் இயங்கிய விசேட குற்றப் பிரிவு பொலிஸாரும் எஸ். எஸ். பீ. டக்ளஸ் பீரிஸ், டி. ஐ. ஜி. மெரில் குணரட்ண, டி. ஐ. ஜி. ராஜா டயஸ், போன்ற உயர் பொலிஸ் அதிகாரிகளும் பட்டலந்தை சித்திரவதை முகாமை நடாத்தியுள்ளனர் என்று சாட்சியங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

இந்த தடுப்பு முகாம் பற்றி ஜே. ஆர். ஜயவர்த்தன, பிரேமதாஸ, ரஞ்சன் விஜேரட்ண போன்ற ஐ. தே. கட்சி தலைவர்களும், அன்றைய பிரதமரும், இன்றைய எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் அமைச்சர்களான (ஐ. தே. க.) ஜோசப் மைக்கல் பெரேரா, ஜோன் அமரதுங்க ஆகியோரும் தெரிந்திருந்தனர் என்றும் அவர்களினதும் ஏனைய ஐ. தே. கட்சி அரசியல்வாதிகளினதும் அனுசரணையுடனும் கட்டளையின் படியும் ஜே. வி. பி. என்ற பெயரில் கைது செய்யப்பட்டவர்கள் அங்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர். அங்கு எடுத்துச் செல்லப்பட்ட பலர் காணாமல் போயுள்ளனர். பலர் பலத்த காயங்களுடன் காணப்பட்டுள்ளனர்.

> ஐ. தே. கட்சி அரசியல்வாதிகளினதும் அனுசரணையுடனும் கட்டளையின் படியும் ஜே. வி. பி. என்ற பெயரில் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்

சட்டத்தரணி விஜயதாச லியனாராய்ச்சி அங்கு வைத்தே சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். பின்னர் மரணமடைந்துள்ளார்.

பட்டலந்தை சித்திரவதை முகாம் பற்றி விசாரித்த ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன் அமரதுங்க, ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் ஜே. வி. பிக்கு எதிரான மேற்படி ஒடுக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டதை நியாயப் படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விசாரணையை செய்த நீதிபதிகள் பட்டலந்தை முகாமில் இடம்பெற்ற சித்திரவதைகள், கொலைகள், காணாமல் போனமை போன்றவற்றை சட்டமோ, நீதியோ ஒருபோதும் ஏற்காது. அரசாங்கத்தின்

—11ம் பக்கம் பார்க்க்

நன்றி - நூலகத்திட்டம்




# பாரதிய ஜனதா ஆட்சி ஆளுவோர் யார்?

இந்தியத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியின் வெற்றியின் விளைவாக, இந்தியாவின் வரலாற்றில் முதற் தடவையாக, காங்கிரஸ் தொடர்பே அற்ற ஒருவர் பிரதமராகியுள்ளார். பாரதிய ஜனதா பற்றிய சந்தேகங்கள் பல இன்னமும் மக்கள் மத்தியில் உள்ளன. அக் கட்சி இன்னமும் காந்தியின் கொலையுடன் சம்பந்தப்பட்ட இந்து வெறியர்களின் இயக்கமான ஜனசங்கத்தின் அரசியல் வாரிசுதான் என்று கருத நியாயம் அதிகம். அதன் பின்னணியில் நின்று இயக்கும் சக்தி ஆர். எஸ். எஸ். (ராஷ்ட்ரீய ஸ்வம்ஸேவக் ஸமிதி) எனப்படும் இந்து தீவிரவாத அமைப்பு என்ற ஐயமும் இன்னமும் உள்ளது. பாபர் மசூதி இடிப்பில் பாரதிய கட்சியின் நிலைப்பாடு மட்டுமன்றி அதன் பங்கும் மிகவும் கேள்விக்குரியது. விஷ்வ ஹிந்து பரிஷத் எனப்படும் இந்து மதத் தீவிரவாதிகளுடன் பா. ஜ. க. தலைமைக்குத் தொடர்பு அதிகம். எனவே தான் பா. ஜ. க. தலைவர்களில் ஆர். எஸ். எஸ். தொடர்பு குறைந்தவரான வாஜ்பாஜியைக் காட்டியே நாடு முழுவதும் பிரசாரம் செய்யப்பட்டது. இந்து தத்துவக் கோட்பாடுகளைவிட அதிகமாக நிலையான ஆட்சியும் திறமையான நிர்வாகமும் என்ற கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன. அது மட்டுமன்றி, பிராமணர்களதும் பிற மேற்சாதியினரதும் ஆதிக்கம் மிகுந்த பா. ஜ. க. தனது அணியில் சில முஸ்லிம்களையும் பிற்படுத்தப்பட்ட சாதியினரையும் சேர்த்தது. இதன் மூலம் தனது இந்துத்துவப் படிமத்தைச் சிறிது மூடிமறைப்பதில் அது வெற்றியுங் கண்டது.

இந்து உயர்சாதி ஆதிக்கம், இந்தி மொழி ஆதிக்கம் என்பன மூலம் இந்தியாவில் அதிகாரத்தைப் பாராளுமன்றத் தேர்தலில் வெல்வது கடினம். ஆயினும் சாதி வெறியும் மத வெறியும் ஒரு வலிய இனவாதக் கட்சியைக் கட்டியெழுப்ப உதவ முடியும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய கட்சிகள் ஹிற்லரின் ஜேர்மனியிலும் இன்னும் பல நாடுகளிலும் தோன்றி வளர்ந்துள்ளன.

ஆயினும் அவர்களுடைய வர்க்க நலன்கள் வெகுவிரைவிலேயே அந்தக் குறுகிய இனஅடையாளத்திற்குள் உள்ள உழைக்கும் மக்களிடமிருந்து அவர்களைத் தனிமைப் படுத்தி விடும் என்பதும் உண்மை. எனவே இந்தியா போன்ற ஒரு நாட்டில் இந்துத்துவ அரசியல் பல வேறு தந்திரோபாயங்களைப் பயன்படுத்துகிறது. அதன் வலிமை கட்சிகளில் மட்டுமே தங்கி இருப்பதில்லை. அரசாங்கத்தின் பல வேறு நிறுவனங்களின் மூலமும் நிலவுடமைக்காரர்கள் மூலமும் முதலாளித்துவத்தின் ஒரு பகுதியினர் மூலமும் அது செயற்படுகின்றது. தேசியவாதக் கோஷங்களை அது




எழுப்பினாலும் சர்வதேச மூலதனத்துடன் அது சமரசம் செய்வதற்கு எதுவிதமான தடையும் இல்லை. நவ கொலனித்துவத்தின் வெற்றி குறுகிய தேசியவாதிகளுடன் சமரசம் செய்வதில் நவ கொலனித்துவத்திற்கு உள்ள ஆற்றலிலும் தங்கியுள்ளது. பாரதிய ஜனதாவின் புதிய 'சுதேசியம்' வெகுகாலம் நிலைக்கப் போவதில்லை. ஏனெனில், பாரதிய ஜனதாவின் வர்க்க நலன்கள் நவகொலனித்துவத்தின் சுரண்டலுக்கு பலியாகும் பரந்துபட்ட உழைக்கும் மக்களின் நலன்களுடன் ஒன்றுபட்டவையல்ல.

ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகத் திராவிட இயக்கங்களுடனும், சீக்கிய (அகாலி) தேசியவாதிகளுடனும் கைகோர்த்து நின்ற பாரதிய ஜனதா தலைமை சர்வதேச மட்டத்திலும் பல சமரசங்கட்கு ஆயத்தமாக இருக்கும் என்பதில் அதிகம் சந்தேகம் வேண்டியதில்லை. பன்னாட்டு நிறுவனங்களது ஆதிக்கத்தை முறியடிப்பதற்கு அபிவிருத்தி பற்றிய நமது பார்வையையும் மாற்ற வேண்டிய தேவை உள்ளது. பாரதிய ஜனதாவோ இந்தியாவின் பிரதேச மேலாதிக்க அரசியலில் மிகவும் உறுதியான ஒரு கட்சி, பாகிஸ்தானுடன் அதன் பகைமையும் சீன–இந்திய எல்லைத் தகராறு பற்றி அதன் நிலைப்பாடும் இந்தியாவின் ராணுவ விஸ்தரிப்பை அவசியமாக்குகின்றன.

பொருளாதார விருத்தி பற்றிய இந்திய முதலாளித்துவப் பார்வை நாட்டின் பின்தங்கிய சமுதாயங்களது நலன்கட்கு விரோதமானது. இந்திய முதலாளித்துவம் கொலனித்துவ ஆட்சிக்கு எதிரான போராட்டக் காலத்தில் தேசியவாதத் தன்மையை காட்டியது என்பது உண்மை. ஆயினும் இன்று அது பன்னாட்டு நிறுவனங்களதும் நவ கொலனித்துவத்தினதும் நலன்களுடன் தனது இருப்பை நெருக்கமாகப் பிணைத்து வருகிறது. காங்கிரஸ் ஆட்சியாளர்கள் கடந்த காலத்தில் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் GATT போன்ற அமைப்புகளுடன் செய்து வந்த சமரசம் இந்த முதலாளி வர்க்க நலன் சார்ந்ததே. பாரதிய ஜனதாவின் தேவைகள் இந்த அதிகார வர்க்க நலன்களுடன் முரண்பட முடியாது. மேலை நாடுகளில் பாரதிய ஜனதாவின் இந்துத்தவத்தைப் பற்றிக் காணப்பட்ட அதிருப்தி அடிப்படையில் நவகொலனித்துவ நலன்கள் சார்ந்தது. பாரதிய ஜனதா ஆட்சி இந்தியப் பெரு முதலாளிகளது நலன்களுக்கு எதிராக இயங்க முடியாது என்ற உண்மை தெளிவானதும் அந்த அதிருப்தியும் மறைந்த விடும்.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையில் பாரதிய ஜனதா குறுக்கிடும் என்ற சபலம் பலரிடமும் உள்ளது. அண்மையில் இலங்கையில் உள்ள இந்து மதவாதிகள் சிலர் இந்திய ஆட்சியாளர்கள் தமிழர்கள் சார்பாகக் குறுக்கிட வேண்டும் என விடுத்த வேண்டுகோள் இதனை வெளிப்படுத்தியது. இலங்கை அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் கடுமையாக முரண்படும் ஒரு சூழ்நிலையில் இந்திய அரசாங்கம் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையில் குறுக்கிடலாம் என்பது நாம் அனுபவ மூலம் கண்டது. ஆயினும் அக்குறுக்கீடு எவருடைய நன்மை கருதி நடந்தது என்பதையும் நாம் மறப்பதற்கில்லை. அமெரிக்க உலக மேலாத்திக்கத்தின் நலன்கட்கும் இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கத்தின் நலன்கட்கும் உள்ள முரண்பாட்டில் இலங்கையின் பங்கு என்ன என்பதையொட்டியே இலங்கை–இந்திய உறவு அமையும். இன்றைய இந்திய ஆளும் வர்க்கத்தின் நலன்கள் அமெரிக்காவுடன் பகைமையை வளர்க்கும் தேவையை உடையனவல்ல. சோவியத் – அமெரிக்க மேலாதிக்கப் போட்டியின் போது இந்தியாவால் சோவியத்



யூனியனது ஆதரவுடன் அமெரிக்க மேலாதிக்கத்திற்கு எதிராகச் சில காரியங்களைச் செய்ய முடிந்தது. அதற்கான தேவையும் அன்று இந்திய அதிகார வர்க்கத்துக்கு இருந்தது. பாரதிய ஜனதா அரசாங்கம் அமெரிக்க மேலாதிக்கத்திற்கு எதிராக உறுதியாக நிற்க வேண்டுமாயின் அது ஒரு புதிய சர்வதேச அணியைச் சார்ந்து இயங்க வேண்டும். அதற்கான சூழ்நிலை இன்று இல்லை.

பாரதிய ஜனதாவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள கட்சிகளைத் திருப்தி செய்வதற்கு வாஜ்பாயி எடுத்துள்ள முயற்சிகளின் விளைவாக அவரது அமைச்சரவையில் விகிதத்திற்கும் அதிகமான அளவில் சில்லரைக் கட்சியினர் பதவிகளைப் பெற்றுள்ளனர். இது பா. ஜ. கட்சிக்குள் அதிருப்திக்கு வழி கோலியுள்ளது. மறுபுறம் தமது குறுகிய நலன்கள் கருதி பா. ஜ. க. வுடன் கூட்டுச் சேர்ந்த அ.தி.மு.க. போன்ற கட்சிகளால் தாம் விரும்பியவற்றைச் சாதிக்க முடியுமா என்பது ஒரு பெரிய பிரச்சனை. பாரதிய ஜனதா ஆட்சியின் நிலைப்புக்கு ஆதாரமாக இன்று இருப்பது காங்கிரஸின் பலவீனமும் முன்னைய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் உறுப்பினர்களான தெலுங்கு தேசம், அஸோம் கண பரிஷத், (காஷ்மீரின்) தேசிய பேரவை போன்ற கட்சிகளது ஊசலாட்டமும் ஜனதா தளத்தின் பலவீனமும் புதிய பிளவுகளுமாகும்.

பாரதிய ஜனதா ஆட்சியின் வருகை உடனடியாக இந்திய அரசியற் சூழலில் மாற்றங்களைக் கொண்டு வராது என்பது உறுதி. ஆயினும் பாரதிய ஜனதாவின் பின்னணியில் இயங்கும் இந்து–இந்தி–சாதிய வெறியர்கள் பாரதிய ஜனதாவின் 'நாகரிகமான' இன்றை தோற்றம் வெகுகாலம் தொடர்வதற்கு அனுமதிப்பார்களா என்பது முக்கியமான கேள்வி. முஸ்லிம்களும் பிற்படுத்தப்பட்ட சாதியினரும் ஆதிவாசிகளும் இந்துத்துவ வெறியர்களின் தாக்குதலுக்கு இலக்காகும் போது அரசாங்கம் என்ன செய்யும் என்பது அடுத்த கேள்வி.

பாரதிய ஜனதாவைப் பொறுத்தளவில் அதன் உடனடியான கவலை தனது அரசியற் கூட்டாளிகளை எவ்வாறு தன்னுடன் இணைத்து வைத்துக் கொள்வது என்பதே. அதன் உண்மையான எஜமானர்கள் ஆர். எஸ். எஸ். வேண்டுவது பூரணமான இந்து–இந்தி, பார்ப்பானிய ஆதிக்கம் இந்த நடைமுறை முரண்பாடு என்றாவது வெடித்தெழாமல் இருக்க முடியாது. ஆயினும் இந்திய மக்களது நலன்களைப் பேண காங்கிரசின் வீழ்ச்சியோ பாரதிய ஜனதா ஆட்சியின் சரிவோ போதுமானவையல்ல.

இந்திய இடது சாரிகள் தமது அரசியற் பாதையை மீண்டும் புனராய்வு செய்ய வேண்டும். என்றையும் விட அதிகமாக இன்று ஒரு பரந்துபட்ட ஏகாதிபத்திய விரோத முற்போக்கு வெகுஜன முன்னணிக்கான தேவை உள்ளது. வெகுஜன அரசியலின் மூலமன்றி சாதி, மத, இன அடிப்படையிலான ஒடுக்கலையும், அந்நிய ஆதிக்கத்தையும் முறியடித்து நாட்டை சுபீட்சப் பாதையில் நடத்த முடியாது.

# கையசைக்கும் அம்மணி!

தமிழ் நாட்டு சினிமா அரசியலின் கதாநாயகியாக காட்சி தருகிறார் ஜெயலலிதா அம்மணி. அவரது கையசைவில் மத்திய அரசின் தலைவர்கள் எதைச் செய்வது எதனை மறுப்பது என்று திக்கு முக்காடுகிறார்கள். எப்படியும் ஆட்சி அமைக்க வேண்டும் என்ற சந்தர்ப்பவாதக் கூட்டின் விளைவு அதுவாகும். அம்மா ஜெயலலிதா நன்றாகவே காய்களை நகர்த்தி வருகிறார் என்று தமிழ் நாட்டில் உள்ள அவரது ரசிகர்களுக்கு கொண்டாட்டம்.

எல்லாம் தன்னையும் தனது பரிவாரங்களையும் சுற்றியுள்ள தளைகளை அறுத்தெறியும் நோக்கம் கொண்டதே தவிர தமிழ் நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியதல்ல. ஆட்சியில் இருந்தவர்களும் அரசியலில் கொடி கட்டிப் பறந்தவர்களும் ஊழல் கடலில் சுழியோடி மிதந்தவர்கள்தான். மாநில அளவிலும் சரி மத்தியிலும் சரி ஊழல் குற்றச்சாட்டுக்கள் இல்லாத தலைவர்களை இந்திய அரசியலிலே இன்று காண்பது அரிதாகி விட்டது. கம்யூனிஸ்ட்டுகள் இந்த நடைமுறையில் இருந்து விலகியே இதுவரை காணப்பட்டுள்ளனர். கேரளம், மேற்கு



வங்கம், திரிபுரா மாநில ஆட்சிகளில் உள்ள தலைவர்கள் மீது பெரும் ஊழல் எதுவும் சாட்டப்படவில்லை. இருப்பினும் அவர்களது பிள்ளைகள் உறவினர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்ற போதிலும் அவை பெரிதுபடவில்லை.

திராவிட இயக்கத் தலைவர்களின் ஆட்சிக்கால ஊழல்கள் கட்டுக்கட்டாக இருந்து வருகின்றன. நீதி மன்ற வழக்குகளாகவும் உள்ளன. ஜெயலலிதா ஆட்சியில் ஒரு ரூபா சம்பளம் பெற்று கோடி கோடியாகச் செலவு செய்தவர். வளர்ப்பு மகனது திருமணத்திற்கே நூறு கோடிவரை செலவிட்டார் என்று கூறப்படுகிறது. அப்படி ஒரு திருமணத்தை நடத்தியதில் என்ன தவறு இருக்கிறது என்று திருப்பிக் கேட்டவர் அதே அம்மணியார். ஊழல் மோசடிக்காக சிறைக்கூடம் வரை சென்று திரும்பிய இந்த செம்மல் தனது நடிப்புத் திறனை பாரதிய ஜனதா கட்சியுடன் இணைந்து காட்டிக் கொண்டார். அவருக்கு துணை நடிகர்களாக முன்னைய வில்லனான சுப்பிரமணிய சுவாமி, வை. கோபாலசுவாமி, இராமதாஸ் இணைந்து கொண்டனர். இன்று யாவரையும் அந்தந்த இடத்திலே இருத்திவிட்டு மத்திய அரசோடும், பிரதமரோடும் பனிப்போரிலே ஈடுபட்டு நிற்கிறார் அம்மணி. விரைவில் இது கெடுபிடி யுத்தமாக மாறிக்கொள்ளும் நிலையும் கொண்டுள்ளது.

இந்திய மக்களை தமிழ் நாட்டு மக்களை சுற்றி நிற்கும் 'பாரிய பிரச்சனைகள் ஒருபுறம் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அமெரிக்காவும் பன்னாட்டு கம்பனிகளும் இந்திய எல்லைகளுக்குள் பல வழிகளாலும் புகுந்து கொண்டு வருகின்றன. பலமான ஓர் இந்தியா என்பதையோ பலம் கொண்ட ஆசியா என்பதையோ ஏற்றுக் கொள்ளாத அமெரிக்கா அந்த முனைப்புகளை தனது இரும்புச் சப்பாத்தால் நசித்து விடவே முயல்கிறது. அந்த நோக்கங்களுக்காக இந்திய தலைவர்கள் மத்தியில் புகுந்த தனது திருவிளையாடல்களை செய்யவும் செய்கிறது. யாரின் பின்னால் யார் உள்ளனவோ தெரியாது. ஆனால் உழைக்கும் கோடானு கோடி இந்திய மக்கள் இவர்கள் அனைவராலும் வஞ்சிக்கப் படுகின்றமை தான் பயங்கரமானதாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு விடுதலைப் போராளியின் ஓய்வு

## பொல்பொட் பற்றிய உண்மையும் பொய்யும்

செங்கமெர்கள் (க்மெர்ரூஜ்) எனப்படும் கம்போடிய விடுதலை இயக்கத்தின் தலைவராக இருந்த பொல்பொட் அண்மையில் இறந்தார். அவரது தியாக வாழ்வும் அர்ப்பணிப்பும் கம்போடிய விடுதலைக்கு அவரது தலைமையின் பங்களிப்புப்பற்றி எந்தவொரு முதலாளிய, தாராளவாத ஏடுகளும் கவனிக்கவில்லை என்பதில் எவரும் வியப்படைய ஏதுமில்லை. முற்போக்குப் பேசுகிற சிலர்கூட பொல்பொட்டை ஹிட்லருடன் சேர்த்துப் பார்க்க முனைவதுதான் கவலைக்குரியது. முன்னாள் சோவியத் யூனியனின் எசமானர்களால் வெறுக்கப் பட்டவர்களில் பொல்பொட் முக்கியமான ஒருவர். 1960கள் தொட்டு தென்கிழக்கு ஆசியாவில் மக்கள் சீனத்தின் செல்வாக்கு வளராது தடுப்பதில் சோவியத் யூனியன் காட்டிய அக்கறை பெரிது. தலைவர் ஹோ சி மின் மறைந்த பின்பு வியற்னாமிய அரசியலில் சோவியத் சார்பு சக்திகளின் கை ஓங்கத் தொடங்கியது. 1975ல் வியற்னாம் விடுதலை வரை சீனாவுடனான உறவில் நிதானமாக நடந்த வியற்னாமிய தலைமை, சோவியத் நெருக்கு வாரத்தால் ஒரு பகையான போக்கை வளர்க்கத் தொடங்கியது. தென் வியற்னாமில் இருந்த சீன வம்சாவழியினரை வெளியேற்றும் நடவடிக்கையும் ஹைப்பொங் துறைமுகத்தில் சோவியத் கடற்படையின் கலங்களுக்கான தளவசதி வழங்கப்பட்டதும் பலரும் கவனித்த நிகழ்வுகள். ப்ரெஷ்னெவ் தலைமையின் கீழ் சோவியத் மேலாதிக்கப் போக்கு மும்முரமடைந்தது. இதன் ஒரு பகுதியாக இந்தியாவும் வியற்னாமும் பிராந்திய வல்லரசுகளாக தமது விஸ்தரிப்பு நடவடிக்கையில் ஈடுபடுமாறு சோவியத் தலைமையால் ஊக்குவிக்கப்பட்டன. இந்தப் பின்னணியிலேயே தான் 70கள், 80களில் காம்போஜத்தின் நிகழ்வுகளைக் கவனிக்க வேண்டும். பொல்பொட் தலைமையின் சரியான பகுதியையும் தவறான பகுதியையும் விளங்கிக் கொள்ள விரும்பினால் சோவியத், அமெரிக்கப் பெருவல்லரசுகளது உலகமேலாதிக்கப் போட்டியையும் வியற்னாமின் ஆக்கிரமிப்பையும் நாம் புறக்கணிக்க முடியாது.

கம்போடிய விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. இந்தோசீனம் என்ற பெயரில் பிரெஞ்சுக் கொலனித்துவத்தால் நிர்வாகம் செய்யப்பட்ட வியற்னாம், லாஹோஸ், கம்போடியா ஆகிய மூன்று நாடுகளும் விடுதலைப் போராட்டத்தை வழிநடத்திய இந்தோசீனக் கம்யூனிஸ்ட் கட்சி இம் மூன்று நாடுகளதும் தேசிய வரலாற்றை கணிப்பில் எடுத்தது. ஹோ சி மின் எடுத்த இந்த சரியான முடிவு மூன்று நாடுகளதும் விடுதலைப் போரை வலுப்படுத்தியது. ஆயினும் வியற்னாமிய மேலாதிக்கத்துக்காக கனவு கண்டவர்கள் லாவோசையும் கம்போடியாவையும் வியற்னாமின் ஆதிக்கத்திற்கு உட்படுத்த விரும்பினர். இது இன்றைய நெருக்கடிக்கு ஒரு காரணி. கம்போடியாவிலும் லாவோஸிலும் இருந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் வியட்நாமில் இருந்ததை விடப் பலவீனமானவை இதற்கான காரணங்கள் பல. கம்யூனிஸ்ட் கட்சிகள் போராட்ட நடைமுறை மூலமே வளர்கின்றன என்பது முக்கியமான காரணம்.



பொல்பொட்

பிரெஞ்சுக் கொலனித்துவம் முறியடிக்கப்பட்டதில் மூன்று நாடுகளதும் கம்யூனிஸ்ட் கட்சிகளதும் பங்கு முக்கியமானது. ஆயினும் 1970ல் கம்போடியாவில் சிஹானுக் ஆட்சியைக் கவிழ்த்து லொன்நொல் ஆட்சியை அமெரிக்க ஏகாதிபத்தியம் நிறுவிய பின்னரே கம்போடியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு வலிய அரசியற் சக்தியாக வளர்ந்தது. ஒரு சிறிய கட்சியாக இருந்த கம்போடிய கம்யூனிஸ்ட்டுகள் 1975ல் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படையினரையும் அமெரிக்க எடுபிடியான லொன்நொல் ஆட்சியையும் தூக்கியெறிந்த உன்னதமான க்மெர்ரூஜ் என்ற ஒரு படையாக ஐந்து ஆண்டுகளில் வளர்ந்தனர். இந்த வளர்ச்சியிலும் அமெரிக்காவின் ஆதிக்கத்தை முறியடித்ததிலும் க்மெர்ரூச்ின் தலைமைக்கும் பொல்பொட்டுக்கும் ஒரு பெரியபங்கு உண்டு.

அமெரிக்காவின் எடுபிடிகளது வீழ்ச்சியை அடுத்துக் கம்போடியா புதிய சமூக, பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியது. விவசாய நாடான கம்போடியாவின் உணவு உற்பத்தி அமெரிக்கக் குறுக்கீட்டின் விளைவாக 1970 முதல் 1975 வரையிலான காலத்தில் சரிவு கண்டது. அமெரிக்காவின் எடுபிடிகளது ஆட்சிக்கு எதிரான விடுதலைப் போரின் விளைவாகக் கிராமமக்கள் கம்போடியத் தலைநகர் நொம்பென்னுள் குவிந்தனர். 1975ல் கம்போடிய மக்கள் தொகையில் அரைவாசிப் பேராவது நொம்பென்னில் இருந்தனர். வியற்னாமில் தமது போரை வலிமைப்படுத்துவதற்காகக் கம்போடியாவை ஆக்கிரமித்த அமெரிக்காவுக்கு இது உடன்பாடான ஒன்றாகவே இருந்தது. ஏனெனில் கம்போடியா வழியாக வடவியற்னாமிலிருந்து அமெரிக்காவால் ஆக்கிரமிக்கப் பட்ட தென் வியற்னாமுக்கும் போய் வருவதற்கு வியற்னாம் தேசிய விடுதலை முன்னணிக்கு இருந்த வசதியை மறுக்கவே அமெரிக்கா கம்போடியாவை ஆக்கிரமித்தது. கம்போடியாவின் கிராமப் புறங்களிலிருந்து மக்கள் வெளியேறுவது அமெரிக்காவின் யுத்த நோக்கங்கட்கு இசைவானதே. இதன் விளைவாக நொம்பென்னில் இருந்த மக்களுக்கு வேண்டிய உணவு அமெரிக்காவால் இறக்குமதி செய்யப்பட்டது. அமெரிக்கப் படைகள் வெளியேற்றப்பட்ட பின்பு நொம்பென்னில் வாழ்ந்தவர்கட்கு உணவு வழங்குவது ஏறத்தாழ இயலாத காரியமாகி விட்டது. எனவே மறுபடியும் கம்போடிய விவசாயத்துக்கு உயிரூட்டுவதும் நொம்பென்னில் தஞ்சமடைந்தோரை மீளவும் சொந்த ஊர்கட்கு அனுப்புவதும் அவசியமாயிற்று. இதை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் இருந்தன. இதன் விளைவாகச் சில பாரிய தவறுகள் நேர்ந்தன.

நொம்பென் நாட்டின் அத்தியாவசிய உற்பத்திகட்கு அளித்த பங்கு அற்பமானது. கிராமங்களின் உற்பத்தியைத் தலைநகரம் நுகர்ந்தது. எனவே நொம்பென்னை வெறுமைப் படுத்துவதன் மூலம் விவசாய உற்பத்தி மீதான சுமை குறையும் என்று க்மெர்ரூஜ் கணித்தது. இதில் நியாயம் இருந்தாலும் முக்கியமான தவறுகள் பல இருந்தன. கிராம வாழ்க்கைக்குப் பழக்கப்படாதவர்களும், புத்திஜீவிகளும் க்மெர்ரூஜின் இக்கொள்கையை ஏற்க மாட்டார்கள் என்பதை க்மெர்ரூஜ் குறைவாகவே மதிப்பிட்டிருந்தது. க்மெர்ரூஜின் போராளிகளிற் பெரும்பாலானோர் வயதிற் குறைந்தவர்கள். நகர மக்களுடன் அவர்கட்கு பரிச்சயம் குறைவு. போராட்ட அனுபவத்தினளவுக்கு அவர்களிடம் அரசியல், சமூகப்பணிகளில் அனுபவம் இருக்கவில்லை. எனவே பல சந்தர்ப்பங்களில் கிராமங்கட்குப் போக விரும்பாதவர்களுடன் அவர்கள் மிகவும் கடுமையாகவே நடந்து கொண்டனர். ஐந்து வருடங்களாகப் புறக்கணிக்கப் பட்டுச் சீரழிந்து போன கிராமங்களில் விவசாயத்தை மீள நிறுவுவது க்மெர்ரூஜ் எதிர்பார்த்ததை விடப் பல வகையிலும் சிரமமானதாகவே இருந்தது. இதன் விளைவாகச் சில பகுதிகளில் மக்களுக்கும் க்மெர்ரூஜ் போராளிகட்கும் முரண்பாடுகள் வளர்ந்தன. இவை தவறாகக் கையாளப்பட்டதால் சில ஆயிரக்கணக்கானோர் தவறாகத் தண்டிக்கப்பட்டனர். மறுபுறம் உணவுப் பற்றாக்குறை காரணமாகவும் பல மரணங்கள் நேர்ந்தன. இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி வியற்னாம் கம்போடியாவுடன் இருந்த எல்லைத் தகராற்றைக் காரணங்காட்டி 1979ல் போர் தொடங்கியது. 'கிளி அலகு' (பரட்ஸ் பீக்) என்ற பகுதி வியற்னாமியப் படைகளால் கைப்பற்றப்பட்டது. இதன் விளைவான போரில் வியற்னாம் வெற்றி பெறுவதில் அதிக சிரமம் இருக்கவில்லை. ஏனெனில் வியற்னாமியப்படைகள் மிகவும் வலியன. கம்போடியா ஒரு உள்நாட்டு நெருக்கடிக்கு உள்ளாகி இருந்தது. க்மெர்ரூஜ் தலைமை தனது முன்னைய நேச சக்தியான இளவரசர் சிஹானுக்கையும் அவருக்குச் சார்பான ஃபுன்சிபெக் என்ற முடியாட்சிக் கட்சியினரையும் பகைத்துக் கொண்டிருந்தது.

நொம்பென்னைக் கைப்பற்றிய வியற்னாமியப் படைகள் அங்கு வியற்னாம் ஆட்சியாளர்கட்குச் சாதகமான ஒரு ஆட்சியை நிறுவினர். இந்த ஆட்சி முற்றிலும் வியற்னாமியப் படைகளது ஆதரவிலேயே தங்கியிருந்தது. எனவே கம்போடியாவின் மக்கள் புதியதொரு ஆக்கிரமிப்புச் சக்திக்கு எதிராகப் போராடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். வியற்னாமிய ஆக்கிரமிப்புக்கு சோவியத் யூனியனும் அதன் ஆதிக்கத்திற்குட்பட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் அதன் பொருளாதார உறவில் மிகவும் தங்கியிருந்த கியூபாவும் ஆதரித்ததில் வியப்பில்லை. இந்திய அரசாங்கமும் தனது விஸ்தரிப்புவாத நோக்கங்கட்குச் சோவியத் யூனியனது ஆதரவை நம்பியிருந்ததால் வியற்னாமிய ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தியது. இதன் விளைவாக அணிசேரா நாடுகள் மத்தியில் இந்தியாவின் செல்வாக்கு வீழ்ந்தது. மறுபுறம் அணிசேரா நாடுகளது சர்வதேச முக்கியத்துவம் சரிவடையவும் இது பங்களித்தது.

சோவியத் யூனியனின் ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்பும் இக்கால கட்டத்தின் போதே நிகழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கது. இப்பின்னணியில் வியற்னாமிய ஆக்கிரமிப்பையும் அவர்களது பொம்மை ஆட்சியையும் முறியடிப்பதற்காக ஒரு புதிய ஐக்கிய முன்னணி அவசியமாயிற்று. க்மெர்ரூஜ், இளவரசர் சிஹானுக் தலைமையிலான சக்திகளுடன் இணைந்து செயற்பட உடன்பட்டனர். அமெரிக்க ஏகாதிபத்தியம் வியற்னாமுடன் தனக்கு இருந்த பழைய பகைமையால் கம்போடியாவில்

—4ம் பக்கம் பார்க்க

## வாழ்த்தோ வாழ்த்து!

தைப்பொங்கல், வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற எந்தவொரு திருநாளையும் ஜனாதிபதி முதல் தொழிற்சங்கங்களின் சாதாரண பிரதிநிதிகளும் விட்டு வைப்பதாக இல்லை. எல்லோருமே நாட்டு மக்களை வாழ்த்த தொடங்கி விடுவார்கள். அவர்களின் வாழ்த்துச் செய்திகள் தினசரி பத்திரிகைகளின் பல பக்கங்களை ஆக்கிரமித்துக் கொள்வதுண்டு.

யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்று யுத்தத்தை நடத்தும் அரசாங்கத்தின் ஜனாதிபதியே கேட்டுக் கொள்வதுண்டு. தமிழ் மக்களின் உரிமைகளுக்கு குறுக்கே நிற்பவர்களே தமிழ் மக்களின் உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்று கோருவதுமுண்டு.

மலையக மக்களது உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்று சகல தொழிற்சங்கத் தலைவர்களும், பிரதிநிதிகளும் வாழ்த்துச் செய்தியாக தெரிவிப்பதுண்டு.

அவ்வாறு திருநாட்களில் வாழ்த்துச் செய்தி மூலம் விளம்பரம் தேடும் தலைவர்கள் அன்றுடனேயே தாம் கூறியவற்றை மறந்து விடுகிறார்கள். இத்தகைய ஏமாற்றுச் சம்பிரதாயங்களை ஒரு புறத்தில் ஒதுக்கி வைத்துவிட்டு உருப்படியாக ஏதாவது செய்ய ஜனாதிபதி, அமைச்சர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் என்போர் முன்வருவார்களா? வாழ்த்துச் செய்தியை கலர் கலராய் பிரசுரித்துக் கொள்ளும் பத்திரிகைகள் வேறு பயன் உள்ள விடயங்களை பிரசுரிக்குமா?

நன்றி - நூலகத்திட்டம்



# மலையகம் எதிர்நோக்கும் மாகாணசபைத் தேர்தல்

மாகாணசபை தேர்தலில் மலையக மக்களின் வாக்குகளை உறுதி செய்து கொள்வதில் ஐ. தே. கட்சியும், இ. தொ. காவும், அரசாங்கமும், ம. ம. மு. யும் மும்முரமாக செயற்பட்டு வருகின்றன. ஐ. தே. கட்சி அதனது பட்டியலில் கூடுதலான தமிழர்களை போடுவதாக தெரிவித்துள்ளது. அதற்கான சில மலையக தமிழர்களை பிடிப்பதிலும் வெற்றி கண்டுள்ளது.

நூறு கிராமசேவகர்களை நியமிப்பதென்றும், பிறப்பு, இறப்ப பதிவாளர்களை நியமிப்பதென்றும் அரசாங்கம் மீண்டும் வாக்குறுதி அளித்துள்ளது. தோட்டங்களிலிருந்து பத்துவீத லாபப்பங்குகளை தொழிலாளர்களுக்கு கொடுப்பதாகவும் அரசாங்கம் கூறுகிறது. இதன் மூலம் பொதுசன ஐக்கிய முன்னணியும் மலையக மக்களின் வாக்குகளை சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவது தெளிவாகிறது.

நூறு கிராம சேவகர் நியமனங்கள் சதாசிவம் எம். பியின் வேண்டுகோளினால் கிடைப்பதாக ஒரு பத்திரிகை செய்தி வெளியிட பிரதியமைச்சர் சந்திரசேகரின் வேண்டுகோளினாலேயே கிடைப்பதாக இன்னொரு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறு இ. தொ. கா., ம. ம. மு, ஐ. தே. கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி என்பனவும் போட்டி போட்டுக் கொண்டு மலையக மக்களுக்கு உரிமைகளை பெற்றுக் கொடுப்பதாக முன்வந்துள்ளன. இவையெல்லாமே மாகாணசபை தேர்தலை இலக்காக வைத்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளே. மலையக மக்கள் மீதான மேற்படி கட்சிகளின் அன்பு மிகவும் வயைறுக்கப்பட்ட காலத்திற்கே நிலைத்திருக்கும். தேர்தல் நடந்து முடிந்தவுடன் அன்பு மறைந்து விடும். மீண்டும் தேர்தல் வருவதற்கு முன் மீண்டும் ஒருமுறை முளைத்து மறைந்து விடும்.

மேற்படி கட்சிகளின் கையாலாகத் தனங்களை மலையக மக்கள் அறியாதவர்களல்லர். அக்கட்சிகளை எதிர்ப்பது என்ற ரீதியில் தொழிற்சங்க இயக்கங்களிலோ, அரசியல் இயக்கங்களிலோ மக்களின் பங்களிப்பு குறைந்துவிடலாகாது. மக்களின் பங்களிப்பு இருக்கின்ற போது மலையக மக்களின் வாழ்வில் விமோசனம் இல்லையென்றால் மக்களின் பங்களிப்பு இல்லாத நிலையில் என்ன நடக்கும். என்பதை சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை.

கைவிடப்பட்ட இன்றைய நிலையில் மலையக மக்கள் மாகாண சபை தேர்தலை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அத்தேர்தலில் பாரம்பரிய மலையக தொழிற்சங்கத் தலைமைகளையும், ஐ. தே. கட்சியையும், பொதுசன ஐக்கிய முன்னணியையும் மலையக மக்கள் ஏற்றுக் கொள்ளும் நிலைமையில் இல்லை. இது வரவேற்கக் கூடிய நிலைப்பாடெனினும் இனி என்ன செய்யப்பட வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பழைய தலைமைகளை நிராகரித்து தொழிலாளர் வர்க்க நலனை உயர்த்திப் பிடிக்கும் எல்லா மக்களையும், நட்பு சக்திகளையும் அரவணைக்கக் கூடிய தலைமையை கட்டி வளர்க்கும் நோக்கில் ஒவ்வொரு நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும் என்றே மலையக இளம் சமூகத்தினர் விரும்புகின்றனர். இந்த அடிப்படை யிலேயே மாகாணசபை தேர்தலும் அணுகப்பட வேண்டும். மலையக மக்களின் வாக்குகளை சிதறடித்து பிரயோசனமற்றதாக்கும் நடவடிக்கை களையோ, தன்முனைவாத நடவடிக்கைகளையோ எடுக்காது.

புதிய நிலைமைகளை கருத்தில் கொண்டு புதிய தலைமையின் கீழ் மக்களை அணிதிரட்டும் நடவடிக்கைகளே வரவேற்கத் தக்கன.

வாக்குகளை சிதறடிக்காமல், பிரயோசனமற்றதாக்காமல் இருக்க தமக்கு வாக்களிக்கும்படி பழைய தலைமைகள் யாவுமே கேட்கலாம். ஆனால் அவை பிழையான தளத்தில் நிற்பதனை மக்கள் நிராகரிப்பதை எடுத்துரைப்பதற்கு ஒரு சந்தர்ப்பமாக மாகாணசபை தேர்தலில் தமத வாக்குகளை சரியானபடி பயன்படுத்தல் வேண்டும்.

மக்கள் புதிய தலைமையின் கீழ் அணி திரள்வதை எடுத்துக் காட்டுவதற்காக சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் மலையகத்தில் புதிய த.லைமைகள் மகாண சபை தேர்தலில் போட்டியிட முன்வர வேண்டும். அத்தலைமை மக்களை ஐக்கியப்படுத்துவதையும் சரியான பாதையையும் அடிப்படை யாக ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டும். பழைய தலைமைகளினால் ஏற்படுத்தப்பட்ட நம்பிக்கையீனத்தை அகற்றுவனவாகவும் இருக்க வேண்டும்.

## அரசியல்...

(3ம் பக்க தொடர்ச்சி)

தொழிற்சங்கங்களை தெரிவு செய்ய முடியாதிருக்கின்றனர். ஏனெனில் இ.தொ.காவை விட சிறந்தது என்று ஒரு தொழிற்சங்கத்தை தெரிவ செய்வதும் தகுதியானதாக இல்லை. ஏறக்குறைய எல்லா தொழிற்சங்கங்களும் அண்ணனுக்கு தம்பியாகவே இருக்கின்றன.

இவ்வாறான நிலைமையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை நிலை நாட்ட தொழிற்சங்கங்கள் தேவை இல்லை என்ற அபிப்பிராயம் அரசசார்பற்ற நிறுவனங்களாலும், வேறு முதலாளித்துவ சக்திகளாலும், தனிநபர்வாத சக்திகளாலும் திட்டமிட்டு பரப்பப்படுகிறது.

இதைவிட அரசியல் ரீதியற்ற எந்தவொரு அரசியல் அடிப்படையுமில்லாத தொழிற்சங்கங்களை கட்டி வளர்க்க வேண்டுமென்ற அபிப்பிராயமும் சிலரால் பரப்பப்படுகிறது.

மலையகத்தின் இன்றைய நிலைமையை சரியாக பகுத்தாய்ந்து தொழிலாளா வர்க்கத்தின் உரிமைகளை நிலைநாட்டக்கூடிய மாற்று வசதிகளும் அவற்றை முன்னெடுக்க மூற்று தொழிற்சங்க நடைமுறைகளையும் முன்னெடக்க வேண்டும். தொழிலாள வர்க்க அரசியலை அடிப்படையாகக் கொண்டு அந்த அரசியல் மார்க்கததின் வழிகாட்டலின் கீழ் இயங்கக்கூடிய புதிய நிலைமைகளுக்கேற்ப வேலைத்திடங்களை கொண்ட வலுவான தொழிறசங்க இயக்கம் கட்டிவளர்க்கப்பட வேண்டும்.

இவ்விடயதில் தோழர் லெனின் குறிப்பிட்ட விடயங்கள் இன்றும் கூட பொருத்தமானவை. புரட்சியை அடிப்படை நோக்கமாக கொள்ளாத தொழிற்சங்கள் நேர்மையாக பூரணமாக தொழிலாள வர்க்கத்துக்கு சேவை செய்ய முடியாது. என்பது அவரின் கருத்துக்களின் சுருக்கமாகும்.

## பாப்பரசரிடம்...

(6ம் பக்க தொடர்ச்சி)

கஸ்டப்படுகின்ற பிரஜைகளை, விரல்விட்டு எண்ணக்கூடிய பாடசாலைக்கு செல்லாத சிறார்களை, வைத்தியசாலை வசதிகளைப் பெறமுடியாத மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான நோயாளிகளை உங்களுக்கு சமர்ப்பணம் செய்கிறோம். அத்துடன் உலக நாடுகளில் எங்குமே காணாத அளவுக்கு அதிகமான ஆசிரியர்களை, வைத்தியர்களை, வீரர்களை, சாதனையாளர்களை, உயர்ந்த அரசியல் சமூக கலாசாரத்தை புரட்சி என்ற நிரந்தர நம்பிக்கைகொண்ட அதிகமான எண்ணிக்கையினரை, மிகவும் சுதந்திரத்துடன் கௌரவமாக உங்களை வரவேற்பவர்களை, உங்களை காண்பதற்கென இங்கு வந்திருக்கும் லட்சோபலட்ச மக்களை உங்களுக்கு கியூபா சமர்ப்பணம் செய்கிறது.

உங்களின் வருகையை பாக்கியமாக கொண்ட கியூபா மக்களின் கொள்கையை வேறு எங்கும் அறிந்திருக்கமுடியாது. எல்லா வளங்களும், எல்லா ஒத்துழைப்புகளும் உலகம் முழுவதும் சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதே உங்களை காண்பதை பாக்கியமாகக் கொண்ட கியூப மக்களின் அசைக்க முடியாத கொள்கை என்பதை நீங்கள் அறிவீர்களாக!

சமகால உலக நிலைவரங்கள் பற்றி உங்களுக்கு இருப்பது போன்று எங்களுக்கும் கருத்துக்களும், அபிப்பிராயங்களும் இருக்கின்றன. அவை பற்றி எமது நோக்கிற்கும் உங்களது நோக்கிற்கும் நிறையவே வித்தியாசங்கள் இருக்கின்றன. எனினும் உங்களது கருத்துக்களை நீங்கள் பாதுபகாப்பதற்காக எடுக்கும் முயற்சிகளை நாம் மதிக்கிறோம்.

சமகால உலகில் மக்களிடையே நிலவும் ஏற்றத் தாழ்வுகளால் பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை, இனரீதியாக, நிறம்ரீதியாக, பால்ரீதியாக, வர்க்கரீதியாக மக்கள் அடக்கி ஒடுக்கப்படுவதை யுத்தம் என்ற பேரில் மக்கள் அநீதியாக கொன்று குவிக்கப்படுவதை, சக்தி படைத்த நாடுகள் சிறிய நாடுகளையும், மக்களை அடக்குவதையும், வெகுமதியான மக்களின் கலாசாரங்களையும், அபிவிருத்திகளையும் திட்டமிட்டு அழிப்பதையும் காண்பீர்கள். இளம் சந்ததியினரை போதைவஸ்து போன்ற தீய பழக்கங்களுக்கு அடிமையாக்குவதையும், விபசாரத்தில் ஈடுபடுத்துவதையும், சுயநலமிகுந்த வாழ்க்கை முறையை உலக மக்கள் மீது திணிப்பதையும் காண்பீர்கள்.

கடந்த சில தசாப்தங்கள் இயற்கை சூழல் வேகமாக அழிக்கப்பட்டு வருகிறது. பல கோடிக்கணக்கான மக்களின் வாழும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான அழிவுகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன.

இவையெல்லாம் உங்களின் கவனத்தை ஈர்த்திருக்க வேண்டும். ஈர்த்திருக்க காரணங்களும் இருக்கின்றன. விஞ்ஞானி கலிலியோ கலிலியின் விடயத்தில் கத்தோலிக்க திருச்சபை விட்ட தவறுகளையோ, புனித சிலுவைப் போரில் செய்யப்பட்ட கொலைகளையோ, அமெரிக்கர்களை (ஆதி அமெரிக்கர்) அடிபணிய வைக்க அளவிலாது இரத்தம் சிந்தப்பட்டதையோ குற்றங்கள் என்று இன்றுவரை யாரும் கூறாவிடினும் கடந்த காலத்தை அறிவுபூர்வமாகவும், விஞ்ஞான பூர்வமாகவும் திருச்சபை ஆராய வேண்டும் என்பதற்காக உங்களுக்கு போதிய சக்தியும் தைரியமும் கிடைக்கட்டும்.

நான் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு முன்பு ஒரு கத்தோலிக பாடசாலையில் படித்தேன். கத்தோலிக்கத்தை தவிர வேறெந்த நம்பிக்கைகளையோ, சமயங்க்ளையோ ஒருவர் ஒழுக விரும்பினால் அவர் அதனை ஒழுக முன்னர் அதிகபட்ச தண்டனைகளை பெறக்கடவர் என்று எனக்கு அங்கு போதிக்கப்பட்டது. பணம் படைத்த வசதி படைத்த பின்னணியிலிருந்து சென்றபடியால் என்னால் அக்கத்தோலிக்க பாடசாலையில் படிக்க முடிந்தது என்றே நம்புகிறேன். கறுப்பின மாணவர்களை அங்கு நான் காணவில்லை. அவர்கள் ஏன் அங்கு படிக்கவில்லை என்ற எனது கேள்விகளுக்கு இன்னும் வேறு விடைகள் எதுவும் கிடைக்கவில்லை. அதனால் கறுப்பின மாணவர்கள் அங்கு படிக்காததிற்கு காரணம் என்று நான் நினைத்ததற்கு மாறான பதிலும் இல்லை. அதனால் புரட்சி தேவை என்று நான் புரட்சியின் மீது வைத்த நம்பிக்கை சரியானது என்றே இன்னும் எனக்கு தோன்றுகிறது.

கியூபாவில் பல்வேறுபட்ட சமய நம்பிக்கை கொண்டவர்களுக்கு மட்டுமன்றி சமய நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் மனச்சாட்சி சுதந்திரம் உண்டு. அது அரசியல் யாப்பிலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இது புரட்சியின் விளைவாகும். இது கியூப மக்களிடையே சகோதரத்துவத்தை நிலைநாட்டும் அடிப்படையாக கொள்ளப்படுகிறது. இவ்வுறுதிப்பாட்டை நிலைநாட்ட வசதியீனங்கள் ஏற்பட்டிருந்தால் அதற்காக புரட்சியின் மீது குற்றம் சமத்தலாகாது.

கியூபாவில் கறுப்பர்கள், வெள்ளையர்கள் மட்டுமன்றி வேற்று நாட்டு மாணவர்களும் கூட சமமாக கல்வி கற்க முடிகிறது.

கியூபாவில் இவற்றையெல்லாம் சாதிக்க சுரண்டலை ஒழிக்க அடிமைத்தளையை அறுக்க பெண்ணடிமையை போக்க புரட்சியில் பல கத்தோலிக்க உயிர் நீத்துள்ளனர். என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன்.

இரத்த ஆறுகள் பெருக்கெடுத்து ஓடி, அழிவுகள் ஏற்பட்டு, உயிர்த்தியாகங்கள் செய்யப்பட்டுப் பின்னர் எங்களால் படைக்கப்பட்ட கியூப மண்ணிற்கு பூமியை ஆசீர்வதிப்பதாக கூறப்படும் பாப்பரசர் வருகை தந்திருப்பது. எமக்கு பெருமையை தருகிறது.

## பட்டலந்த...

(8ம் பக்க தொடர்ச்சி)

நன்மைக்காக கூட கைது செய்யப்படவோ, சித்திரவதை செய்யப்படவோ, காணாமல் ஆக்கப்படவோ முடியாது. அவற்றை நாம் ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது என்று தெரிவித்துள்ளனர்.

பட்டலந்தை கொலைகள் சித்திரவதைகளை செய்ய பாதாள உலக நபர்களான கோனவலை சுனில், களு போன்றவர்களை ஐ. தே. க. தலைவர்கள் பயன்படுத்தியுள்ளனர். இத்தடுப்பு முகாமிற்கு பொறுப்பாக இருந்த பொலிசார் ஐ. தே. கட்சி அரசியல்வாதிகளின் கட்டளையின் படியே கடமையாற்றியுள்ளனர்.

ஆயுதங்களை பயன்படுத்தி ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற முற்படும் ஒரு கட்சிக்கு எதிரான நடவடிக்கைகள் என்ற பேரில் எல்லாவிதமான ஆயுத நடவடிக்கைகளையும், ஆட்சியிலிருக்கும் கட்சி செய்தால், எல்லாவித சட்டவிரோதமான மனித உரிமைகளுக்கு மாறான நடவடிக்கைகயையும் செய்தால் அக்கட்சியின் ஆட்சி ஜனநாயக ஆட்சியாக இராது. அக்கட்சியின் ஆட்சியின் கீழ் 5 நட்சத்திர ஜனநாயகம் அல்ல ஒரு நட்சத்திர ஜனநாயகம் கூட இராது. அவற்றை நீதித்துறையோ சட்டத்துறையோ அனுமதிக்க முடியாது.

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக எவரும் சட்டவிரோதமாக கைது செய்யப்படவோ சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்படவோ முடியாது. எவரையும் சித்திரவதை செய்யவோ, கொலை செய்யவோ முடியாது எனவும் அந்த நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் கீழ் அவையெல்லாம் நடந்தேறிவிட்டன. பட்டலந்தை சித்திரவதை, கொலைகள் போன்ற குற்றச் செயல்களை புரிந்ததாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பல ஐ. தே. கட்சி அரசியல்வாதிகளுக்கு எதிராகவும், சில பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகவும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஏனர்ஸ்ட் பெரேராவுக்கு எதிராகவும் சாட்சியங்கள் இருப்பதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

இல்லாவிட்டால் அவர்கள் மீண்டும் நாட்டை ஆளவும் நிர்வகிக்கவும் அனுமதிக்கப்படுவார்களா?

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA



புதிய பூமி

PUTHIYAPOOMI புதியபூமி

சுற்று05 மே1998 பக்கம்12 விலை ரூபா10/= சுழற்சி19

# இ. தொ. கா. உளவு நிறுவனமா?

மலையகத்தில் கைது செய்யப்படும் இளைஞர்கள் பற்றிய விபரங்களை கேட்டால் பொலிசாருக்கு கொடுத்துதவ முடியும் என்று தொண்டமான் கூறியுள்ளார்.

அண்மைக்காலமாக அதிக எண்ணிக்கையில் மலையக இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். அதற்கு எதிரான வலுவான எதிர்ப்பை காட்ட விரும்பாத தொண்டமான் இந்த கைதுகளை தன்னுடைய இருப்புக்கும் சாதகமாக பயன படுத்திக் கொள்ள விரும்புகிறார் என்பது வெளிப்படையாக தெரிகிறது.

இ. தொ. கா. வின் தகவல்களின் அடிப்படையில் மலையக இளைஞர்களை கைது செய்யவும், தடுத்து வைக்கவும் பொலிசார் முற்பட்டால் கைதுகளிலும் தடுப்புக்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ள மலையக இளைஞர்கள் தொண்டமானிடமும் இ. தொ. கா விடமும் மண்டியிடுவார்கள் என்று தொண்டமான் எதிர்பார்க்கிறார். அத்துடன் இ. தொ. கா. விற்கும் தொண்டமானுக்கும் எதிரான இளைஞர்களை புலிகள் என்ற பேரில் கைதுசெய்து தடுத்து வைத்து பழிதீர்த்துக் கொள்ளவும் மனப்பால் குடிக்கிறார்.

அரசாங்க பாதுகாப்பு பிரிவின் ஒடுக்குதலுக்கு உட்படும் மலையக இளம் சமூகத்தின் பலவீனமான நிலைமையை தனக்கு சாதகமாக பயன்படுத்தி குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முற்படுகிறார் தொண்டமான். ஒடுக்கு முறைக்கு எதிராக செயற்படாமல் ஒடுக்குமுறை வடிவங்களாக கைதுகள் தடுப்புக காவல் போன்றவற்றை தனது இருப்புக்கு சாதகமாக பயன்படுத்தும் தலைமைகள் எவ்வாறு சமூக விடுதலைக்கு தலைமை தாங்க முடியும்?

இது இவ்வாறிருக்க தொண்டமானின் கோரிக்கையை ஏற்று பொலிசார் கைது செய்யப்படுபவர்கள் பற்றிய தகவல்களை இ. தொ. கா. விடமிருந்து பெற்றுக் கொண்டால் முழு மலையகமும் அமைதியிழந்துவிடும் என்பதை பாதுகாப்பு அமைச்சு உணரவேண்டும். சுதந்திரமாக இயங்குவதாக கூறப்படும் அரச தகவல் பிரிவுகளின் தகவல்களே முழுமையாக, சரியாக இருப்பதில்லை. இந்நிலைமைகளில் மலையக மக்களதும் இளைஞர்களினதும் கடுமையாக எதிர்ப்புக்குள்ளாகியிருக்கும் இ. தொ. கா. எவ்வாறு சரியான தகவல்களை வழங்க முடியும்?

மேலும் ஒரு தொழிற்சங்கம் தொழிலாளர்களுக்கு எதிராக தகவல்களை கொடுக்கும் ஐந்தாம் படையாக மாறுவதை அனுமதிக்கலாமா? தொழிற் சங்கம் அரசாங்கத்தின் பாதுகாப்பு பிரிவு செய்ய வேண்டிய வேலைகளை செய்ய அனுமதிக்கப்படலாமா?

தொண்டமான் குறிப்பிடுவது போல் மலையக இளைஞர்கள் பற்றிய தகவல்களை இ. தொ. கா. சேகரித்து வைத்திருப்பது உண்மையானால் இ. தொ. கா. ஒரு தொழிற்சங்கமாக இயங்குகிறதா? அல்லது ஒரு உளவு நிறுவனமாக இயங்குகிறதா? தகவல்களை சேகரித்து வைத் திருப்பின் அது உளவு நிறுவன மாகவே இருக்க முடியும். ஒரு தொழிற்சங்கம் உளவு சேவையாக இயங்குவதை அனுமதிக்க முடியுமா?

# புதிய இடதுசாரித் தலைமையை வலியுறுத்தும் மேதினம்

இலங்கை நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டுமானால் உடனடியாக மாற்று இடதுசாரி தலைமையை கட்டி வளர்க்க வேண்டுமென்பது புதிய இடதுசாரி முன்னணியை கட்டிவளர்ப்பதற்கான தயாரிப்பு கமிட்டி நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

கடந்த வாரம் கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட புதிய இடதுசாரி முன்னணியின் தயாரிப்பு கமிட்டியிலிருக்கும் பல இடதுசாரி கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் வலியுறுத்தினார்கள்.

புதிய ஜனநாயக கட்சியின் பொதுச்செயலாளர் சி. கா. செந்திவேல், நவசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன, தேசிய ஜனநாயக இயக்கத்தின் செயலாளர்களில் ஒருவரான பற்றிக் பெர்னாண்டோ, ஐக்கிய சோஷலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய, ஐக்கிய தொழிலாளர் சம்மேளனத்தைச் சேர்ந்த லினஸ் ஜயதிலக்க, முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர்களில் ஒருவரான மொகமட் அலி ஹுசைன் உட்பட பல தலைவர்கள் இப்பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

பதினொரு இடதுசாரி கட்சிகளினதும், அமைப்புகளினதும் ஐக்கியத்தினால் உருவாக்கப் படவுள்ள புதிய இடதுசாரி முன்னணியின் தயாரிப்பு கமிட்டியின் பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் எடுத்துரைக்கப்பட்டதாவது.

யுத்தத்தை நிறுத்தி தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை காண்பதாக வாக்குறுதி யளித்த பொ. ஐ. முன்னணி என்றுமில்லாதவாறு யுத்தத்தை உக்கிரமாக நடத்திக் கொண்டிருக்கிறது. தமிழ் மக்கள் மீது கைதுகள் போன்ற அடக்கு முறைகள் மிகவும் மோசமாக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. அரசியல் தீர்வுக்கான எந்தவொரு நேர்மையான நடவடிக்கையும் எடுக்கப்படுவதாக இல்லை.

தமிழ்த் தலைவர்கள் அழைப்பு விடுத்தால் இனப்பிரச்சினை விடயத்தில் அமெரிக்கா தலையிட விருப்பம் தெரிவித்துள்ளது. தமிழர் உரிமைப் போராட்டம் இவ்வாறன ஒரு தாழ்ந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

அதேவேளை இராணுவம் கைப்பற்றிய பகுதிகளில் இயல்பு வாழ்க்கை திரும்பவில்லை. இராணுவ அடக்கு முறைகளுக்கு முகம்கொடுப்பதே தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கையாகி விட்டது. யுத்தம் தொடாவதால் அகதிகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே இருக்கிறன்றன.

நாட்டின் வளங்கள் அனைத்தும் பல்தேசிய கம்பெனிகளுக்கு குறைந்த விலைக்கு விற்கப்பட்டு விடுகின்றன. தனியார்மயம் என்ற பேரில் அரசின் கட்டுப்பாட்டிலிருந்த கைத்தெழில்கள், நிறுவனங்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் இந்நாட்டின் தொழிலாளர் வர்க்கம் சொல்லொணா துயரங்களுக்கு உள்ளாகி வருகிறது.

விவசாயிகள் உற்பத்தி செய்த பொருட்களுக்கு போதிய விலைகள் இல்லை. இதனால் விவசாயிகள் கடனாளிகளாகி வருகின்றனர். விவசாய உற்பத்தியும் திட்டமிட்டு அழிக்கப்படுகிறது. உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் பிடிக்குள் சிக்கி எமது நாட்டின் தேசியப் பொருளாதாரம் அழிந்து கொண்டிருக்கிறது.

இந்த சூழ்நிலையில் நாட்டையும், மக்களையும் பேரளிவிலிருந்து காப்பாற்ற பொ. ஐ. ஐக்கிய முன்னணிக்கு எவ்வகையிலும் ஐ. தே. கட்சிக்கு மாற்றாக அமையமுடியாது. சந்திரிகாவுக்கு மாறாக ரணிலால் மாற்றுத் தலைமையை கொடுக்க முடியாது.

பாராளுமன்றத்துக்குள்ளிருக்கும் இடதுசாரிகள் அரசாங்கத்துடன் இருப்பதையே அவற்றின் பலமாக எண்ணுகின்றன. மக்களின் பிரச்சினைகள் பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை. யுத்தத்தை நடத்த அரசாங்கத்துக்கு பூரணமாக உதவுகின்றன. தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் போன்ற போராட்டங்களை அவர்கள் காட்டிக் கொடுத்து வருகின்றன.

ஜே. வி. பி. தனியார் மயத்தையும், திறந்த பொருளாதாரத்தையும் எதிர்ப்பதாக கூறுகிறது. ஏகாதிபத்தியத்துக்கு எதிராக போராட வேண்டுமென்று கூறுகிறது. ஆனால் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் இணைக்கப்பட வேண்டிய தமிழ் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்கவும், யுத்தத்தை நிறுத்தும்படி குரல்கொடுக்கவும் தயாரில்லை.

தினேஷ் குணவர்த்தன தலைமையிலான ம. ஜ. மு. அதனது பேரினவாத நிலைப்பாட்டினால் முழு மக்களுக்குமே தலைமை வகிக்க முடியாது.

யுத்தத்தை நிறுத்தி நாட்டின் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அந்த அடிப்படையில் தமிழ், மலையக, முஸ்லீம் மக்களின் உரிமைகளை நிலைநாட்ட மாற்று இடதுசாரி தலைமை அவசியம்.

அதனை வலியுறுத்தி புதிய இடதுசாரி முன்னணி மே தினத்தை டி. மெல் மைதானத்தில் நடத்துகின்றது.

வெகுவிரைவில் புதிய இடதுசாரி முன்னணி பிரகடனப்படுத்தும் அதற்கான தயாரிப்பு வேலைகள் முடியுந்தறுவாயில் உள்ளன என்றும் மேற்படி பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

## தொண்டமான்...

(1ம் பக்க தொடர்ச்சி)

சம்பள உயர்வு போராட்டத்தை அடுத்து இ.தொ.கா. மீது தொழிலாளர்கள் என்றுமில்லாதவாறு வெறுப்படைந்துள்ளனர். அந்த நியாயமான வெறுப்பை சமாளிக்க முடியாமலேயே தொண்டமான் மேற்படியெல்லாம் தொழிலாளர்களைப் பயமுறுத்துகிறார். அவ்வாறு பயமுறுத்தி தொழிலாளர்களை இ.தொ.காவுடன் தொடர்ந்தும் வைத்துக் கொள்ளலாம் என்று நம்புகிறார்.

இ.தொ.கா. என்ற அடிமை விலங்கை அறுத்தெறிய தொழிலாளர்கள் தயாராகிவிட்டதை பொறுத்துக்க கொள்ள முடியாமலேயே தொண்டமான் மேற்படி பொன் மொழிகளை உதிர்த்துள்ளார். இ.தொ.கா.வை அவரது கட்டுப் பாட்டில் வைத்தக் கொண்டும் தோட்டத் தொழிலாளர்களை அடிமையாக வைத்துக் கொண்டும் தொடர்ந்தும் தொழிற்சங்க வியாபாரத்தை செய்ய முடியாது என்பதை தொழிலாளர்கள் தெளிவாக எடுத்துக்கூறி வருவதனை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

தொழிலாள வர்க்க நலன்களை உயர்த்திப் பிடிக்காமல் தொழிலாளர்களை தொடர்ந்து ஏமாற்றி பிழைக்க நினைப்பவர்கள் எவருமே தொழிலாளர்களுடன் நின்று பிடிக்க முடியாது. அதற்கு தொண்டமானோ இ.தொ.கா வோ விதிவிலக்காக இருக்க முடியாது.

எனவே தொண்டமானின் மிரட்டல்களுக்கு பயந்து தொடர்ந்தும் தொண்டமானுக்கும், இ. தொ.கா வுக்கும் தோட்டத் தொழிலாளர்கள் அடிமைகளாக இருக்கப் போவதில்லை. அதனை தொழிலாளர்கள் உணர்த்தத் தொடங்கி விட்டனர்.

# வவுனியா நகரில் அமெரிக்காவிற்கு காணிவிலை போகிறது!

தமிழர் தாயகப் பிரதேசத்திலுள்ள வவுனியாவின் இதயப்பகுதியில் அமெரிக்க ஆதரவு ஜீ. ரீ. சற் நிறுவனத்துக்கு இரண்டு ஏக்கர் காணி அரசினால் விற்பனை செய்யப்பட இருக்கின்றது. இது வடக்கின் முதலாவது விற்பனை நடவடிக்கையாகும். அந்நியருக்கு அரச காணிகளை விற்கும் செயல் மேலும் வடக்கு நோக்கி விஷதரிக்கப்படுமென மக்கள் அஞ்சுகின்றனர். ஏனெனில் இவற்றின் ஊடாக அமெரிக்காவின் நச்சுத்தனமான செயல்பாடுகள் விரிவடைந்து கொள்ளும் என்பதே மேற்படி அச்சத்திற்கான காரணமாகும்.

எமது நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு கையளிக்கும் செயல் நடைபெற்று வருகின்றது. இது நாட்டை பொருளாதார ரீதியாக வளர்த்துக் செல்வதற்காகத்தான் என்று காரணமும் கூறப்படுகிறது.

நாட்டின் பாகங்களைக் கையளிக்கும் செயல் யுத்தம் காரணமாக வடக்கு கிழக்கில் நடைபெறவில்லை. ஆனால் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்ட வவுனியா நகரில் முக்கியமான பகுதி வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிற்கு கையளிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாக நம்பத்தகுந்த செய்திகள் கிடைக்கின்றன.

நமது நாடு உதவிக்கு வந்த அந்நியர்களின் ஆதிக்கத்தின் கீழ் பல நூற்றாண்டுகள் அடிமைப்பட்டு இருந்ததையும் அதன் தாக்கம் நாட்டின் இன்றும் நீங்காமல் இருப்பதும் யாவரும் அறிந்ததே.

வவுனியா பகுதியில் ஜீ. ரீ. சற் என்னும் தொண்டர் நிறுவனம் பணியாற்றி வருகிறது. இது ஒரு ஜேர்மனிய நிறுவனம் என்றும் கூறப்படுகிறது. இந்த நிறுவனத்திற்கு நகரின் மத்திய பகுதியில் நீதிமன்றம், பொதுச்சந்தை, நகரசபை, பொலிஸ்நிலையம், கச்சேரி, ஆஸ்பத்திரி என்பவற்றிற்கு மத்தியில் உள்ள சுமார் 2 ஏக்கர் காணி விற்பனை செய்வதற்காக ஆரம்ப நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக அறிய முடிகிறது. இக்காணியில் ஏற்கனவே இருக்கும் ச.தொ.ச. சந்தையின் ஒரு பகுதி, நீர்ப்பாசனத் திணைக்கள விடுதி, தனியார் வீடுகள், கடைகள் என்பனவும் சுவீகரிக்கப்பட இருப்பதாகவும் தெரிய வருகிறது.

தொண்டர் நிறுவனம்தானே போனால் போகட்டும் என்று இருந்துவிட முடியாது. வவுனியாவில் ஏராளமான காணிகள் இருக்கும் போது அந்தப்பகுதி எடுக்கப்பட இருப்பதன் மர்மம்தரன் என்ன?

இந்த நிறுவனம் உண்மையில் ஜேர்மனிய நிறுவனமா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. புத்தளம் பகுதியிலும் (ஜீ. ரீ. சற்) தொண்டாற்றி வருவதாகவும் இந்நிறுவனம் தம் நாட்டு நிறுவனம்தான் என அமெரிக்கத் தூதுவர் கூறியதாகவும் அறிய வருகின்றது.

# தபால் போராட்டம் முறியடிப்பு கண்டனத்துக்குரியது!

தபால் தந்தி சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்துவதில் இருந்த அக்கறையும் ஆர்வமும் தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை தீர்த்து வைப்பதில் அரசாங்கத்திற்கு அக்கறையோ, ஆர்வமோ இருக்கவில்லை. தபால் மா அதிபரான சோமா கொட்டகதெனியவை பதவி நீக்கக் கோரும் தபால் ஊழியர்களின் கோரிக்கையில் அரசாங்கம் விட்டுக் கொடுக்காமல் அவரை பாதுகாப்பதில் கூடிய கவனம் செலுத்துவது ஏன் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

ஒன்றரை மாதமாக நீடித்த தபால் ஊழியர்களின் சட்டப்படி வேலை நேரப் போராட்டத்தை உரிய நேரத்தில் ஜனாதிபதியோ, தபால் தந்தி அமைச்சரோ தீர்த்துவைக்க நேரடியாக தலையிடாமையே நிலைமையை சிக்கலாக்கியது. தபால் மா அதிபரின் எதேச்சையான அதிகாரப் போக்கிற்கு அரசாங்கம் துணை நிற்கின்ற மையைத்தான் காணமுடிகின்றது. தொழிலாளர்களின் கோரிக்கைகளை உதாசீனம் செய்து உயர் அதிகாரிகளைப் பாதுகாக்கும் போக்கு மிக வன்மையாகப் கண்டிக்கப் படவேண்டும். உரிய நேரத்தில் பிரச்சினையை தீர்க்காமல் வேலை நிறுத்தக்காரர்கள் மீது பொதுமக்களின் வெறுப்பை அதிகரிக்கச் செய்யும் வகையில் வேலை நிறுத்தம் இழு பட்டமைக்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கமே எடுக்க வேண்டும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவியேற்ற பிறகு அத்தியாவசிய சேவைகள் சட்டத்தை பாவித்து வேலை நிறுத்தத்தை முறியடித்து தொழிற்சங்கத் தலைவர்களை கைது செய்தமை இது முதற் தடவையல்ல. மின்சார ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தையும் இதேவிதத்திலேயே அடக்கியது.

இந்நடவடிக்கை சாதாரண ஜனநாயக, தொழிற்சங்க உரிமை களுக்கு எதிரான நடவடிக்கை ஆகும். அடிப்படையில் இது தொழிலாளர் விரோத நடவடிக்கை. இதனை இந்நாட்டின் தொழிலாளர்கள் எவ்வகையிலும் அங்கீகரிக்க மாட்டார்கள்.

ஆகவே அமெரிக்க பல்வேறு வடிவங்களில் தனது காலடியை நமது நாட்டில் ஆளமாகப் பதித்து வருகிறது. ஒருபுறம் இராணுவ ஒத்துழைப்பு, இன்னொருபுறம் மக்கள் மத்தியில் அரசு சார்பற்ற நிறுவனங்கள் மூலமான ஒருங்கிணைப்பு. இவைகளை உற்று நோக்கும் போது அமெரிக்காவின் ஆதிக்கம் வேர்விட்டு வருவதை மறுக்க முடியாதுள்ளது.

எல்லாவற்றையும் புலிகளுக்கு எதிராக என்ற கோசத்தின் கீழ் மறைத்து விட முடியாது. "தேசிய இனங்களுக்கு ஒரு அங்குலத்திலும் உரிமையில்லை அமெரிக்காவுக்கு எல்லா இடத்திலும் உரிமையுண்டு" என வளர்ந்து செல்வதை மக்கள் சும்மா பார்த்திருக்க முடியாது.

தமிழரின் சுய நிர்ணய உரிமைப் போராட்டம் பேரினவாதிகளுக்கு எதிராக மட்டுமன்றி ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் வளர்த்துச் செல்லப்பட வேண்டும் என்பதையே இச்செயல்கள் காட்டுகின்றன.

வெளியிடுபவர்: இளையதம்பி தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு லக்ஸ் கிராபிக் (பிரை) லிமிட், 98, விவேகானந்த மேடு கொழும்பு 13.